விலை
ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 114 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 06, சனிக்கிழமை 19.03.2016

கொவிசெத
அடுத்த ஐந்தரை கோடியின் உரிமையாளர் நீங்களே
இன்றைய சூப்பர் பரிசு
ரூபா. 58,446,004.80
நம்பிக்கையுடன் வாங்குங்கள்

# அரசியல் தீர்வுக்கு அமெரிக்க அழுத்தம்

## தூதுவரிடம் வலியுறுத்தினார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 19
இலங்கையின் புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து, இலங்கையிடம் அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.
அத்துடன், புதிய அரசு பதவிக்கு வந்த போது, சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது மற்றும் போர்க் குற்ற விசாரணை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணங்கிக் கொண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும்.
இலங்கைக்கான பக். 23



## வீரவன்சவுக்கு நேற்றுப் பிணை



கொழும்பு, மார்ச் 19
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகைக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில், நீதிமன்றத்தில் முன்னிலையான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பக். 04

## விமர்சனங்கள் எவை வந்தாலும் வீடுகளை அமைத்தே தீருவோம்

### மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 19
தமிழ் மக்களின் விருப்பத்துக்கு அமையவே வீட்டுத் திட்டத்தை நாம் முன்னெடுக்கின்றோம். 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 11 ஆயிரம் வீடுகள் மாத்திரமே இந்த ஆண்டு கட்டப்படும். அதனை நாம் நிச்சயம் முன்னெடுப்போம் என்று, அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
மீள்குடியேற்ற அமைச்சகத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே சுவாமிநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது, அவர் பக். 24

முச்சந்தி முரளி



உங்கட அரசியலுக்க யாழ்ப்பாண சனத்தையும் இழுக்கிறியள் பாத்தியளே.....

## மகிந்தவுடன் கூட்டு வைத்துள்ள சு.கவினர் கட்சியிலிருந்து 'அவுட்'

கொழும்பு, மார்ச் 19
கூட்டு எதிரணியின் கூட்டத்தில் பங்கேற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.
மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் கொழும்பில் நேற்று முன்தினம் அரசுக்கு எதிராகக் கூட்டத்தை நடத்தியிருந்தனர்.
இந்தக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ச உட்பட சிறிலங்கா சுதந்திரக் பக். 23

## கட்டுப்பாடிழந்தது ஹைஏஸ்; சுற்றுலா வந்த மூதாட்டி சாவு

### பிக்கு உள்ளிட்ட எண்மர் படுகாயம்
### கிளிநொச்சியில் அதிகாலை சம்பவம்



கிளிநொச்சி. மார்ச் 19
தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவந்த ஹைஏஸ் வாகனம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் உயிரிழந்ததுடன், பிக்கு உட்பட மேலும் எண்மர் படுகாயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி-கரடிப்போக்குச் சந்திக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.
சுற்றுலாவாகத் தென்னிலங்கையில் பக். 25

## மர்மமானமுறையில் வெடித்தது மின்மாற்றி

### மினுவாங்கொட பகுதியில்

கொழும்பு, மார்ச் 19
நாடு முழுவதும் மின்விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்ட பின்னர், மினுவாங்கொட பகுதியில் உள்ள உபமின் நிலையத்தில் மின்மாற்றி ஒன்று மர்மமான முறையில் வெடித்துத் தீப்பற்றி எரிந்துள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம், நேற்றுமுன்தினம்வரை மின் விநியோகத்தில் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டன.
நீர் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட பக். 23

## மேல் நீதிமன்றுக்கு விரைவில் வித்தியா படுகொலை வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 19
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமை குறித்த வழக்கு இன்னும் 2 மாதங்களில் மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள ஊர்காவற்றுறை நீதிமன்று, புங்குடுதீவில் உள்ள பாழடைந்த வீடுகளை இடித்தழிக்குமாறும், அங்கு பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்கவும் உத்தரவிட்டுள்ளது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம். றியால் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. பக். 23

## சர்வா கைது



விரிவான செய்தி பக். 05

## நல்லாட்சி அரசைக் கவிழ்க்க பொது எதிரணி சதி முயற்சி

### அதற்கே மின்தடை ஏற்படுத்துவதாக யாழ். வந்த கல்வி அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச் 19
நல்லாட்சிஅரசை, ஜனநாயக முறையிலும், மக்களுக்கு உண்மைகளைத் தெரிவித்தும், அவர்களின் போராட்டங்கள் மூலமாகவும்தான் கொண்டு வந்துள்ளோம்.ஆனால் இன்று பொது எதிரணியினர் தேங்காய் உடைத்தும், மின்சாரத்தைத் துண்டித்தும் அரசைத் திசை திருப்புவதற்கும் கவிழ்ப்பதற்கும் சதிகளைச் பக். 06

## கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டத்தில் யாழ். மக்களும் பங்கேற்றனராம்

### கூறுகின்றார் நாமல் ராஜபக்ச எம்.பி.



கொழும்பு, மார்ச் 19
அரசுக்கு எதிரான கூட்டு எதிரணியின் போராட்டத்தில் பங்கேற்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் மக்கள் பஸ்களில் வந்திருந்தனர். எமது போராட்டம் பெரியதொரு வெற்றி என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பக். 04

## ஏப்ரல் 4 இல் விவசாயிகளுக்கு நிதி

கொழும்பு, மார்ச் 19
விவசாயிகளுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி உரம் கொள்வனவு செய்வதற்கான நிதி வழங்கப்படும் என்று விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.
அன்றைய பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபையில் திடீர் மாற்றங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் மற்றும் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் ஆகியோரை இடமாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் அ.பத்திநாதனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளராக திருமதி கேதீஸ்வரன் விஜயலக்சுமியையும், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளராக பிரபாகரன் மூர்த்தியையும் நியமிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் அனுப்பியுள்ளார் என்று பிரதம செயலாளர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளராக வரதீஸ்வரன் தற்போது கடமையாற்றி வருகின்றார். வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளராக விஸ்பரூபன் பணியாற்றி வருகின்றார். இவர்கள் இருவரையுமே மாற்றம் செய்யுமாறு முதலமைச்சரால் கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு அமையவே, வடக்கு மாகாண ஆளுநர் இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு பிரதம செயலாளருக்குப் பணித்துள்ளார் என்று தெரியவருகின்றது. (5-101)

# யாழ்.கோட்டைக்குள் கலாசார நிலையம்

## நேற்றுத் திறந்தார் அமைச்சர் அகிலவிராஜ்

யாழ்ப்பாணம், மார்ச் 19



எமது மக்களிடம் எமது கலாசாரத்தை - விழுமியத்தை ஏற்படுத்தி அதனை ஆவணப்படுத்தவும், நெடுந்தீவில் உள்ள மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கவும், யாழ்.பல்கலைக்கழக அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தவும் இந்த வருடம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. - இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியரும், மத்திய கலாசார நிதியத்தின் வடமாகாண பணிப்பாளருமான புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

அதன் ஆரம்பமாக யாழ். ஒல்லாந்தர் கோட்டைக்குள் மத்திய கலாசார நிலையம் திறந்து வைக்கப்பட்டு, புதிய கட்டடம் அமைப்பதற்கான பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி வடமாகாண மத்திய கலாசார நிதியத்துக்கான அலுவலகம் ஒன்று நல்லூர் பண்டாரிக் குளத்தடியில் வீடு ஒன் றில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. கல்வி அமைச் சர் அகிலவிராஜ் காரியவசம் இவற்றைத் திறந்து வைத்தார்.

கல்வி அமைச்சு மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிலையம் ஆகிய இணைந்து இதனை முன்னெடுத்தன. பொலனறுவைப் பகுதியில் உள்ள தொல்பொருள் சின்னங்களையும் கோட்டைப் பகுதியில் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

36 வருடங்களுக்கு முன்னைய தொல்பொருள் அகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் செய்யப்படாத நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைக்கு அமைவாக நிரந்தரக் கட்டடம் அமைத்து, தொல்பொருள் சின்னங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகளில் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் கலந்துகொண்டார்.

எமது மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இவை திறந்து வைக்கப்படுகின்றன. வடமாகாண மத்திய கலாசார நிலையமாக ஒல்லாந்தர் கோட்டை எதிர்காலத்தில் மாறும். அதற்கான நடவடிக்கையாக அங்கு கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

இவற்றுடன் கல்வி அமைச்சர் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்று பாடசாலையில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயிலுக்கான புதிய வரவேற்பு வளைவைத் திறந்து வைத்தார். (ற-4,106)

# தாதிய உத்தியோகத்தர் கைதை கண்டித்து நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19



யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சம்பவத்துக்குக் காரணமானவர் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும், அவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் வைத்தியசாலையில் நேற்றுப் பரபரப்பான நிலை காணப்பட்டது.

வெளிநாட்டு வதிவிடத்தைக் கொண்ட ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 19 ஆம் இலக்க நோயாளர் விடுதிக்குக் கடந்த புதன்கிழமை சென்றுள்ளார். விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் ஒருவரைப் பார்வையிட அவர் சென்றிருந்தாலும், விடுதியிலுள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான நேரம் நிறைவடைந்த பின் அவர் சென்றுள்ளார் என்று தாதியர் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்துச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

குறித்த நபர் நோயாளர் விடுதிக்குள் வந்தபோது, தாதிய உத்தியோகத்தர், நோயாளர்களுக்கு மருந்து மாத்திரைகளை வழங்கிக் கொண்டிருந்துள்ளார். இதனால், அவரை வெளியே போகுமாறு தாதிய உத்தியோகத்தர் கூறியுள்ளார். எனினும் குறித்த நபர் கேட்கவில்லை

இதனால் அவரைக் கட்டாயப்படுத்தி வெளியே போகுமாறு, குறித்த தாதிய உத்தியோகத்தர் கூறியதாகவும் அதனைத் தொடர்ந்து அந்த நபர் விடுதியை விட்டுச் சென்றுவிட்டார்.

ஆனால் குறித்த நபர் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். அதில் தன்னை குறித்த தாதிய உத்தியோகத்தர் ஏசியதாகவும், கழுத்தில் பிடித்துத் தள்ளியுள்ளதாகவும் கூறி, குறித்த தாதிய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த தாதிய உத்தியோகத்தருக்கு அழைப்பை மேற்கொண்ட பொலிஸார், பொலிஸ் நிலையம் வருமாறு தெரிவித்துள்ளனர். இதனால் அந்த தாதிய உத்தியோகத்தர் பொலிஸ் நிலையம் சென்றதும், அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். பின்னர் அவர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என தாதியர் சங்கம் தெரிவித்தது.

இந்த நிலையில் தாதிய உத்தியோகத்தரின் கைது முறைகேடானது என்றும், பொலிஸார் இந்த விடயத்தில் அசண்டையீனமாகச் செயற்பட்டுள்ளனர் என்றும் தாதியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. வெளிநாட்டு வதிவிடத்தையுடையவர் என்று கூறும் குறித்த நபர் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் சங்கம் கோரிக்கை முன்வைத்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்த போராட்டத்தில் வைத்தியசாலையின் அனைத்துத் தொழிற்சங்கத்தினதும் ஆதரவு இருந்ததாகவும் பொலிஸார் உரிய நடவடிக்கையை இன்று முற்பகலுக்கு முன்னர் எடுக்கத் தவறின் அனைத்துத் தொழிற்சங்கத்தினரும் இணைந்து இன்று போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் சங்கம் தெரிவித்தது.

குறித்த சம்பவத்தில் தாதிய உத்தியோத்தர் மட்டுமன்றி, வெளிநாட்டு வதிவிடத்தையுடைவர் என்று கூறப்படும் நபரும் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-4-106)

# வாகன விபத்தால் குடி மக்கள் மகிழ்ச்சி

கொழும்பு, மார்ச் 19

விபத்து இடம்பெற்ற பகுதி சோகமயமாகவே காணப்படுவது வழமை. ஆனால், வழமைக்கு மாறாக ஹாலி எலயில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தால் அந்தப் பகுதி மக்கள் சந்தோசமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து பதுளைக்கு மதுபானம் ஏற்றிச் சென்ற கொள்கலன் ஹாலி எல பகுதியில் விபத்துக்குள்ளானது. விபத்தில் அதன் சாரதியும் உதவியாளரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் கூடிய மக்கள், கொள்கலனிலிருந்த மதுபானப் போத்தல்களை எடுத்துச் செல்வதில் மும்முரமாக ஈடுபட்டனர். பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. (5)

# மைத்திரி, ரணில் நாட்டை பிரிக்க சதி செய்கின்றனர்

## மகிந்த ஆதரவாளர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதி மைத்திரிபாலவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து தமது தாய் நாட்டை பிளவுபடுத்துவதற்கு சதி செய்து வருகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியினர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த போதே மகிந்த ஆதரவாளர் அதனை தெரிவித்தார்.

இலங்கை இரண்டு துண்டாக பிரிந்திருப்பதைப் போன்ற ஒரு வரைபட பதாகையை கையில் ஏந்தியவாறு, நாட்டை பிளவுபட நாம் இடம் கொடுக்க மாட்டோம். நாம் அனைவரும் மகிந்தவுடன் அணி திரண்டு ரணில் - மைத்திரி ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் எனவும் அந்த ஆதரவாளர் கூவினார்.

இல்லாவிடில், எதிர்காலச் சந்ததியினருக்கு உலக வரைபடத்தில் இலங்கையைக் காட்ட இலங்கை இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவை எம்.பியின் தாயார் காலமானார்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவின் தாயார், திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம் நேற்றுக் காலை சண்டிலிப்பாயில் காலமானார். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம் தனது 96 ஆவது வயதில் காலமானார்.

(த-வ-5)

**விற்பனைக்கு உண்டு**

தரமான சிமெந்துக் கற்கள்,
தூண்கள் மலிவு விலையில்!
யாழ்ப்பாணம், வவுனியா போன்ற
இடங்களுக்கும், ஒப்பந்த
நிறுவனங்களுக்கும்
விசேட சலுகை!

தொடர்புக்கு: 075 0391980

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 26.03.2016
Batch 2 : 30.03.2016
Batch 3 : 02.04.2016
Batch 4 : 04.04.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
077 036 5728
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

## வலிகாமம்
## தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

03. பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 21.03.2016 ஆம் திகதி தொடக்கம் 11.04.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 21.03.2016 தொடக்கம் 11.04.2016 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதியை 12.04.2016 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விவரத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் 12.04.2016 ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 30.03.2016 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | சோமராந்தோட்ட வீதி, உடுவில் | 2.05 | 03 மாதம் | M7/C8 | 20,000.00 |
| 2 | மத்தி வாசிகசாலை வீதி, ஏழாலை | 0.97 | 03 மாதம் | M7/C8 | 10,000.00 |
| 3 | பூவோடை மயான வீதி, இணுவில் | 3.98 | 03 மாதம் | M7/C8 | 40,000.00 |
| 4 | அறிவொளி சனசமூகநிலைய வீதி, குப்பிளான் | 1.81 | 03 மாதம் | M7/C8 | 18,000.00 |
| 5 | தாவடி பாடசாலை வீதி | 1.63 | 03 மாதம் | M7/C8 | 17,000.00 |
| 6 | உடுவில் மான்ஸ் வீதி, உடுவில் | 4.29 | 03 மாதம் | M7/C8 | 43,000.00 |
| 7 | மில் லேன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 3.12 | 03 மாதம் | M7/C8 | 32,000.00 |
| 8 | செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம் தெற்கு | 0.93 | 03 மாதம் | M7/C8 | 10,000.00 |
| 9 | தம்புவத்தை வீதி, ஏழாலை | 2.28 | 03 மாதம் | M7/C8 | 23,000.00 |
| 10 | கறுத்தான் வடலி மல்வம் ஒழுங்கை உடுவில் | 4.28 | 03 மாதம் | M7/C8 | 43,000.00 |
| 11 | இராமநாதன் முதலாம் குறுக்கு வீதி, சுன்னாகம் | 1.56 | 03 மாதம் | M7/C8 | 16,000.00 |

**தி.சுதர்சன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**சுன்னாகம்.**

இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?

திகதி 18.03.2016 | வெற்றி வாரம் 1956 | வர்ணம் சிவப்பு

08 24 28 44

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 29,02,500/-

2016-03-20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.

நியத்த ஜய

வெற்றி வாரம் : 446
திகதி : 18.03.2016
வர்ணம் : நீலம்

விஷேட வெற்றி இலக்கம்
1070

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 1,42,16,840/-

08 42 47 60 N

Web: www.dlb.lk
Tel: 011 4 824 824.

22.03.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

"கொடைக்கோ"
திருவாளர் E.S.P நாகரத்தினம்
அவர்கள்



மணிவிழா நாயகனை
நம் மண் பெற்ற
மன்னவனை மனதார
வாழ்த்துகின்றோம்.

முகாமைக் குழுவினரும்
பணியாளர்களும்
காரைமத்தி மேம்பாட்டுக் கழகம்
ஆலடி, காரைநகர்.



வீட்டில் இருந்தவாறே
மேலதிக வருமானத்தைப்
பெற்றுக் கொள்ள

**ஓர் அரிய சந்தர்ப்பம்....**

இலங்கை அரசின் சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் உருவாக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் இணைந்து சுற்றுலாப் பயணிகளை உங்கள் இல்லங்களில் தங்க வைத்து உணவளித்து உபசரிப்பதன் மூலம் மேலதிக வருமானம் பெற்றுக் கொள்ளும் ஓர் அரிய சந்தர்ப்பத்தினை உங்களுக்கு வழங்குகின்றோம். இத்திட்டம் தொடர்பான

(Home Stay Concept)

இலவசக் கருத்தரங்கில்
கலந்து கொண்டு முழு
விளக்கங்களையும் தெரிந்து
கொள்ளலாம்.

காலம்: 20.03.2016
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி
இடம் : யாழ்.பாடி
49 - 51 அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

021 222 6868

ஒழுங்கமைப்பு - அசோக்கவாடிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களுடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19
வாள்வெட்டு, அத்துமீறிப் பொருள்களைச் சூறையாடியமை, அத்துமீறி வீடு புகுந்தமை மற்றும் பொருள்களைச் சேதமாக்கியமை போன்ற பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாள் வெட்டுக் குழு ஒன்றைச் சேர்ந்தவர் என்று அடையாளப்படுத்தப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.
உடுவில் அம்பலவாணர் வீதியில் வைத்து, உடுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பல மாதங்களாக பொலிஸாரின் கண்களில் மண்தூவி மறைந்திருந்த குறித்த நபர், கோப்பாய், அச்சுவேலி மற்றும் சுன்னாகம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனச் சுன்னாகம் பொலிஸார் கூறினர்.
பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற பெரும் குற்றச் செயல்களான வீடு உடைப்பு, அத்துமீறி நுழைந்து பொருள்களைச் சேதமாக்கியமை தொடர்பில் பல முறைப்பாடுகள் அவருக்கு எதிராக உள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
வாள்வெட்டுக் குழு ஒன்றுடன் தொடர்புடையவர் என்று அவரை அடையாளப்படுத்தும் பொலிஸார், அச்சுவேலி சுதந்திரபுரம் பகுதி மற்றும் உரும்பிராய் பகுதிகளில் இடம் பெற்றவாள்வெட்டுச்சம்பவங்களுடன் அவர் தொடர்புடையவர் என முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். கைதான சந்தேக நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4,107)

## வீரவன்சவுக்கு

விமல் வீரவன்ச உள்ளிட்ட 7 பேரை, தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்ஹுசேன் பெப்ரவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தை எதிர்த்து தேசிய சுதந்திர முன்னணியினர் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர். இந்தப் போராட்டம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டது எனத்தெரிவித்து கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
அனுமதி பெற்றுக் கொள்ளாமல் போராட்டம் நடத்தியமை, பொது மக்களின் இயல்பு வாழ்வுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களை விமல் வீரவன்ச தரப்பினருக்கு எதிராக பொலிஸார் குற்றச்சாட்டாகச் சுமத்தியிருந்தனர்.
இந்த வழக்கு நேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, எதிர்வரும் 26 ஆம் திகதி கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்குமாறு விமல் வீரவன்ச தரப்பினருக்கு நீதிவான் அறிவுறுத்தினார். அத்துடன் வழக்கை ஜுன் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். மேலும், விமல் வீரவன்ச உள்ளிட்ட 7 பேரையும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவித்தார். (த-வ-5)

## கூட்டு எதிரணி

இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் கேட்டபோதே, நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசின் அநீதிகளுக்கு எதிராக மக்கள் எழுச்சி கொண்டுள்ளனர். விவசாயத்துறை. அடக்கப்பட்டுள்ளது. மானி யம் இல்லை. வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். எமது ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், இன்று வடக்கு, கிழக்கில் எந்தவித அபிவிருத்தியும் இல்லை.
அர்சமைப்பில் அந்தப் பகுதிகளுக்கு வழங்குவதாகக் கூறிய திருத்தங்களைக்கூடச் சரியாக வழங்க முடியவில்லை. வடக்கு முதலமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குவதாகவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகவும், அம்பாறைக்கு தனியான நிர்வாக அலகை வழங்குவதாகவும் கூறினர்.
ஆனால், எதையுமே செய்ய முடியாமல் போயுள்ளது. இதனால், அரசு தம்மை ஏமாற்றுகின்றது என்பதை உணர்ந்த மக்கள், அரசைக் கவிழ்க்க வீதிக்கு இறங்கியுள்ளனர். இந்தப் போராட்டத்தில், யாழ்ப்பாணத்திலிருந்தும் பஸ்களில் பெருமளவில் மக்கள் வந்து கலந்து கொண்டிருந்தனர்.
'கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளாரே?' என்று நாமல் ராஜபக்சவிடம் கேட்ட போது,
இல்லை. அப்படியொன்று எமக்கு இதுவரை (நேற்று வரை) அறிவிக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. அரசை மாற்றத்தான் நாம் செயற்படுகின்றோம். இதற்கு அரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எமக்கு உதவி செய்கின்றனர்-என்றார். (த-வ-5)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

விலைமனு கேள்விக்கான அழைப்பு
சுத்திகரிப்பு பொருள்கள், காகிதாதிகள் மற்றும் எழுதுகருவி உபகரணங்களுக்கான பெறுகைகள்

பிராந்திய பெறுகைக்குழு தகுதியான, தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைப் பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விவரம் | கேள்விப் பத்திர பணம் | வங்கி உத்தரவாத முறி |
|---|---|---|---|
| RDHS/ CLE- ME/ 2016 - 2017 | சுத்திகரிப்பு பொருள்களுக்கான வழங்கல் சேவை | 500.00 | 10,000.00 |
| RDHS/ STA- EQ/ 2016 - 2017 | காகிதாதிகள் மற்றும் எழுது கருவி உபகரணங்கள் | 500.00 | 10,000.00 |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 500/=உம், பாதுகாப்பு வைப்புப் பணம் ரூபா 10,000/=உம்.

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (**021 222 6253** அல்லது **021 222 2278 / 4557**. ext.20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேற்காட்டிய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **21.03.2016** தொடக்கம் **01.04.2016** வரையான காலப்பகுதியில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30மணி தவிர்ந்த நேரங்களில்) பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் **04.04.2016** ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பிராந்திய பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்**



# தண்ணீர் விநியோகம் இன்மையால் நோயாளர்களுக்கு அசௌகரியம்

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

சாவகச்சேரி, மார்ச் 19
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மாடி விடுதிகளில் கடந்த நான்கு நாள்களாக தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. அதனால் நோயாளர்கள் தமது தேவைகளுக்காகக் கீழிறங்கி வரவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நோயா ளர்களின் உறவினர்கள் இதுகுறித்து உதயன் பணிமனையில் முறையிட்டனர்.
வைத்தியசாலையில் உள்ள மூன்று மாடி விடுதிகளில் தினமும் 50க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த நான்கு நாள்களாக மாடிக்குக் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் தண்ணீர் தடைப்பட்டதால் நோயாளர்கள் வைத்தியசாலை வளாகத்தில் காணப்படும் கிணற்றிலிருந்தும், குழாய் களிலிருந்தும் தண்ணீர் எடுத்துச் செல்லவேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு கேட்டபோது-
வைத்தியசாலையில் உள்ள கிணறுகளில் 14 நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றை விட மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் மாடி விடுதிகள் மற்றும் வைத்தியர்கள் விடுதி, நிர்வாக அலகு போன்ற பகுதிகளுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்றது.
மாடி விடுதிகள், வைத்தியர் விடுதி, நிர்வாக அலகு ஆகியவற்றுக்கெனப் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த நான்கு நாள்களாக தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதனால் விடுதிகளில் உள்ள நோயாளர்களின் நலன் கருதி பணியாளர்கள் மூலம் குடிநீர் வாளிகளில் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.
வைத்தியசாலை வளாகக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பராமரிக்க அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டபோதிலும் அவர் இன்னமும் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை. அதனால் நிலைமை சீர்செய்யப்படாதுள்ளது.- என்றார். (ற-9)

# அஞ்சலக நடமாடும் சேவை

சாவகச்சேரி, மார்ச் 19
சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தின் முத்திரைகள் காட்சிப்படுத்தல் நிகழ்வும், அஞ்சலகத்தின் நடமாடும் சேவையும் இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
அஞ்சலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அஞ்சல் ஊழியர்கள் மூலம் மின் கட்டணம் தொலைபேசிக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம் பெறல் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியில் பணம் வைப்பிலிடல் போன்ற சேவைகளும் காலை 7 மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.
அஞ்சல் ஊழியர்கள் தினமும் அஞ்சல் விநியோகத்துக்குச் செல்லும் வேளையில் இவ்வாறான கட்டணங்கள் செலுத்த விரும்புவோர் உரிய கட்டணத்தை அஞ்சல் ஊழியரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.
பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நடமாடு;ம் சேவை மு.ப. 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடத்தப்பட்டு மாணவர்களுக்கு அஞ்சல் அடையாள அட்டை விநியோகமும் இடம்பெறும்.
சாவகச்சேரி அஞ்சல் அதிபர் த.இன்பராஜ் லெம்பேட் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.இரத்தினசிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முத்திரைக் காட்சிப்படுத்தல் கூடத் தைத் திறந்து வைப்பதுடன் ஏனைய நிகழ்வுகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகர்சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபை நாளை ஞாயிற்றுக்கிழமை யோகர் சுவாமிகளின் 52 ஆவது குருபூசை தின நிகழ்வைக் கொண்டாடவுள்ளது என்று சபையினர் தெரிவித்துள்ளனர்.
இந்த நிகழ்வானது யாழ். சிவதொண்டன் நிலையத்திலும், கொழும்புத்துறை சமாதிக் கோயிலிலும் நடைபெறவுள்ளன என்றும் குருபூசைக்கு முதல் மூன்று நாள்களும் சிவதொண்டன் நிலையத்தில் ஆச்சிரம வாழ்வு நாள்களாக கடைப்பிடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குருபூசை தினத்தன்று காலை 9.30 மணிக்கு சுவாமிகளது திருமேனிக்கு திவ்யமான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பூசை முடிவில் மகேஸ்வர பூசையும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-ரி)

◆◆◆

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிவயோகர் அறநெறிப் பாடசாலை நடத்தும் யோகர்சுவாமிகள் குருபூசை தின நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில், பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் மு.ப 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதில் சிறப்பு விருந்தினராக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலச்சுமி கலந்து கொள்ளவுள்ளார் (ற-ரி5-ரி)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
அச்சுவேலி பத்தமேனி சிறி கணேச சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறும் என சன சமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.
பிற்பகல் 1 .30 மணி வரை இடம்பெறவுள்ள இந்த மருத்துவமுகாமில் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கான இலவச வைத்திய சேவைகள், பரிசோதனைகள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-109-ரி5-ரி)

## கும்பாபிஷேகம்

வேலணை, மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில் அதி சுந்தரநாதன் ஸப்த தள ஸப்தகலச மகா இராஜ கோபுர மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.17 மணி முதல் மு.ப. 11.9 மணிவரை நடைபெறவுள்ளது.
21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.15 மணி முதல் கிரியாகால நிகழ்வுகள் ஆரம்பமாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# நள்ளிரவில் சர்வா கைது



யாழ்ப்பாணம், மார்ச் 19
ஐக்கியதேசிய கட்சியின் உறுப்பினர் சர்வா என்றழைக்கப்படும் குமாரு சர்வானந்தன் நேற்று நள்ளிரவு 11.55 மணியளவில் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அத்துடன், அவர் சட்ட விரோதமாகப் பயன்படுத்திய துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்யுமாறு வழங்கப்பட்ட உத்தரவுக்கமையவே தாம் அவரை நேற்றிரவு கைது செய்ததாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்தக பண்டார தெரிவித்தார்.
குறித்த கைதைத் தடுப்பதற்காக சர்வா, சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரனின் வழிகாட்டலில், சட்டத்தரணி வி. திருக்குமரனின் ஊடாக, சாவகச்சேரி நீதிமன்றில் முன் பிணை அனுமதி கோரிய மனுவை கடந்த புதன்கிழமை தாக்கல் செய்திருந்தார்.
எனினும் குறித்த மனுவை பரிசீலனை செய்வதற்காகவழக்கை நீதிமன்று ஒத்தி வைத்திருந்தது.
ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சர்வா, கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் களமிறக்கப்பட்டார்.
குறித்த தேர்தலின் போது, சக வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் தந்தையாருடன் மோதலில் ஈடுபட்டிருந் தார்.
எனினும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சர்வா, மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து தேர்தலில் களமிறங்கியிருந்தார்.
இதேவேளை, சர்வா இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-5)

## விலைப்பட்டியல் வைக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 19
வடமாகாண சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் அனைவரும் தமது கடைகளில் விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்துவதோடு காலாவதியான பொருள்களையும் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது எனவும் சம்மேளனத் தலைவர் க.நாகராசா தெரிவித்துள்ளார்.
விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தத் தவறும் பட்சத்தில் பாவனையாளர் அதிகார சபையால் ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

## மழலைகள் திறன் ஆய்வு

அச்சுவேலி, மார்ச் 19
அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா பாலர் முன்பள்ளி மழலைகளின் திறன் ஆய்வு விழா இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடை பெறவுள்ளது.
முன்பள்ளி அதிபர் திருமதி கண்ணகி புவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-11)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19
இளவாலை பிரான்பற்றில் கசிப்பு வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் என்றும், 750 மில்லி லீற்றர் கசிப்பை விற்பனை செய்யும் நோக்கோடு வைத்திருந்த போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதான சந்தேக நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-4,107)

**விற்பனைக்குண்டு**
முட்கிளுவை, பாற்கிளுவை
கதியால் விற்பனைக்குண்டு
T.P. 0774730722 , 0771040992

**வாடகைக்கு**
ஏழாலை தெற்கு மயிலங்காடு ஸ்ரீ முருகன் பாடசாலை மேற்கே நீளம் 27 அகலம் 11 உள்ள இரு கடைகள் வாடகைக்கு விடப்படும். (70038)(12.18.20)
077 984 8849

**வீடும் காணியும் விற்பனைக்கு**
மன்னார், மூர்வீதியில் (ஸ்ரேடியம் சந்தியில் இருந்து 25 மீற்றர் தூரம்) 6.5 பேர்ச் கொண்ட காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (64276)(12.16.20)
077 958 3343

**வான் விற்பனைக்கு**
52- xxxx Cell
Model Hiace (69985)(12.18.20)
077 207 3151

**வீடு விற்பனைக்கு**
யாழ். கொழும்புத்துறை சுவாமியார் வீதியை அண்மித்த (குருத்துவ மட பின்வீதி) வளன்புரத்தில் 1 பரப்பு 6 குளியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. (64276)(12.16.20)
077 614 6434

**காணி விற்பனைக்கு**
புத்தூரில் . புத்தூர் சந்தியில் இருந்து சுன்னாக றோட்டில் ஐந்தாவது காணி 6½ பரப்பு விற்பனைக்கு உண்டு. (68533)(12.19.20)
076 537 7328

**தவறிவிட்டது** 077 695 7580
முருகேசு இலட்சுமணன் ஆகிய நான் எனது சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை (500530200v) என்பனவற்றை [illegible] முன்பாக தவறவிட்டுள்ளேன். தயவு செய்து கண்டெடுத்தவர்கள் [illegible] தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (68533)(12.19.20)

**விற்பனைக்கு**
SVCA 2500W SVCA 1000V உள்ள
Automatic Volitage regulator
விற்பனைக்குண்டு.
077 984 8849

**ALTERATION OF NAME**
I SUBBIAH ANANDA RAJ OF NAVALY SOUTH HEREBY DECLARE THAT MY NAME APPEARS AS SUBBIAH ANDA RAJ IN MY BC NO 7363 AND BOTH NAMES ANANDA RAJ AND ANDA RAJ REFERS TO ME AND ME ALONE.

**வேலையாள் தேவை**
எமது அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த
புத்தகம் கட்டுநர்
பெண் பிள்ளைகள் தேவை.
பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது.
மேனகா பிறின்டேர்ஸ்
இல.367, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9468

**விற்பனைக்கு**
புறொயிலர் சுத்தம் செய்தது 1 Kg - 440/=
அத்தோடு கல்பேட், ஊர்ச்சேவல், பேரன்ஸ் என்பன தினமும் காலை 5 மணி முதல் இரவு 9மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
தாசன் பாம்
158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.



## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கலுக்கான நேர்த்திப் பொருள் வழங்கும் அடியவர்களுக்கான அறிவித்தல்



மேற்படி நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா 23.03.2016 புதன்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கான நேர்த்திப் பொருள் வழங்கும் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, புன்னை நீராவி, பிரமந்தனாறு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதி அடியவர்களிடம் 17.03.2016 தொடக்கம் ஆலயத்தில் இருந்து நேர்த்திப் பொருள் சேகரிக்கும் தொண்டர்கள் உழவு இயந்திரங்களில் வருகை தருகின்றனர் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம். நேர்த்திப் பொருள்கள் கொடுத்து எல்லாம் வல்ல நாகதம்பிரான் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**செல்லத்துரை பாலேந்திரா**



தோற்றம் 24.06.1931 உதிர்வு 15.03.2011

திதி: ஏகாதசி

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு
என்றும் மறையாது

சகோதரி(பத்மாவதி),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(70056)(11,18,20)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் யோசப் அன்ரன் ஜெயகுமார்**

(ஓய்வுநிலை கிராம சேவையாளர் நாரந்தனை(J/57)



தலைமகனாய் தூயவனாய்
துறவிபோல் வாழ்ந்தாய்
துயர் சுமந்து எமக்காய்
திரியாகி ஒளி தந்தாய்
விழிநீரால் விடைதந்தோம்
விண்ணுறையும் தெய்வத்துள்
வாழ்வாய்

இன்று (19.03.2016) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு நல்லூர் புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

**குடும்பத்தினர்.**

இல. 723 (425),
நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

மண்ணில் 23.02.1967 விண்ணில் 18.02.2016

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**இரஞ்சிதமலர் பரமேஸ்வரன்**

திதி: பூர்வபக்க ஏகாதசி
(19.03.2016)

தோற்றம் 1956. 04.28

மறைவு 2015.03.30

நாள்கள் மாதங்களாகி
ஆண்டுகள் பல ஆனாலும்
மாறாத உம் நினைவுகளை
மனதிலே வரைந்து கொண்டு
தீராத வேதனையில்
தினம் தினம் துடிக்கின்றோம்

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை

என்றும் உமது நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**பாமா விஜயஸ்ரீ**



தோற்றம் 09.10.1961

மறைவு 31.03.2015

திதி: 20.03.2016– துவாதசி

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகளும்
உன் கலகலப்பான சிரித்த முகமும்– எம்முடன்
என்றென்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கும்

நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

“முருகன் இல்லம்”,
அரசடி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

என்றும் அன்புடன்
கணவர் - மா.விஜயஸ்ரீ
(ஓய்வுநிலை மின்பொறியியலாளர் -
இ.மி.ச. வடமாகாணம்- யாழ்ப்பாணம்)
மகன் - வி.கஜானனன்.

**நல்லாட்சி**

செய்கின்றனர்.

இவ்வாறு நேற்று யாழ். வந்த கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

**மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் (சிவம்)**



சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் (சிவம்) 17.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கருணேஸ்வரியின் (கருணா) அன்புக் கணவரும், கல்பனா (நோர்வே), தனுசன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், தவராசாவின் (நோர்வே) மாமனும், யாகினி, யாதவன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, சிவப்பிரகாசம், சிவபாக்கியம் மற்றும் சிவபூசணி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(சி/29863)
(11,17,18,20)

தகவல்: மருமகன்
(ந.சிவனடியான்)

**077 668 2032**

ஆனால் நாங்கள் அதற்கு அஞ்சப் போவதில்லை. மக்கள் ஆதரவோடு எதிர்வரும் ஐந்து - பத்து வருடங்களுக்கு நாட்டை அபிவிருத்திப் பாதை நோக்கி முன்னெடுத்துச் செல்லத் தயாராகவே இருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் தொல்லியற் பிரிவும் மத்திய கலாசார நிதியமும் இணைந்து வடக்கு மாகாணத்தின் கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பதற்கான தொடக்க நிகழ்வுகள் நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இலங்கையர் என்ற வகையிலே சகலருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்பதுதான் எமது நோக்கம். எனவேதான் வட இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களைக் காக்கப் பெருமளவான நிதியை ஒதுக்கியுள்ளோம். இன்று வடக்குக்கான கலாசார மத்திய நிதியத்தை ஆரம்பித்து வைக்கின்றோம். எல்லா இனங்களுடைய மக்களுடைய கலாசார விழுமியங்களை, சின்னங்களைப் பாதுகாப்பதுதான் எமது நோக்கம்.

இளைஞர், யுவதிகளின் எதிர்காலம் கருதி 10 லட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளோம். அதற்கு முன்னோடியாக பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளோம். குறிப்பாகத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பாடநெறிகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இதேபோன்று பாடசாலைக் கல்வி முறையிலும் எதிர்வரும் ஐம்பது வருட காலத்தைக் கருத்திற் கொண்டு மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளோம். மாணவர்கள் புத்தகமும் கையுமாகத் திரியும் நிலையை மாற்றி அனைவரும் தொழில்நுட்பங்களின் கையாளுகையுடனும் மடிக்கணினிகளின் பயன்பாடுகளுடனும் வினைத்திறன் பெறுகின்ற முன்னேற்றத்தைக் காண விரும்புகிறோம். இந்த மாற்றத்தை நாங்கள் கொண்டு வராது போனால், எதிர்கால சந்ததிக்கு நாங்கள் செய்யும் அநீதியாகத்தான் அமையும்.

எமது நாட்டிலே பெரும்பகுதி கடல்வளம் தான். எனவே அந்த வளத்தைச் சரியான முறையிலே பயன்படுத்தி சுற்றுலாத்துறையையும் அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும்– என்றார்

நிகழ்வில் மத்திய கலாசார நிதியத்தின் கீழான பட்டதாரி பயிலுநர் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொல்லியல்துறை சார்ந்து பட்டக் கற்கை நெறியைப்பூர்த்திசெய்த பட்டதாரி மாணவர்கள் 8 பேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான நியமனம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 06 மாத கால நில அகழ்வு, தொல்பொருள் பாதுகாப்பு ஆகிய பயற்சி நடவடிக்கையின் கீழ், தற்காலிகமாக கலாசார மத்திய நியத்தின் பட்டதாரி பயிற்சியாளராக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தநிகழ்வுகளில் கல்வி அமைச்சின் செயலாளர், மத்திய கலாசார நிதியதின் பணிப்பாளர், அமைச்சின் அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் போராசிரியர்கள், துறைசார் விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(கு-வ-4-ரி2

## மரண அறிவித்தல்

திருமதி **மீனாம்பிகை கணேசலிங்கம்**

தோற்றம் 02 . 12 . 1940



மறைவு 18 . 03 . 2016

வேலணை மேற்கு வேலணை 6 ஆம் வட்டாரத்தை (சிற்பனை) பிறப்பிடமாகவும் 141/5 மங்கையற்கரசி ஒழுங்கை, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மீனாம்பிகை கணேசலிங்கம் நேற்று (18.03.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை - பூரணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லத்துரை கணேசலிங்கம் (ராச அம்மான்) அவர்களின் அன்பு மனைவியும் வேல்வேந்தன் (லண்டன்), அனுச்செல்வன் (கஷ்வினியா ஸ்ரோஸ் உரிமையாளர் நல்லூர்), சந்திரிகா (சுவிஸ்), சசிகலா(ஜேர்மனி), சிவகலா, றசிகலா(லண்டன்), ஜெயகாந்தன்(ஜெய் நியூஸ்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறிராதா, கௌசலா (ஆசிரியை- யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்), றெட்ணேஸ்வரன், சிவகுமார், செல்வானந்தன், ஸ்ரீபதி, பத்மசிறி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபினாஸ், ஆகாஷ், ஆதேஸ், கஷ்வினியா, அரவிந்தன், அனோஜன், அருந்தா, இனியா, சகானா, ஜகினி, ஜாதவி, கேசகி, சுவேதா, வருணன், சுஜிதா, சஜிதா, சகிதா, ஜெய், அபிஷா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ராசலட்சுமி, புனிதவதி, சாந்தலிங்கம் மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சபானாதன்(செவ்வந்தி), அருட்சிவம், ஏரம்பிள்ளை மற்றும் அம்பலவாணர், செல்வநாயகி, ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்மணல்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**021 721 0301**
மகன் (செல்வன்) 077 794 1105
மருமகன்- (கிளி) 077 674 5874

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளான் செய்கையில் ஈடுபட பணம் கொடுத்து ஏமாறாதீர்கள்

## யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் இலவச பயிற்சிகள், ஊக்குவிப்பு வழங்குகிறது

அச்சுவேலி, மார்ச் 19

காளான் செய்கையில் ஈடுபடுவதற்குத் தனியாரிடம் கட்டணம் செலுத்திப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் இலவசமாக பயிற்சிகளைவழங்கிஊக்குவிப்பு உதவிகளும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. காளான் செய்கையில் ஈடுபடவிரும்புபவர்கள் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் அலுவலக நேரங்களில் பதிவு செய்யலாம் அல்லது தமது பிரதேச விவசாயப் போதனாசியரிடம் பதிவு செய்து இலவச பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.- இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

காளான் செய்கையில் ஈடுபட விரும்புபவர்கள் 30 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறும், காளான் செய்கை அறுவடை மூலம் 30 ஆயிரம் ரூபாவை திரும்பிக் கிடைக்கச் செய்வதோடு, மேலதிக வருமானமும் கிடைக்கச் செய்ய முடியும் என சில தனியார் நிறுவனங்கள் பதிவுகளை மேற்கொள்கின்றன என்றும் யாழ்.மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வாறு கட்டணம்செலுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே விவசாயப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது-

> "காளான் குறைந்த முதலீட்டுடன் கூடிய வருமானத்தை பெறக்கூடிய தொழில் முயற்சி. இதனை செய்வதற்குப் பெரிய இடவசதி தேவையில்லை. காளான் செய்கை தொடர்பாகத் தனியார் துறையில் சிக்குண்டு ஏமாறவேண்டிய அவசியம் இல்லை."

காளான் குறைந்தமுதலீட்டுடன் கூடிய வருமானத்தை பெறக்கூடிய தொழில் முயற்சி. இதனைச்செய்வதற்கு பெரிய இடவசதி தேவையில்லை. காளான் செய்கை தொடர்பாகத் தனியார் துறையில் சிக்குண்டு ஏமாற வேண்டிய அவசியம் இல்லை. காளான் செய்கையில் ஈடுபட விரும்புவோருக்கு விவசாயத் திணைக்களத்தால் மதிய உணவு மற்றும் சிற்றுண்டி வசதிகளுடன் இலவசமாக வழங்கப்படும்பயிற்சிகள்மூலம் பொலநறுவை, அநுராதபுரம் உட்பட வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பலர் பயிற்சி பெற்று பயன் பெறுகின்றனர். தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிபெறவிரும்புபவர்கள் விவசாயத் திணைக்களத்தில் நேரடியாகவோ அல்லது 02122 22174 இலக்கத் தொலைபேசி மூலமோ அல்லது தமது பிரதேச விவசாய போதனாசிரியர் மூலமோ பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.- என்றார். (ற-11)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என்று சனசமூக நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

## மகளிர் தினத்தை முன்னிட்டு கருத்தரங்கும் உடற்பயிற்சியும்

சாவகச்சேரி, மார்ச் 19

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு,சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், சங்க அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கும், உடற் பயிற்சி தொடர்பான பயிற்சிகளும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றன.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நீதிமன்ற அபிவிருத்தி அலுவலர், 'உணவு பராமரிப்பு மற்றும் பெண்களின் பாதுகாப்பும் பிள்ளைகள் வளர்ப்பும்' என்னும்தலைப்பில்கருத்துரைவழங்கினார். மருத்துவர் திருமதி ஆ.விஜயகுமார் உடற்பயிற்சிகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கினார். (த-ஜ-9)

## மாணவர்களுக்கான சத்து மாத்திரையை அதிபர்கள் தொடர்ந்து வழங்க வேண்டும்

### வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்து

சாவகச்சேரி, மார்ச் 19

சுகாதார அமைச்சால் பாடசாலை மாணவர்களுக்கென வழங்கப்பட்ட சத்து மாத்திரைகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் எதுவும் எமக்கோ பாடசாலைகளுக்கோ விடுக்கப்படவில்லை. எனவே அதிபர்கள் எவராவது குறித்த மாத்திரைகளை வழங்காது இருந்தால் அவற்றைத் தொடர்ந்து வழங்குங்கள் - இவ்வாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சால் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் போசாக்குக் குறைபாட்டுடன் பெருமளவுமாணவர்கள்காணப்படுவதால் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு தினமும் வழங்குவதற்காக பல்வேறு சத்து மாத்திரைகளை வழங்கியுள்ளனர்.

ஆனால்பாடசாலை அதிபர்கள் அவற்றை மாணவர்களுக்கு வழங்காமல் அலுமாரிகளில் பாதுகாத்து வைத்துள்ளனர் என்று பெற்றோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பாக பாடசாலைகளின் அதிபர்கள் சிலரிடம் வினவியபோது தென் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சத்து மாத்திரைகள் வழங்கிய போது 95 மாணவர்கள் மயங்கி வீழ்ந்ததையடுத்து சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட மாத்திரைகளை மாணவர்களுக்குவழங்குவதில்லை என்று கூறினார்.

இதுகுறித்து சுகாதாரத்திணைக்களத்தினரிடம் கேட்டபோது-

போசாக்குக் குறைந்த மாணவர்களுக்கு வழங்குவதற்காக இரும்புச் சத்து மாத்திரைகள், பூச்சி மாத்திரைகள், விற்றமின் சி மாத்திரைகள் , பெண்பிள்ளைகளுக்கென போலிக் அசிட் மாத்திரைகள் போன்றவை பாடசாலைகளுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்றன

சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் பாடசாலை மாணவர்களில்பெரும்பாலான,குறைந்தது 40 வீதமான மாணவர்கள் போசாக்கின்மை காரணமாக குருதிச் சோகை நோயால் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது. அதனால் மாணவர்களுக்கு தினமும் சத்து மாத்திரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

இவை தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேட்டபோது-

குறித்த மாத்திரைகள் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றன. அதனை நிறுத்துமாறு எந்த அறிவுறுத்தலும் எனக்கோ, வலயக் கல்விப் பணிப்பாளருக்கோ, அதிபர்களுக்கோ விடுக்கப்படவில்லை. எனவே குறித்த மாத்திரைகளை அதிபர்கள் தொடர்ந்து வழங்க வேண்டும்.- என்றார். (ற-ஜ-4,9)

MINISTRY OF PROVINCIAL COUNCILS & LOCAL GOVERNMENT
NORTHERN PROVINCIAL COUNCIL
Iranamadu Irrigation Development Project (IIDP)
IFAD Loan No: 857 LK

**WALK-IN-INTERVIEWS**

**28th March, 2016 – 09.00a.m. to 01.00p.m.**

The following vacancies exist in Implementation Units located in Kilinochchi for the implementation of Iranamadu Irrigation Development Project (IIDP), funded by the International Fund for Agricultural Development (IFAD) and Government of Sri Lanka.

| Position | Vacancies | Qualification | Experience | Monthly Salary |
|---|---|---|---|---|
| Irrigation Engineer | 04 | B.Sc. in Civil Engineering or equivalent | 2 years field experience | Rs.65,000/- to 75,000/- |
| Technical Officer | 10 | NCT - Civil or equivalent | 3 years of Field Experiences | Rs.40,000/- to 50,000/- |
| Draughtsman | 04 | One year fulltime Draughtsman Course | | Rs.40,000/- to 50,000 |
| Work Supervisor | 34 | NCT - civil or equivalent | | Rs.30,000/- to 40,000 |

Interested candidates who are having necessary qualifications and experiences may appear for the walk-in-interview on 28.03.2016, from 09.00 am to 1.00 pm along with their resume mentioning the information related to qualification and experience as per requirement among other information. They should also bring one set of attested photocopies of all relevant documents/testimonials etc. along with their originals.

**Miscellaneous information :**

- The interview will be held at Project Management Office, located at Wilson Road, Kilinochchi.
- It is expected to bring an acceptable Identity Card to prove their identity.
- The selection will be based on a structured interview.
- The posts are purely on assignment basis based on signing of a Memorandum of Understanding (MoU) and not entitle for EPF/ETF benefits.
- The assignments are for one year and the MoU can be terminated at any time without assigning any reason what-so-ever.
- Preference will be given to candidates who have experience in Irrigation field.
- The working days shall be 6 days a week, including Saturdays.
- The all inclusive salary will be decided with in the range indicated above based on the qualifications, experience and other performances.

Eng.N.Suthakaran
Project Director
Iranamadu Irrigation Development Project

16.03.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபர் தருமபுரத்தில் கைது

கிளிநொச்சி. மார்ச் 19
சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்றும், குறித்த நபர் இரண்டு ஆள் அடையாள அட்டைகளை வைத்திருந்தார் என்றும் கிளிநொச்சி தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர், கடந்த புதன் கிழமை இரவு கிளிநொச்சி, புளியம்பொக்கணைப் பகுதியில் கைது செய்யப் பட்டுள்ளார்.

புளியம் பொக்கணை நாக தம்பிரான் ஆலய பொங்கல் விழா கடந்த புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. கொடியேற்றம் நிறைவடைந்த பின்னர் இரவு ஆலயச் சூழலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரிடம் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதன் போது குறித்த நபர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையிலான இரண்டு ஆள் அடையாள அட்டைகளைத் தனது உடைமையில் வைத்திருந்தார் என்றும், அதில் ஒன்று போலியானது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்த ஓர் அடையாள அட்டை வெளிமாவட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவருடையது எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் யாழ்ப்பாணம் கைதடியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த சந்தேக நபர் ஏதாவது குற்றங்களுடன் தொடர்பு பட்டிருக்கின்றாரா என்பது தொடர்பாக அறிய அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் அனுப்பட்டுள்ளது என்றும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

(ந-ஐ-21,ரி3)

## பட்டமளிப்பு விழா

முன்பள்ளிக் கல்வி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நான்காவது பட்டமளிப்பு விழாவில், பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(ந-ரி5)

# தடைப்பட்டுள்ள கழிவுக் கால்வாயால் கிளம்புகின்றன நாற்றமும், நுளம்பும்

### வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முன்பாக

வவுனியா. மார்ச் 19
வவுனியா, கண்டி வீதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முன்பாக உள்ள கால்வாய் சுத்தப்படுத்தப்படாதுள்ளதால் பெரும் நுர்நாற்றம் கிளம்புகின்றன என்றும், நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த கால்வாயை உடனடியாகச் சுத்திகரிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



குறித்த கால்வாய் நீண்ட நாள்களாகச் சுத்திகரிக்கப்படாதுள்ளது. அதிலிருந்து பெரும் நுர்நாற்றம் கிளம்புகின்றது. நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது. அதனால் அண்மையில் உள்ள தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள உத்தி யோ கத்தர்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் உள்ள உத்தியோகத்தர்கள், அயல் வீடுகளில் வசிப்போர் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த கால்வாய் தினமும் சுத்திகரிக்கப்படவேண்டும். பிரதான வீதியில் உள்ள இந்தக் கால்வாயூடாக வெளிவட்ட வீதி, கண்டிவீதி, உள்வட்ட வீதி, அரச உத்தியோகத்தர் விடுதிகள், கற்குழிப் பகுதி என்பவற்றில் இருந்து கழிவு நீர் வழிந்தோடுவது வழமை. சில விசமிகள் கழிவுப் பொருள்களையும் கால்வாய்க்குள் வீசுவதால் நீர் வழிந்தோடாது தேங்கி நிற்கின்றது. இந்தக் கால்வாய் பகுதியில் கழிவுப் பொருள்கள் வீசப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும், கால்வாய் தினமும் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வவுனியா நகர சபைச் செயலாளரிடம் கேட்டபோது-

குறித்த கால்வாயின் அருகில் உள்ள வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கே சொந்தமானது. எனவே அவர்கள்தான் குறித்த கால்வாயைச் சுத்தப்படுத்த வேண்டும்.- என்றார்.

(ந-21,402)

> “பிரதான வீதியில் உள்ள இந்தக் கால்வாயூடாக வெளிவட்ட வீதி, கண்டி வீதி, உள்வட்ட வீதி, அரச உத்தியோகத்தர் விடுதிகள், கற்குழிப் பகுதி என்பவற்றில் இருந்து கழிவு நீர்வழிந் தோடுவது வழமை. சில விசமிகள் கழிவுப் பொருள்களையும் கால்வாய்க்குள் வீசுவதால் நீர் வழிந்தோடாது தேங்கி நிற்கின்றது.”


# மரண அறிவித்தல்

## கந்தையா வேலுப்பிள்ளை



மண்ணில்
02.01.1927

விண்ணில்
15.03.2016

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை 15.03.2016 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தையல் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும்,கல்யாணி (இந்திரா - கனடா), தர்மகுலசிங்கம் ( Former Cement Corporation CSO, Director - Golden Eagle Security Services- யாழ்ப்பாணம்), புவிராஜசிங்கம் (கனடா), இராஜகுலசிங்கம் (பாபு - Babu Catering- கனடா), விஜயகுலசிங்கம் (கனடா), செல்வஜோதி (Palmyrah Grove Financial Services - கனடா),புஷ்பஜோதி (கனடா), Dr.பஞ்சகுலசிங்கம் (ரமணன் - நோர்வே), பிரேமஜோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜீவரெட்ணம் மற்றும் நீலலோஜினி, லீலா, மணிமேகலை, கீதாஞ்சலி,இரவீந்திரன், சிவந்தன், மொனிக்கா, இளங்கோ ஆகியோரின் அன்பு மாமனாரும், பபிதா, குகதாசன், பாமினி, சசிதரன், நிரஞ்சன், சிந்துஜா, ஸ்ரீபிரியா, அரன்ராஜ், கஜித்திரி, சுகந்தன், தர்சிகா, போல், ஜீவிதா, Dr.யாதவன், யாழினி, வைஷ்ணவி, பிரணவன், ராகவி, ரவிவர்மன்,அஸ்வினி,றோசான், றொகான், சில்யா, அலெக்ஸாண்டர், விக்ரோறியா, அகிலன், ஆதிரை ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், மகிஷா, சுகாஸ், பிரனேஸ், கவினேஸ்,அகரன், அஜய், சஞ்ஜய்,அஷ்சு ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave, Markham On L3R 5 G 1) இல் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 9 மணிவரை பார்வைக்கு வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**க.தர்மகுலசிங்கம் (மகன்)**
**077 755 1431**

(C/29857)
(11.18.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி நகர அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

## முன்னோடிக் கலந்துரையாடல் முடிவுற்றது

யாழ்ப்பாணம், மார்ச் 19
வடமராட்சிக்கான "நகர அபிவிருத்தித் திட்டம்"தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பிலான முன்னோடிக் கலந்துரையாடல், பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான, எம்.கே.சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், சி.அகிலதாஸ், தர்மலிங்கம், வே.சிவயோகன் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில், மருதங்கேணி பிரதேச செயலர் கனகேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், கரவெட்டிப் பிரதேச செயலர் சிவசிறீ ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். வடமராட்சியிலுள்ள ஓய்வுபெற்ற அரச அதிபர்கள், திட்டமிடல் திணைக்களப் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஏனைய துறைசார் வல்லுநர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

> யாழ்.நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனைப் போன்று வட மராட்சியின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளையும் இணைத்து வடமராட்சிக்கான "நகர அபிவிருத்தித் திட்டம்" தயாரிப்பது தொடர்பில் ஆராயப் பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்தொழில் ஆகிய பிரதான துறைகளின் அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்தில் வடமராட்சியில் எவ்வாறான அபிவிருத்தியை முன் னெடுப்பது என்பது பற்றி இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளது.

யாழ்.நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனைப் போன்று வடமராட்சியின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளையும் இணைத்து வடமராட்சிக்கான "நகர அபிவிருத்தித் திட்டம்"தயாரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில் ஆகிய பிரதான துறைகளின் அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்தில் வடமராட்சியில் எவ்வாறான அபிவிருத்தியை முன்னெடுப்பது என்பது பற்றி இந்தக் கலந் துரையாடலில் பேசப்பட்டுள் ளது.

ஆட்சி மாற்றங்களின்போது ஒவ்வொரு அரசுகளும் தமக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றன. அதனால் பிரதேசத்தில் ஒரு சீரான வளர்சியை முன்னெடுக்க முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே வடமராட்சியின் சகல பிரதேசங்களும் சமமான வகையில் பயன் பெறுவதற்கு ஏற்ற அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கு குறித்த கலந்துரையாடலில் முடிவு செய்யப் பட்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் வடமராட்சியின் நகர அபிவிருத்தித் திட்டமே, இனி வரும் காலத்தில் எந்தவொரு அபிவிருத்தி வேலையையும் தீர்மானிக்கும் வகையில் இருக்க வேண் டும் என்றும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் வடக்கு - கிழக்குக்கு உதவி வழங்கும் மாநாட்டின்போது, வடமராட்சி நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான நிதியைக் கோரலாம் என்றும் மேற்படி கலந்துரையாடலில் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தமிழினியின் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச்.19
தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறை முன்னாள் பொறுப்பாளர் தமிழினி ஜெயக்குமரன் எழுதிய ஒரு கூர் வாளின் நிழலில் (போராட்டக் குறிப்புகள்), போர்க்காலம் (கவிதைகளின் தொகுப்பு) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் பொன்.காந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் நூல் வெளியீட்டு உரையை மூத்த அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், வாழ்த்துரைகளை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் நிகழ்த்தவுள்ளனர்.


நூல் வெளியீட்டுரையை முன்னாள் போராளி திருச்செல்வம் சிவமலர் நிகழ்த்தவுள்ளதுடன், உரை நிகழ்வுகளின் வரிசையில் முன்னாள் போராளி, படைப்பாளி செல்வி வெற்றிச்செல்வியின் உரையும் இடம்பெறும். சிறப்புரையாக முன்னாள் போராளி தங்கராசா சுதாகரனின் 'தமிழினியின் சமூகப் பொறுப்பும் தமிழினிகளுக்கான சமூகத்தின் பொறுப்பும்' என்ற தலைப்பிலான உரையும் இடம் பெறவுள்ளது. (ற-ரி2)

## வீட்டில் தனித்திருந்த நான்கு சிறுவர்கள் ஆசிரியர்களால் பாடசாலையில் சேர்ப்பு

கிளிநொச்சி, மார்ச் 19
கிளிநொச்சி மலையாளபுரத்தில் நீண்ட காலமாக பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் தனித்திருந்த நான்கு சிறுவர்கள் அன்னை சாரதா வித்தியாலய ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறுவர்களின் தாயார் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பணி புரிகின்றார் என அயலவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் நான்கு மாதங்களுக்கும் மேலாகப் பாடசாலைக் குச் செல்லாது நான்கு சிறுவர்கள் தொடர்ச்சியாக வீட்டில் இருந்துள்ளனர். இதை அவதானித்த அயலவர்கள் சிறுவர்களுடைய வீட்டுக்கு அருகில் உள்ள அன்னை சாரதா வித்தியாலயத்தினரிடம்விடயத் தைத் தெரியப்படுத்தினர். அதையடுத்து குறித்த வீட்டுக்குச் சென்ற அன்னை சாரதா பாடசாலை யின் ஆசிரியர்கள், பாடசா லைக்குச் செல்லாமல் தனி மையில் இருந்த சிறுவர்களை மீட்டு பாடசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் தந்தை இன்றி தாயாரின் வளர்ப்பில் உள்ளனர் என்றும், இவர்களின் தாயார் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பணி புரிகின்றார் என்றும் தெரிவித்த அயலவர்கள், தினமும் பணிக்குச் செல்லும் தாயார், சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாது வீட்டில் தனித்து விட்டுச் செல்கின்றார் என்றும் தெரிவித்தனர். (ற-ஜ-101)



மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் நேற்று தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. 60 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். வித்தியாலய அதிபர் இரா.நடராசா தலைமையில் இடம்பெற்ற இத்தேர்தலில் 83 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். (ற-108)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் விலைமனு கேள்விக்கான அழைப்பு
சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் தரிப்பிடம் குத்தகைக்கு வழங்கல்

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான, தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் தரிப்பிடம் நடத்துநர்களிடமிருந்து 08.04.2016 தொடக்கம் 07.04.2017 வரையான காலப்பகுதிக்கு எமது பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகளில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் தரிப்பிடத்தினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றோம்.

| பெறுகை விவரம் | பெறுகை இலக்கம் | நிலையங்களின் பெயர் |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கல் | RDHS/CANTEEN/2016/01 | ஆதாரவைத்தியசாலை. பருத்தித்துறை |
| | RDHS/CANTEEN/2016/02 | ஆதாரவைத்தியசாலை. தெல்லிப்பழை |
| | RDHS/CANTEEN/2016/03 | ஆதாரவைத்தியசாலை.சாவகச்சேரி |
| | RDHS/CANTEEN/2016/04 | பிரதேசவைத்தியசாலை.மானிப்பாய் |
| | RDHS/CANTEEN/2016/05 | பிரதேசவைத்தியசாலை.வல்வெட்டித்துறை |
| சைக்கிள் தரிப்பிடம் குத்தகைக்கு வழங்கல் | RDHS/CY-PARK/2016/01 | ஆதாரவைத்தியசாலை. பருத்தித்துறை |
| | RDHS/CY-PARK/2016/02 | ஆதாரவைத்தியசாலை. தெல்லிப்பழை |
| | RDHS/CY-PARK/2016/03 | ஆதாரவைத்தியசாலை.சாவகச்சேரி |
| | RDHS/CY-PARK/2016/04 | பிரதேசவைத்தியசாலை.மானிப்பாய் |
| | RDHS/CY-PARK/2016/05 | பிரதேசவைத்தியசாலை.வல்வெட்டித்துறை |
| | RDHS/CY-PARK/2016/06 | பிரதேசவைத்தியசாலை.அச்சுவேலி |
| | RDHS/CY-PARK/2016/07 | பிரதேசவைத்தியசாலை.சங்கானை |

ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 500.00

01. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 222 2278/6253. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
02. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும்"Application for Bid documents" என்ற படிவத்தை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 21.03.2016 தொடக்கம் 01.04.2016 வரையான காலப்பகுதியில் 09.00மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
03. விலைக்கேள்விகள் 04.04.2016ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்பபடும்.
04. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை ஏந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

வைத்திய கலாநிதி [illegible]
தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பெற்ற பிள்ளைகளுக்கும் எமது அரசே பால் கொடுக்கிறது

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பெற்றெடுத்த பிள்ளைகளுக்கும் எமது அரசே பால் கொடுக்க நேர்ந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமைநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தற்போதைய அரசை விமர்சித்து கடன் பெற்றுக்கொள்வது தொடர்பாகவெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் போதே நிதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**21 ஆயிரம் மில்லியன் எங்கே?**

மத்தள விமான நிலையத்தை நிர்மாணிக்க 190 மில்லியன் டொலர்கள் மாத்திரமேபெற்றுக் கொள்ளப்பட்டது என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இது இலங்கை ரூபா மதிப்பில் 25 ஆயிரம் மில்லியன். ஆனால் 46 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவு என்று கணக்குகளில் குறிப்பிட்டுள்ளனர். இதில் வித்தியாசப்படும் தொகை அவர்களின் பைகளுக்குத்தான் சென்றிருக்கும்.



கட்டுநாயக்க அதிவேக நெடுஞ் சாலையை நிர்மாணிக்க 248 மில்லியன் டொலர்களை பெற்றுக் கொண்டேன் என்று கூறியுள்ளார். இலங்கை நாணய மதிப்பில் இது 35 ஆயிரம் மில்லியன் ரூபா. எனினும் செலவுக் கணக்குகளில் 49 ஆயிரம் மில்லியன் ரூபா எனக் காட்டியுள்ளனர். இந்தத் தொகைகளில் எந்தளவு வித்தியாசம் இருக்கின்றது?

**வெள்ளைவான் கடத்தல் இல்லை**

அம்பாந்தோட்டைத் துறை முகத்தை நிர்மாணிக்க 55 ஆயிரம் மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளனர். முதல் கட்டத்துக்கு 79 பில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளனர். இதில் வித்தியாசப்படும் தொகையும் இவர்களின் பைகளுக்கே சென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டுஜனவரிமாதம்முதலாம் திகதி பங்களாதேஷிலிருந்து ஒரு கிலோ அரிசி 75 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு 45 ரூபா வுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனா திபதித் தேர்தல் 8 ஆம் திகதி நடை பெற்ற நிலையில்தான் இது நடந்துள்ளது. அதனால் 8 ஆயிரம் பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இப்படித்தான் இவர்கள் பொருளாதார முகா மைத்துவம் செய்துள்ளனர் - என்றார்.

மோசடிகள் முறைகேடுகள் நடந்திருந்தால், அதற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், அந்தக் காலத்தைப் போல் வெள்ளை வான் கடத்தல் சம்பவம் இடம் பெறாது என்பதால், முறைகேடுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ந-5)


## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம்



தோற்றம்:
05.04.1937

மறைவு:
16.03.2016

மீசாலை கிழக்கு, வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 16.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், நவறஞ்சிதம், குகானந்தன் (குகன் உணவகம்- உரும்பிராய்), நித்தி யானந்தன், பிரதீபா, மனோரஞ்சிதம், பிரபாகரன் (பிரான்ஸ்), டயாராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரன், பிறேமாவதி,ஸ்ரீ குபேரன் (லண்டன்), சிவநாதன், ஜெயக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம்,மகேஸ்வரி, பஞ்சாட்சரம், தெய்வானை மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகலிங்கம், மாணிக்கம், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் ராணி, மகேஸ்வரி, சிவலிங்கம், பரமேஸ்வரி, இராசலிங்கம், இராசாத்தி, சாந்தகுமாரி, இறஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கார்த்தீபன் (பிரான்ஸ் ), தர்சினி, கஜன், நிதர்சன் - டிலோஷா, சஞ்சீவ், சங்கீதன், பிரசஞ்யா, திவ்வியா, கிருஷாந், கிருஷிகா, கிருஷனா, கிருஷயன், அஸ்வின் (சுவிஸ்), பிரவீன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் வீதி, இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(70032)
(11,18,20)

077 314 2969, 077 575 4967


# பல கோடிகளைக் கொள்ளையிட்டோர் மின்தடை குறித்துப் பேசுவது வேடிக்கை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
மின் உற்பத்தி நிலை யங்கள் மற்றும் தரம் குறைந்த மின் கட்ட மைப்புக்களை நிர்மாணித்து பல கோடி ரூபாக்களைக் கொள்ளையிட்ட மோசடியாளர்கள் தற்போது மின்சாரத் தடை குறித்துப் பேசுகின்றனர் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பஸ் தரிப்பிடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மின்சார சபையின் பல கோடி ரூபா நிதியைக் கொள்ளையிட்டவர்களும், ஊழல் அதிகாரிகளும் மின் தடை குறித்துப் பேசுவது பெரிய அரசியல் நகைச்சுவையாக மாறியுள்ளது.

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகள் விடயத்தில் கட்சி அரசியல் இல்லை. கட்சி அரசியல் என்ற இருண்ட யுகத்திற்கு மீண்டும் நாட்டை இட்டுச் செல்லும் தேவை சிலருக்கு உள்ளது.- என்று குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# நாட்டை விற்பதற்கு முயற்சிக்கிறது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் சோமவன்ச

கொழும்பு, மார்ச் 19
ஒற்றையாட்சி என்பது புத்த கத்தில் மாத்திரமே இருக்கின்றது. ஆனால் இந்த அரசு நாட்டை விற்கவும் - பிரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.- இவ்வாறு மக்கள் சேவை கட்சியின் தலைவரும், ஜே.வி. பி.யின் முன்னாள் தலைவருமான சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வேறு எந்த நாட்டிலும் இல்லாத நாடாளுமன்றம் எமது நாட்டில் உள்ளது. தோல்வியடைந்த 14 நாடாளுமன்ற உறுப் பினர்கள் எமது நாடாளுமன்றத்தில் உள்ளனர்.

இதன் மூலம் மைத்திரி - ரணில் தமது ஜனநாயகத்தை வெளிக் காட்டியுள்ளனர். அரசியலில் தூய்மையில்லாத அரசால் எந்தப் பயனுமில்லை. தோல்வியடைந்தவர்களை அமைச்சரவையில் வைத்துக் கொண்டு சிறப்புரிமைகளை வழங்குவதை மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். மக்களைக் கால்வாயில் தூக்கிப் போட்டவர்கள் அமைச்சரவையில் உள்ளனர் என்றால், இங்கு இருக்கும் ஜனநாயகம் என்ன? நாட்டைப் பிரிக்கவும் விற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புத்தகத்தில் ஒற்றையாட்சி நாடு பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், உண்மையில் நாட்டைப் பிரிக்கும் பிரிவினை வாத வேலைத்திட்டமே உள்ளது.

2020 ஆம் ஆண்டுவரை அரசைக் கவிழ்க்க முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அரசை ஆட்சியில் அமர்த்திய, மக்களால் அரசைக் கவிழ்க்கவும் முடியும்.

நெருங்கி வரும் ஆபத்து எமக்குத் தெரிகிறது. நாட்டை ஒரு நோக்கமுமின்றிச் செல்ல இடமளிக்கக் கூடாது. மக்கள் போராட்டத்தை நாடு முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டும்.- என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொலைகளின் பின்னணியில் மகிந்த, கோத்தாவே இருந்தனர்

## அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 19
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் உள்ளிட்டோரின் படுகொலைகளை மேற்கொண்ட குழுவினருக்குப் பின்னணியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச போன்றவர்களே இருந்தனர் என்று அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

**சம்பவங்கள் மூடி மறைப்பு**

லசந்த விக்கிரமதுங்க படுகொலைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியது குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பு. இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது, குற்றப் புலனாய்வுப் பிரிவு கோத்தபாய ராஜபக்சவின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது. அதனால்தான் இவ்வாறு நேர்ந்துள்ளது. அது மட்டுமன்றி, அந்தக் காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் அனைத்துமே மூடி மறைக்கப்பட்டுவிட்டன. இப்போது இவற்றில் ஓரிரண்டு சம்பவங்கள் வெளிப்படத்தொடங்கியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலையில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்று தற்போது தகவல்கள் வெளிவருகின்றன. அதில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, அவர்களது வாகனம் போன்றவையும் சம்பந்தப்பட்டிருந்ததாகவும், தெரியவருகிறது. இத்தகைய சம்பவங்கள் ஒரு குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது என்று நானும் அப்போது அறிந்திருந்தேன்.
இதில் எமக்குத் தொடர்பு இருக்கவில்லை. லசந்த எனக்கு எதிராகச் செயற்படவுமில்லை.

> குற்றப் புலனாய்வுப் பிரிவு கோத்தபாய ராஜபக்சவின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது. அதனால்தான் இவ்வாறு நேர்ந்துள்ளது. இது மட்டுமன்றி, அந்தக் காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் அனைத்துமே மூடி மறைக்கப்பட்டு விட்டன.

**கோத்தாவுடன் பலருக்குப் பிரச்சினை**

மகிந்த ராஜபக்சவுக்கும் லசந்த விக்கிரமதுங்கவுக்கும் பிரச்சினைகள் இருந்திருக்கலாம். இன்னும் சிலருக்கும் கோத்தபாயவுக்குமிடையில் பிரச்சினைகள் இருந்தன. ஒரு குழுவே இவற்றைச் செய்தது. அந்தக் குழுவின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச போன்றோர் செயற்பட்டுள்ளனர். இது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால் மக்களுக்கு இந்த விடயத்தில் தெளிவில்லை.
அதனால்தான் இராணுவம் தொடர்புபட்டுள்ளது, இராணுவத் தளபதி தொடர்புபட்டுள்ளார் என்ற வதந்திகள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை மறைக்கப்பட மற்றொரு காரணமும் உள்ளது. அவரது சகோதரர் லால் விக்கிரமதுங்க மகிந்த ராஜபக்சவின் அடிவருடியாக செயற்பட்டதே இதற்குக் காரணம். சிலர் மகிந்த ராஜபக்சவின் அடிவருடிகளாக இருந்துகொண்டு எனக்கெதிராகச் சாட்சி சொன்னார்கள். இத்தகைய சூழலில் உண்மைகள் வெளிப்படுவது சிரமமே – என்றார். (ந-5)

# தவறான தகவல் வழங்கி கூட்டத்துக்கு அழைக்கின்றனர்

## சாடுகின்றார் மகிந்த சமரசிங்க

கொழும்பு, மார்ச் 19
மக்களுக்குத் தவறான விளக்கங்களை வழங்கி அவர்களை பஸ்களில் அரசுக்கு எதிரான கூட்டத்துக்கு அழைத்து வருகின்றனர் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.
களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
தனிப்பட்ட ஒழுங்குப் பத்திரங்களுக்கு அமைய சிலர் அரசுக்கு எதிரான கூட்டங்களை நடத்துகின்றனர். களுத்துறை மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்குச் சென்று மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கி, பஸ்கள் மூலம் பொது மக்களை அரசுக்கு எதிரான கூட்டங்களுக்கு அழைத்து செல்கின்றனர்.
இது மக்களின் நலன்களை கருத்திற் கொண்டு மேற் கொள்ளப்படும் செயற்பாடுகள் அல்ல. இவை அனைத்தும் தனிப்பட்ட ஒழுங்கு பத்திரங்களுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுகின்றன.– என்றார். (ந-5)

# ரவிராஜ் எம்.பி. கொலை தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## போதிய ஆதாரங்கள் உள்ளன என்பதை ஏற்றது கொழும்பு மாவட்ட நீதிமன்று

கொழும்பு, மார்ச் 19
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. வழக்கின் முதற் கட்ட விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த போதே நீதிபதி இவ் வாறு தெரிவித்தார்.
ரவிராஜ் கொலை வழக்கில் கடற்படை உறுப்பினர்கள் இரண்டு பேர், பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் கருணா குழுவைச் சேர்ந்த இரண்டு நபர்களுக்கு எதிராகப் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.
சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக் கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராயும் முதற்கட்ட விசாரணை கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது.
இந்த விசாரணை முடிவுற்றுள்ளது. இதனையடுத்து தீர்ப்பை அறிவித்த நீதிபதி, சந்தேகநபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்வதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார். இது தொடர்பில் சட்டமா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளார். வழக்கின் சந்தேக நபர் களில் இரண்டுபேர் தற்போது வெளிநாட்டுக்குத் தப்பியோடியுள்ளார்கள் என்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ள பொலிஸார், அவர்கள் இருவரும் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித் துள்ளனர்.
வெளிநாட்டுக்கு தப்பியோடிய இருவரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் சர்வதேச பொலிஸாருக்கு (இன்ரபோல்) உத்தரவு பிறப்பித்துள்ளது. (ந-5)

# ரணதுங்கவுக்கு அழைப்பாணை

கொழும்பு, மார்ச் 19
கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு மிரட்டல் விடுத்தமை தொடர்பில் வாழைத்தோட்டம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட பீ அறிக்கையைத் தொடர்ந்து, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தலைவர் தம்மிக்க ரணதுங்கவை மார்ச் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. சி.எஸ்.என் நிதிமோசடி விவகாரம் தொடர் பில் கைதுசெய்யப்பட்ட தனது சகோதரரான நிஷாந்த ரணதுங்கவின் பிணை மனு தொடர்பான அமர்வுக்கு சமுகமளிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு வந்த தம்மிக்க ரணதுங்கவை, ஊடகவியலாளர்கள் படம்பிடிக்க முயன்ற போது, அவர் அச்சுறுத்தல் விடுத்திருந்தார். (ந)


# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**வை.சிவகணேசதாசன்**
அன்னை மடியில்
10.11.1948

ஆண்டவன் மடியில்
28.03.2007
திதி: பங்குனி மாதம் வளர்பிறை ஏகாதசி

அமரர்
**சி.சறோஜினி**
அன்னை மடியில்
05.02.1954

(கபிலன் ரான்ஸ்போட் மற்றும் சர்மிலா றேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர்கள் - உரும்பிராய் சந்தி)

தாங்க முடியாத வலிகளும் காணாமல் போகும்
அம்மா உங்கள் பூமுகம் கண்ட உடன் ஆயிரம்
சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும் அன்னையே!
உன்னைப்போல அன்பு செய்ய யாருமில்லை இவ்வுலகில்!

எம்மை வயிற்றில் சுமக்கும் பாக்கியம் இல்லாவிட்டாலும்
நெஞ்சினில் சுமந்த எம் தந்தையே!
உங்களை இழக்கும்வரை உமது அருமை புரியவில்லை
ஆயிரம் நிலவுகள் வானில் வந்து மறைந்தாலும்
ஒற்றை சூரியனாய் என்றும் பிரகாசம் வீசும்
உங்கள் நினைவுகள் எம்மனதில் என்றும் வாழும்

இன்று (19.03.2016) சனிக்கிழமை எமது பெற்றோரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது சென்னையில் உள்ள இல்லத்தில் நடைபெறுகிறது. அத்தருணம் எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்திபெற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவனை வேண்டும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - சர்வாநந் - 0044 740 509 4455 (லண்டன்),
மகள் - சர்மிலா - 0091 971 041 7399 (சென்னை)
மகள் - தர்ஷனி - 077 961 8358 (யாழ்ப்பாணம்)

"கணேசபதி",
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமெரிக்காவின் பரிபாஷை இலங்கைக்கு உறைக்குமா...?

நீரிழிவு என்ற படுபாதக நோய், எந்தவித நோயையும் குணப்படுவதற்கு வழி எதுவும் விடாமல் தடுப்பரண் போன்று அமைவதோடு மட்டுமன்றி,--

வெவ்வேறு வகை சார்ந்த வியாதிகளையும் தோற்றுவிக்கும் தன்மை கொண்டது.

அதனாலேயே மருத்துவ வட்டாரங்களில், அது தாய் நோய் (Mother Disease) என்று உச்சரிக்கப்படுகிறது. அந்தக் கருத்து முழுக்கச் சரி என்பதை அனுபவசாலிகளான நோயாளர்கள், மேல் நிறுத்துகிறார்கள்.

அதே வகை சார்ந்தது- ஒத்தது-தான் இலங்கை அரசுகள் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் (Prevention of Terrorism Act).

அந்தச் சட்டத்தை நீக்குவதன் ஊடாக, நாட்டின் பல பிரச்சினைகள் தாமாகவே சுமுகமாகத் தீர்ந்து விடும் என்பது, இலங்கையின் ஆட்சிக் கட்டிலில் அமரும் அரசுகளுக்கு நன்றாகவும், மிக ஆழமாகவும் தெரியும்; புரியும்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபை, ஐ.நா.மனித உரிமைகள் சபை உட்பட, உலக நாடுகள் பலவும் வலியுறுத்தி, பல்வேறு வகைகளில் அழுத்தம் கொடுத்தபோதிலும், இலங்கை அரசுகள் அவ்வப்போது, உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்று தண்ணீர் காட்டி வருகின்றன!

மிகத் தெளிவாகக் கூறுவதானால், நல்லாட்சி அரசு என்று தனக்குத் தானே மகுடம் சூட்டியுள்ள, மைத்திரிபால சிறிசேன--ரணில் விக்கிரமசிங்க அரசும் அதன் அமைச்சர்களும் இப்போது வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு உரிய அக்கறை காட்டவில்லை!

வெறுமனே, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற ஒருவகைப் பரிபாஷையுடன் இன்றைய அரசும் தமிழ் மக்களை ஏய்க்காட்டி வருகிறது.

புதிய மொந்தையில் பழைய கள்ளை ஊற்றி விற்பனை செய்யும் பாணியில், பொருத்தமான சட்டம் இயற்றப்பட்டதும், கொண்டு வரப்பட்டதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடுத்த நாளிலேயே நீக்கிவிடப் போவதாக மேளம் கொட்டுகிறது! இதனை உள்ளூர உற்றுநோக்கிய, அமெரிக்க மேற்சபையின் (செனற்சபையின்) வெளிவிவகாரக் குழுவின் தலைவர் எட்வேட் றொயிஸ்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மிகமிக விரைந்து நீக்கிவிட வேண்டும் என்று வெறுமனே பேச்சளவில் நிற்காது, எழுத்து மூலம் (வெள்ளையில் கறுப்பில்)--

ராஜதந்திரிப் பரிபாஷையில், இலங்கை அரசை செமத்தையாக வெளுத்து வாங்கி உள்ளார்.

இலங்கை அரசுக்கு அது உறைக்குமா என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போமே...!

# சுமைகளைத் தாங்கி நிற்கும் தமிழ்க் கட்சிகள்

வந்தியத்தேவர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி என்பவை கூட தாம் சுமந்திருந்த பொறுப்புக்களை இறக்கி வைக்க முடிந்ததாக வரலாறு இல்லை. பொறுப்புக்களைச் சுமந்த வண்ணமே காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பதைத் தவிர இறக்கி வைப்பதற்கான வழி, சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இன்றுவரை அடைக்கப்பட்டதாகவே உள்ளது. அகதி வாழ்க்கை, மீள்குடியமர்வு, காணி சுவீகரிப்பு, இராணுவ அச் சுறுத்தல்கள் எனத் திரும்பிய பக்கமெல்லாம் தமிழர்கள் பெரும் சுமைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுமைகளை இறக்கி வைக்கும் வகையில் தனிநாடு என்ற பொறுப்பைச் சுமந்து கொண்டு அதற்காக மிகப்பெரிய ஆயுதப் போர் ஒன்றின் மூலம் பொறுப்புக்களை இறக்கி வைக்க முயன்ற விடுதலைப் புலிகளும் அதில் முக்கியஸ்தர்களாகக் கருதப்பட்ட சிலரின் திசைமாறலுடன் தோற்றுப்போக அதுவும் சிங்கள அரசுக்குச் சாதகமாகி விட்டது. விடுதலைப் புலிகள் தனிநாடு என்ற தமது சுமையை இறக்கி வைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆக மொத்தத்தில் தமிழர்கள் மீதான சுமைகளில் ஒன்றைக்கூட முழுமையாக இறக்கி வைக்க முடியாத நிலையே இன்னமும் நீடிக்கிறது.


> இந்த ஆண்டுக்குள் தமிழர்கள் மீதான சுமைகள் இறக்கி வைக்கப்பட்டு விடும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூற்று. கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் இதற்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

### இந்த ஆண்டுக்குள் தீர்வு

இந்த ஆண்டுக்குள் தமிழர்கள் மீதான சுமைகள் இறக்கி வைக்கப்பட்டு விடும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூற்று. கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இதற்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கிறார். வடக்கு கிழக்கு இணைந்த தீர்வே தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என்பதையும், அது தவிர்ந்த எதனையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதும் அவரது கருத்தாகும். ஆனால் நல்லாட்சி தருவோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உகந்த தீர்வு தருவோம் என்று கூறித் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் அரசுக் கட்டில் ஏறியோர் தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வை, சமஷ்டி ஆட்சி என்ற சுமையை உரிய முறையில் இறக்கி வைத்து தமிழர்களின் பாரத்தைத் தவிர்க்க முன்வருவார்கள் என்பது என்ன நிச்சயம்? ஒற்றையாட்சியின் கீழ் தான் தீர்வு என்பது தென்னிலங்கையின் உறுதியான திட்ட வட்டமான முடிவு. என்னதான் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி தீர்வு குறித்த விடயங்களில் மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று அரசுத் தலைவர்கள் சொன்னாலும், அது வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்பது சந்தேகத்துக்குரியதே. அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர் என்பதாலும், நாட்டின் நலனை நேசிப்பவர் என்பதாலும் அவரது நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்குத் திருப்தி தரும் வகையில் அமையுமா என்பதும் கேள்விக்குள்ளானதாகவே இருக்கும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கனவான்கள் வரிசையில் உள் ளவர். அவர் சிங்கள மக்களின் ஆதரவை எதிர்பார்த்திருப்பவர். அவரது இப்போதைய கருத்து வெளிப்பாடுகள் தமிழ் மக்களுக்கு ஆதரவு போல் இருந்தாலும் அவர் இனவாதக் கொள்கையை முழுமையாகக் கைவிட்டவரல்ல. இந்த வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிக்க முழுமனதுடன் ஒத்துழைப்பாரா என்பதும் ஏனைய அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு உடன்படுவார்களா என்பதும் பொதுவான கேள்வியாக உள்ளது.

### இந்தியா உதவப்போவதில்லை


இனப்பிரச்சினைக்குச் சமஷ்டித் தீர்வே தமிழர் தரப்பால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்தியத் துணைத் தூதரகத்தின் நிகழ்வு ஒன்றில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இதை முன்வைத்திருந்தார். 1986 இல் சமஷ்டித் தீர்வை வலியுறுத்த இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி இலங்கை அரசை வற்புறுத்த மறுத்திருந்ததாகவும் தகவல்கள் உண்டு. தற்சமயம் இந்தியாவில் பல மாநிலங்களில் சுயாட்சி கோரும் நிலைமைகள் காணப்படுவதால் இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறையை இந்தியா ஒரு போதும் வலியுறுத்தப் போவதாக இல்லை. பொதுவான சில பிரச்சினைகளில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் உண்டு. புதிய ஆட்சியின் மீது தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும், படிப்படியாக எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்றவாறான நம்பிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார். இது அபிவிருத்திக்கானது மட்டுமா அல்லது இன்று தமிழர்கள் சுமந்து கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கும் பொருந்துமா? தற்போதைய அரசுத் தலைவரும் அரசும் மட்டுமன்றி இந்த அரசு அமைவதற்கு உதவிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் அவர்களுடன் இணைந்த ஏனைய பிரமுகர்களும் இந்தச் சுமைகளை இறக்கி வைப்பதற்கு முழுமனதுடன் செயலில் இறங்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# பொன்சேகாவின் ஞானோதயம்



இறுதிப்போர் நிறைவு பெற்று ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில் முன்னாள் இராணுவத் தளபதியும், போரின் போது ஜனாதிபதிப் பதவி வகித்த மகிந்தவும் எதிர்மறையான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இன்றைய பீல்ட் மார்சலும், அன்றைய இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா, புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் வகித்த பாகம் என்றுமே மறக்க முடியாதது. அவர் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்தபோது, தமிழர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் மிகவும் மோசமானவை. இந்த நாட்டில் கொடியதொரு போர் ஆரம்பமாவதற்கு அவரே மூல கர்த்தாவாக விளங்கினார். குடாநாட்டில் தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இவர் இருந்ததாகச் சந்தேகங்கள் கிளம்பியதால் புலிகள் சீற்றமடைந்தனர். பொங்குதமிழ் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியவர்களும், ஆதரவு நல்கியவர்களும்கூட இவரது பதவிக்காலத்தின்போது படுகொலை செய்யப்பட்டனர். சிங்களவர் கொடுப்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கும் அதிகமாக எதுவுமே கேட்கக்கூடாது; இந்த நாடு சிங்களவர்களுக்கே உரியது, ஏனையவர்கள் விரும்பினால் இங்கே இருக்கலாம் அல்லது வேறு மார்க்கத்தைத் தெரிவு செய்து கொள்ளலாம் என்றெல்லாம் திருவாய் மலர்ந்து தமது இனவாதக் கருத்துக்களை வெளிப்படையாகவே கக்கியவர் இவர். வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள பாதுகாப்பு வலயங்களை அகற்றக்கூடா தென்பதில் பிடிவாதமாகச் செயற்பட்டவர் இந்தப் பொன்சேகாதான். இறுதிப்போரின்போது இடம்பெற்ற அவலங்களுக்கும், இவரொரு பங்காளிதான். மகிந்த தரப்பினருடன் மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்த இவர், அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு இறுதிப்போரையும் தலைமை தாங்கி நடத்தியவர்.

### வெற்றிக்கு உரிமை கோருவதில் முரண்பாடு

போர் முடிவடைந்த பின்னர், போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இவரும் மகிந்த தரப்பினரும் முரண்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. போர் வெற்றியில் இவர் பங்கு கேட்பதாக இருந்தால், போர் இடம் பெற்றபோது நிகழ்ந்த அவலங்களிலும் பங்கு வகிக்க வேண்டும். சர்வதேச போர்க் குற்ற விசாரணை ஒன்று இடம்பெறுமாயின் அதில் குற்றவாளிகளாக இனம் காணப்படுபவர்களில் பொன்சேகா நிச்சயம் முக்கிய இடத்தைப் பிடிப்பார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஒரு போர்க்குற்றவாளியாக இவர் கருதப்படுகிறார். நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் மைத்திரி-ரணில் அரசு, இவர் மீதான சகல குற்றச்சாட்டுக்களையும் விலக்கிக் கொண்டதோடு, பீல்ட் மார்சல் என்ற உயர் இராணுவ விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளது. அது மட்டுமல்லாது தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக்கி ஓர் அமைச்சராக வும் நியமனம் செய்துள்ளது. அரசின் இந்தச் செயல் தமிழர் மத்தியில் மட்டுமல்லாது மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியிலும் ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது. பல உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கும், ஓர் இனம் போரைக் காரணம் கூறிச் சின்னாபின்னப்படுத்தப்படுவதற்கும் காரண கர்த்தாவாக இருந்த ஒருவருக்கு எவ்வாறு கருணை காட்ட முடியுமென கேள்விகளும் சர்வதேச ரீதியாக எழுந்துள்ளன.

### திடீரென்று வந்த ஞானோதயம்

தற்போது திடீரென ஞானோதயம் வந்தவர் போன்று பொன்சேகா தெரிவித்த சில கருத்துக்கள் மகிந்த தரப்புக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. மகிந்த தரப்பினர் புலிகளுக்குப் பணம் வழங்கியதான பொன்சேகாவின் குற்றச்சாட்டு பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. பணத்தைப் பெற்றுக் கொண்டதன் காரணமாகவே 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்களை வாக்களிக்க விடாது புலிகள் தடுத்ததாகவும் ஒரு சாரார் தெரிவித்திருந்தமை தற்போது நினைவுக்கு வருகின்றது. என்னதான் இருந்தாலும் மகிந்தவுடன் நெருக்கமாக இருந்தபோது பொன்சேகா இதைக் கூறியிருந்தால், அவரையொரு நேர்மையாளராகக் கருதமுடியும். ஆனால் மகிந்தவுடன் பகைமை பாராட்டிக் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில் இதைக் கூறியதுதான் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் வெள்ளைக்கொடி விவகாரம், போர்க்குற்ற விசாரணை என்பவை தொடர்பிலும் அவர் தெரிவித்த கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றாலும், இந்த விவகாரங்களில் இருந்து பொன்சேகா விலகியிருக்க முடியாது.

> பணத்தைப் பெற்றுக் கொண்டதன் காரணமாகவே 2005 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்களை வாக்களிக்க விடாது புலிகள் தடுத்ததாகவும் ஒரு சாரார் தெரிவித்திருந்தமை தற்போது நினைவுக்கு வருகின்றது.

### பொன்சேகாவும் பொறுப்பாளிதான்

என்னதான் இருந்த போதிலும் தமிழர்கள் அனுபவித்த இன்னல்களுக்கு ஏதோ ஒரு வகையில் பொறுப்பாளியான சரத் பொன்சேகா, மற்றவர்களைக் குற்றம் சுமத்தி விட்டு தாம் தப்பிக்கலாமென நினைத்தால் அது முடியவே முடியாது. ஏனென்றால் சர்வதேசத்தின் பார்வை அவர்மீது ஏற்கனவே விழுந்து விட்டது. தற்போதைய அரசு மகிந்தவை மடக்குவதற்கான ஒரு கருவியாக பொன்சேகாவைப் பயன்படுத்தினாலும் போர்க்குற்றவாளி என்ற அவப் பெயரை அவரால் துடைத்தெறிவது முடியாத காரியமாகவே இருக்கப்போகின்றது.

## இனியும் வேண்டாம் இந்த விதண்டாவாதம்

மானிப்பாய் மருதடி ஆலய வருடாந்த திருவிழாக்கள் இருபத்தைந்தா அல்லது பதினெட்டா?

கடந்த ஆண்டு ஆலய புனருத்தாரணம் செய்தபின் 25 திருவிழாக்களை அப்போதிருந்த நிர்வாகம் தீர்மானித்துச் செயற்படுத்தியுள்ளது.

இந்த விடயமானது கும்பாபிசேகம் பூர்த்தி செய்த பின் கையாளப்பட்ட நடைமுறையாகும். இந்துசமய கோட்பாடுகளுக்கமைய கும்பாபிசேகம் செய்தபின் கையாளப்படும் நடைமுறையானது அடுத்த தடவை கும்பாபிசேகம் செய்யும் வரைமாற்றியமைத்தல் ஆகாது என்பதே பொது நியதியாகும். இதனை நினைத்தபடி மாற்றியமைக்க எந்த அடியவர்களும் விரும்பமாட்டார்கள். இந்த விடயம் கடந்த கால நிர்வாகத்தால் தவறாக செயற்படுத்தப்பட்டிருப்பதை அறிந்திருந்தால், அதனைத் தட்டிக் கேட்டு மாற்றியமைக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம்; பேச்சுக்கள் மூலம் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று கருதியிருந்தால் நீதிமன்ற உதவியையாவது நாடி அதற்கான தீர்வைப் பெற்றிருக்கலாம். அதனை விடுத்து தற்போது திருவிழாக்களை மாற்றியமைக்க முயற்சிப்பது எமது சமயத்திலுள்ள அடியவர்களின் மனங்களை புண்படுத்துவதாக அமைவதோடு, எமது சமயத்தின் மீதுள்ள மதிப்பு மரியாதை என்பனவும் குறைந்துவிடும் என்றே கருதக்கூடியதாக உள்ளது.

சனசமூக நிலையம், பொது ஸ்தாபனங்கள் வருடமொருமுறை தீர்மானங்களை மாற்றிக் கொள்வதை எவரும் பாரதூரமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஆன்மிகத்துடன் தொடர்புடைய மத சம்பந்தமான விடயங்களில் எந்தவொரு காலத்திலும் நிர்வாகிகளாக இருந்தாலும் சரி, பூசகர்களாக இருந்தாலும் சரி நான் என்ற சிந்தனையுடன் செயற்படுவதை விடுத்து மாற்றுக்கருத்துக்களுக்கும் மதிப்பளித்து ஆன்மிகத்துடன் கூடிய மத வளர்ச்சிக்காக உழைப்பதே நல்லது.

எமது கிராமத்தில் உள்ள ஆலயம் எமக்குத் தேவை. இதில் எல்லோரும் நாங்கள் அடியவர்கள். எல்லோரும் இணைந்து இதில் செய்யவேண்டிய பணிகளை செயற்படுத்தி அடுத்தவரோ, அடுத்த கிராமத்தில் உள்ளவர்களோ, அரசியல்வாதிகளோ, நீதிமன்றமோ தலையிடாதவாறு நாமே பேசித் தீர்த்துக் கொள்வோம் எனச்செயற்பட முனைந்தால் பிணக்குகள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. தடைப்பட்டிருக்கும் திருப்பணிகள் தாமதமின்றி நடைபெறும். எனவே ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற அடிப்படையில் எல்லோரும் இணைந்து செயற்படுவதன் மூலம் முன்னுதாரணமான ஓர் ஆலயமாக இதனை இயக்க வைக்க முடியும்.

பல அறிவாளிகளை உருவாக்கிய கிராமமென்பதோடு மட்டுமல்லாமல், தற்போதைய வடமாகாண முதல்வர், மத்திய அரசின் இந்து கலாசார அமைச்சர், மறைந்த கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம், சோமசுந்தரப்புலவர் பிறந்த இடமும் மானிப்பாயேயாகும்.

எனவே ஒவ்வொரு நபரும் மற்றையவர்களை எனது நிகழ்ச்சிநிரலுக்குப்பின்னேவாருங்கள்என்றுகூறும்மனோ நிலையில் இருந்து விலகி, நாம் எல்லோரும் இணைந்து செயற்படுவோம் என்ற நிலைக்கு இறங்கி வருமிடத்து பிரச்சினைகளை இலகுவில் முடிவுக்குக் கொண்டுவரலாம். தற்போதுள்ள நடைமுறை மாற்றப்படவேண்டுமாயின் அதனைத்திட்டமிட்டுச் செயற்படுத்தி அடுத்த கும்பாபிசேகத்துடன் மாற்றியமைப்பதே பொருத்தமானது.

கே.என்.எஸ்

## நானாட்டான் முருங்கன் பாதைச் சீர்கேடும் பஸ் சேவையும்

நானாட்டான் பிரதேச செயலகம், பிரதேச சபை என்பவை நானாட்டான் எனுமிடத்தில் அமைந்துள்ளன.

இசைமாலைத்தாழ்வு தொடக்கம் வங்காலை வரையிலான கிராம மக்கள் தங்கள் தேவைகளுக்காக அடிக்கடி நானாட்டான் செல்ல வேண்டிய நிலையுள்ளது. ஆனால் அளக்கை தொடக்கம் புளியடி வைத்தியசாலை வரையுள்ள பாதை பழுதடைந்து குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது. அத்துடன் தினந்தோறும் காலையில் மன்னாரிலிருந்து 8 மணிக்கு வங்காலை நானாட்டான் ஊடாக முருங்கனுக்கு ஒரே ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. அந்தப் பேருந்தில் நானாட்டானுக்கு செல்லும் மக்கள் தங்கள் தேவைகளை முடித்துவிட்டு நடந்தோ அல்லது ஓட்டோக்களிலோதான் வீடு திரும்ப வேண்டிய அவலநிலை ஏற்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை உணர்ந்து குறிப்பிட்ட பாதையை செப்பனிட்டு சேவையில் ஈடுபடும் இ.போ.ச பஸ்ஸை இரண்டு தடவையாவது சேவையிலீடுபடுத்தி மக்கள் தேவையை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.


மக்கள் நலன் விரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீனாவின் கினான் மாகாணத்தில் அமைந்துள்ள சொங்ஷான் மலையில் வோலின் துறவிகள் குங்பூ பயிற்சி மேற்கொண்டுள்ளனர். மலையின் விளிம்பில் உயிரைப் பணயம் வ...டுள்ளனர். சீனாவின் பயங்கரமான 5 மலைகளில் இதுவும் ஒன்று ஆகும்.

## உலகின் மிகநீளமான பாம்பு அமேசன் காட்டில் பிடிபட்டது



அமேசன், மார்ச் 19
உலகின் மிக நீளமான பாம்பு அமேசன் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பி.பி.சியின் பழங்குடியினர் தொடர்பான ஆவணப்படத்தின்போது 17 அடி நீளமான அனகொண்டா பாம்பு கண்டு பிடிக்கப்பட்டது.

வோரனி பழங்குடி இனத்தவரின் வாழ்வு முறை படம் பிடிக்கப்பட்டது. குறித்த பழங்குடி இனத்தவர்களின் வாழ்வாதாரங்களில் ஒன்றாக அனகொண்டா பாம்பு வேட்டையும் காணப்படுகிறது.

மனிதரை விழுங்கக் கூடிய விலங்காக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட போதிலும், வோரனி பழங்குடியினர் இவ்வகைப் பாம்பின் மூலம் சிறப்பான சக்தி கிடைப்பதாக நம்புகின்றனர் என ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அனகொண்டா மூலம் எண்ணெய் வளம் அதிகரிக்கும் என்ற கூற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை என அந்த ஆவணப்படத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

கோர்டன் எனும் ஆராய்ச்சியாளர் குறித்த ஆவணப்படத்துக்காகச் சென்றிருந்தார். அவர் அங்கு 2 வாரங்கள் தங்கி இருந்து இவற்றைப் படம் பிடித்துள்ளார்.

ஆண்கள் வேட்டையாடுவதும், பெண்கள் தமது சூழலில் பயிரிட்டு வாழ்வதையும் காணக் கூடியதாக உள்ளது. மேலும் காட்டு விலங்குகளுடன் நட்பான உறவில் அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளமை ஆவணப்படத்தில் பதியப்பட்டுள்ளது. (த-ரி4)

## கொரியத் தீபகற்ப... வடகொரியா ஏவுக...

சியோல், மார்ச் 19
வடகொரியா நேற்றுக் கொரிய தீபகற்பத்தில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது எனத் தென் கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிகாரிகளும் ஏவுகணைத் தாக்குதலை உறுதி செய்துள்ளனர். இந்தத் தாக்குதல் அதிகாலை 5 ... பெற்றுள்ளது. தென் கொரியாவில் இருந்து ... தூரத்தில் ஏவுகணை வீழ்ந்ததாகத் தெரிவிக்... ஜப்பான் பிரதமர் வடகொரியாவின் இந்த ந... டனம் தெரிவித்துள்ளார். மேலும், வடகொரியா... நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்...

## அகதிகளைத் துருக்கிக்கு அனுப்... ஐரோப்பிய ஒன்றியம் திட்ட...

### 4.7 பில்லியன் பவுண்டுகள் பேரம்



பாரிஸ், மார்ச் 19
அகதிகளைத் துருக்கிக்கு அனுப்ப ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர். 4.7 பில்லியன் பவுண்டுகள் பணத்தை துருக்கிக்குக் கையளித்து விட்டு அகதிகளைத் துருக்கிக்கு அனுப்ப 28 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. புரூசல்ஸில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டத்தொடரில் இந்த நாடு கடத்தும் முடிவு எடுக்கப்பட்டது.


துருக்கிக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் ஐரோப்பிய எல்லையில் அகதிகளின் புரள்வைக் குறைக்க முடியும் என ஐரோப்பிய ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவில் நிலவும் அகதிகள் நெருக்கடி, மனிதாபிமானத் தேவைகள் காரணமாக அயல் நாடான துருக்கிமீது இந்த அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் 2.7 மில்லியன் அகதிகளைப் பராமரிப்பதற்கு 4.7 பில்லியன் பவுண்ட்டுகள் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இது குறித்துத் துருக்கிப் பிரதமர் தமது நாட்டு அதிகாரிகளுடன் கலந்தாலோசனை நடத்தவுள்ளார். இதற்குத் து... சம்மதித்தால் அதற்கான திட்டமிடுதல் மேற்கொள்ளப்... எனவும் தெரிவிக்கப்பட்டது.

புரூசல்ஸில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாட்டுத் ...வர்கள் ஒவ்வொருவரும் அகதிகள் பிரச்சினை குறி... தமது கருத்துகளை முன்வைத்தனர். (த...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம் வைத்து இந்தப் பயிற்சியில் இவர்கள் ஈடுபட (த-ரி4)

# ஈராக் ராணுவ விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளது ஐ.எஸ்.

பக்தாத், மார்ச் 19

ஈராக்கின் இராணுவ விமானமொன்று வடகிழக்கு கிர்குக் பகுதியில் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அந்த விமானத்தில் பயணித்த குழுவினர் அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர் என ஈராக்கின் கூட்டுப் படைத் தளபதி அறிவித்துள்ளார்.

இது குறித்து ஐ.எஸ். வெளியிட்ட அறிக்கையில்,

ஈராக்கின் இராணுவ விமானத்தைத் தாம் சுட்டு வீழ்த்தியதாக அறிவித்துள்ளது. இதில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என ஐ.எஸ். அமைப்பினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்த விமானத்தின் புகைப் படத்தையும் வெளியிட்டுள்ளனர். வெளியிட்ட புகைப்படத்தின் மூலம் இது ஈராக்கின் விமானம் என ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த ஈராக் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

(த-ரி4)

# பிரேசில் அரசுக்கு எதிராக பெரும் ஊழல் குற்றச்சாட்டு

## 30 லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம்

ரியோடி ஜெனிரோ, மார்ச் 19

பிறேசிலில் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ டா சில்வாவுக்கும், தற்போதைய ஜனாதிபதி டில்மா ரோசொப்புக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசிக் கலந்துரையாடல் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த உரையாடலில், ஊழலுக்கு எதிரான கைதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதியைப் பதவி ஒன்றில் அமர்த்துவது பற்றிப் பேசப்பட்டுள்ளது. குறித்த உரையாடல் வெளியிடப்பட்டதை அடுத்து பிரேசில் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். 30 லட்சம் மக்கள் அரசைப் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

றொசெப் லூயிஸ் இனாசியோவை ஊழலுக்கு எதிரான கைதிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் அவர் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டார். பதவியில் அமர்த்திய சில மணி நேரங்களின் பின்னர் அவரது ஊழல் வழக்கை கையாளும் நீதிபதி செர்ஜியோ மோரோ, பொலிஸாரால் பதிவு செய்யப்பட்ட பதவிக்கு வருவதற்கு முன்னர் நடைபெற்ற தொலைபேசி உரையாடலைப் பொது மக்கள் மத்தியில் வெளியிட உத்தரவிட்டார். இதனையடுத்து கடந்த புதன்கிழமை மாலை 50 தொலைபேசி உரையாடல்கள் ஊடகங்களின் மூலம் வெளியிடப்பட்டன.

பிறேசிலில் அமைச்சர்களை மட்டுமே உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்க முடியும். இதன் அடிப்படையில் லூயிஸ் அலுவலக உத்தியோகத்தராகப் பதவி வகிக்க திட்டமிடப்பட்டிருந்தது. லூயிஸ் ஊழலை தீவிரமாக மறுத்து வரும் நிலையில், கட்டுமான நிறுவனங்களிலும், எண்ணெய் நிறுவனங்களிலும் 2 பில்லியன் டொலர் அளவுக்கு ஊழல் இடம்பெற்றதாக புகார் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் இவரது பதவி ஏற்புக்கு எதிராக ஜனாதிபதி அலுவலகத்தை விட்டு வெளியேறும் படி 2 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து தொலைபேசி உரையாடலும் வெளியிடப்பட்டது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. ஆத்திரம் அடைந்த பொது மக்கள் லூயிஸ் பதவி விலக வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பச்சை, மஞ்சள் வர்ணங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் காட்சியளித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம், தடியடி நடத்தினர். இதனால் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள், கைகலப்புகள் இடம்பெற்றன. மக்கள் அரசுக்கு எதிரான சுலோகங்களுடனும், கோஷத்துடனும் வீதியில் வலம் வந்தனர்.

> றொசெப் லூயிஸ் இனாசியோவை ஊழலுக்கு எதிரான கைதிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் அவர் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டார். பதவியில் அமர்த்திய சில மணி நேரங்களின் பின்னர் அவரது ஊழல் வழக்கை கையாளும் நீதிபதி செர்ஜியோ மோரோ, பொலிஸாரால் பதிவு செய்யப்பட்ட பதவிக்கு வருவதற்கு முன்னர் நடைபெற்ற தொலைபேசி உரை யாடலைப் பொது மக்கள் மத்தியில் வெளியிட உத்தர விட்டார்.

நீதித்துறை மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், அரசமைப்பை அப்பட்டமாக மீறுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நீதிபதி மோரோ தெரிவித்தார். ஆனால் அவர் எவருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 30 லட்சம் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். நகரம் முழுவதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெள்ளம் போன்று காட்சியளித்தனர்.

(த-ரி4)




5 மணி அளவில் இடம்
ந்து 800 கிலோ மீற்றர்
விக்கப்பட்டுள்ளது.
5 நடவடிக்கைக்குக் கண்
யாவின் சுய பரி சோதனை
டிக்கைகள், கண்காணிப்

புகள் என்பவை கண்டனத்துக்குரியவை என அவர் தெரிவித்தார். அமெரிக்க – தென்கொரிய கூட்டுப்பயிற்சி, வடகொரியாவின் நான்காவது அணுகுண்டுச் சோதனை இவற்றுக்குப் பின்னர் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவுகிறது. இதுவரை இல்லாத அளவுக்கு வடகொரியா கடும் கோபத்தில் இருப்பதாக வடகொரியா சைபர் தரப்பினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

ப்ப
டம்



த்துருக்கி
ளப் படும்

டுத் தலை
குறித்துத்
(த-ரி4)

# ஐ. எஸ். தாக்குதலில் ரஷ்யப் படையினர் சாவு

மத்திய சிரியாவின் ஹோம்ஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள பல்மைரா நகரம் அருகே ஐ. எஸ். தீவிரவாதிகளுக்கும், சிரிய படைகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 5 ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டதாக சர்வதேசச் செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் மிகைல் பண்டநூப் என்ற ரஷ்ய இராணுவ ஆலோசகரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை மோதலில் ரஷ்யப் படையினர் பலர் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி)





ஹவாயில் எரிமலை ஒன்று 33 வருடங்களாக இடைவிடாமல் நெருப்பை உமிழ்ந்து வருகிறது. பொவு- உ- ஓ எனு இந்த எரிமலை பிவாவோவா எரிமலையின் தொடர்ச்சியாகும். இதுவரை இந்த எரிமலை 189 கட்டடங்கள சேதப்படுத்தியதுடன், ஹவாயின் புராதன நகரங்களை எரித்துள்ளது. அத்துடன் வீதிகள் பாதைகளையும் உருகுலைத்துள்ளது. மேலும் நிலப்பரப்பைச் சேதப்படுத்துவதுடன், நச்சுப்புகையையும் வெளியிட்டு வருகிறது. ஆனாலு இது கடலில் சங்கமிக்கும் காட்சி பலரையும் ஈர்த்துள்ளது. (த-ரி4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்




*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் விருச்சிகம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள்)*

## விருச்சிகம்

குனிந்து, பணிந்து, பயந்து செல்லும் பணக்காரனை விட நிமிர்ந்து நிற்கும் ஏழையே சிறந்தவன் என்பதை அறிந்த நீங்கள் ஏற்றத்தாழ்வுகளை விரும்பாதவர்கள்.

**ராகுவின் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசிக்கு பதினோராம் வீட்டில் அமர்ந்து கொண்டு தொட்ட காரியங்களைத் துலங்க வைத்ததுடன், ஓரளவு செல்வம், செல்வாக்கையும் தந்த ராகு பகவான், இப்போது உங்கள் ராசிக்கு பத்தாவது வீட்டில் வந்து அமருகிறார். எனவே மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். உங்களுடைய நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வளைந்து கொடுத்தால்தான் வானம் போல் உயரலாம் என்பதை உணருவீர்கள்.

**ராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அயல்நாட்டு தொடர்புடைய நிறுவனத்தில் அதிக சம்பளத்துடன் புது வேலை அமையும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள். தவணை முறையில் பணம் செலுத்தி வாகனம் வாங்குவீர்கள். மனைவியின் உடல் ஆரோக்கியம் சீராகும்.

கேதுவின் மகம் நட்சத்திரத்தில் ராகுபகவான் செல்வதால் முன் கோபம், சிறுசிறு விபத்துகள், பேச்சால் பிரச்சினைகள் வந்து போகும். கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து ஏமாற வேண்டாம். அவசர முடிவு எடுத்தலைத் தவிர்க்கப் பாருங்கள். திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் நீங்கள் இருப்பீர்கள்.

**மாணவ, மாணவிகளே!**

சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். தேர்வு நேரத்தில் படித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள். வேதியியல் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனையின் போது அமிலங்கள் கைகாலில் சிந்தி விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கட்டுரை, பேச்சு, இலக்கிய போட்டிகளில் பரிசு பெறுவீர்கள்.

**கன்னிப் பெண்களே!**

உங்களின் கனவு நனவாகும். காதல் கனியும். புதிய நண்பர்களால் உங்கள் பிரச்சினைகள் பாதியாகக் குறையும். சிலருக்கு வேலையில் இடமாற்றம் வரும். திருமணம் தள்ளிக் கொண்டே போனதே அரசியல்வாதிகளே! கோஷ்டிப் பூசலால் பதவியை இழக்க வேண்டி வரும். தொகுதியில் நடக்கும் நல்லது கெட்டதில் கலந்து கொண்டு மக்களின் அனுதாபத்தைப் பெறுவீர்கள். உங்களின் செயற்பாடுகளை மேலிடம் உற்று நோக்கும்.

**கலைத்துறையினரே!**

சம்பளப் பாக்கி கைக்கு வரும். யதார்த்தமான படைப்புகளைக் கொடுங்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். குறைந்த செலவிலான படைப்புகள் வெற்றி பெறும்.

**விவசாயிகளே!**

பூச்சித் தொல்லை, எலித் தொல்லை வெகுவாகக் குறையும். பாசனத்துக்குப் போதிய தண்ணீர் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். கணிசமான லாபம் வரும். என்றாலும் தொழில் ஸ்தானத்தில் ராகு அமர்வதால் சின்னச் சின்ன நட்டங்கள் வந்து போகும். எதிர்பார்த்த வேண்டுகை தாம தமாக வரும். வேலையாள்களைப் பணியில் அமர்த்தும் போது விசாரித்துச் சேர்ப்பது நல்லது. உத்தியோக ஸ்தானமான 10ம் இடத்தில் ராகு அமர்வதால் உத்தியோகத்தில் இடமாற்றம், மறைமுக எதிர்ப்புகள், முகவரி இல்லாத குற்றச்சாட்டு கடிதங்களின் அடிப்படையில் சின்னச் சின்ன விசாரணைகளையெல்லாம் சந்திக்க வேண்டிய சூழல் வரும்.

**கேதுவின் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் அமர்ந்துகொண்டு முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றத்தையும், உறவுகள் மத்தியில் கசப்புணர்வுகளையும் தந்துவந்த கேது இப்போது உங்கள் ராசிக்கு நான்காம் வீட்டில் வந்தமர்வதால் மனஇறுக்கம், வீண் குழப்பங்களெல்லாம் விலகும். இனி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். அடிக்கடி கர்ப்பச்சிதைவு ஏற்பட்டவர்களுக்கு இனி அழகு, அறிவுள்ள குழந்தை பிறக்கும். நெடுநாள்களாகத் தடைபட்டு வந்த குலதெய்வப் பிரார்த்தனைகள், வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள்.

(தொடரும்)

# பகிடிவதை புரிவோருக்கு
# சாவுத்தண்டனை வழங்குங்கள்

**கீர்த்தி**

எங்களது பிள்ளை பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் எனத் தினம்தினம் கடவுளைத் துதித்து நம்பிக்கையோடு வாழும் பெற்றோர்களின் கனவைக் கண்ணீராக்கும் பல்கலைக்கழக பகிடிவதை மிகக் கொடியது. ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் என்றார் வள்ளுவர். அவ்வாறு பெருமிதம் அடைய முடியாமல் காலம் முழுவதும் கண்ணீருடன் வாழும் நிலையை உருவாக்கும் பகிடிவதையை ஒழிப்பது அரசின் கடப்பாடாகும்.

பாடசாலை செல்லும் ஒவ்வொரு மாணவரும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற இலக்குடன் பல கஷ்டங்களைத் தாண்டி கல்வி கற்று பல்கலைக் கழகம் செல்கின்றனர். பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்கள் தாம் சொர்க்கத்தை நோக்கிச் செல்கின்றோம், இனி எமது வாழ்வில் பேரொளி வீசும் என்ற நம்பிக்கையுடனும், பேரானந்தத்துடனும், பெருமிதத்துடனும் பல்கலையில் காலடி எடுத்து வைத்தால், அங்கே மாணவர்களுக்காகக் காத்து இருப்பது சாக்கடை நரகம், காரிருள். இதற்காகவா இத்தனை வருடங்கள் படித்தோம்? இவ்வாறு ஒரு வாழ்வு தேவையா? இதைவிடச் சாகலாம் எனச் சிந்திப்பதற்கும் தற்கொலை செய்வதற்கும் காரணமாக இந்தப் பகிடிவதைக் கொடுமை விளங்குகின்றது.

21 வருடங்களாக தினம் தினம் பக்குவமாய் வளர்த்தெடுத்து, பெற்றோர்கள் நற் பிரசையாக சமூகத்தில் உலவவிட்ட பிள்ளையை, ஒரு சில நாள்களில் குடிகாரனாகவும், புகைத்தல் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவனாகவும், ஓரினச் சேர்க்கையாளர்களாகவும் மாற்றுகின்ற ஓர் இடமாகவே பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன என்றே கூறவேண்டும். தாம் சாதிக்க வேண்டும், எதிர்காலத்தில் சந்தோசமாக வாழவேண்டும், பட்டதாரியாக வேண்டும் என்ற பல வருடத் தவம் கனவு அனைத்தையும் சிதைத்து உயிர் வாழ்ந்தால் போதும் என இடைவிலகி அறிவுள்ள பிள்ளைகள், ஆற்றல் மிக்க பிள்ளைகள் கூலித்தொழிலாளியாக உருவாவதற்கும் பகிடிவதை காரணமாகின்றது.

பல்கலைக்கழக மாணவர் என்றால் ஒரு பெருமிதம்; பேரானந்தம்; சமூகத்தில் பெரும் அந்தஸ்து, கௌரவம், கிடைக்கின்றது. பல்கலைக்கழகத்தில் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களுக்கு அது ஒரு தாயின் பிரசவத்துக்கு ஒப்பானது. முதல் சுற்றில் பல்கலையால் இடை விலகினால் சுகமாக வரலாம். அதைச் சகித்தால் பைத்தியமாக, அதையும் தாண்டினால் பிணமாக அதிலும் தப்பினால் தான் பட்டதாரியாக குறித்த இலக்கை அடைய முடியும் என்ற நிலையே நிலவுகின்றது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் போன்று, இறுதிக் கட்டப் போரில் இராணுவம் போன்று, பயங்கரம் அதைவிடப் பயங்கரமானது பகிடிவதையில் அகப்படும் மாணவர் வாழ்வு. முதுநிலை மாணவர்கள் பூனைகள் புதுமுக மாணவர்கள் எலிகள். அவர்களை விளையாட்டுப் பொருள்களாகப் பாவிப்பர், அடிமைகளை விடக் கொடுமைப் படுத்துவர். ஆண் பெண் வேறுபாடின்றி இருசாராரும் கொடுமைகளைப் புரிகின்றனர். மாணவர்களை நிர்வாணமாக்கி சொல்ல முடியாத , நினைத்துப் பார்க்க முடி யாத அருவருப்பான செயல்களைப் புரியுமாறு வற்புறுத்துகின்றனர்.

பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் எதிர்கால தலைமுறையின் நலனைக் கருத்தில் கொண்டு இத்தகைய கொடிய பகிடிவதைக் கலாசாரத்தை இல்லாதொழித்து பகிடிவதை செய்வோர் மீது ஈவுஇரக்கமின்றி வழக்குப் பதிவு செய்து தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பாலியல் படுகொலை செய்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் எனக் கோரும் பொது அமைப்புக்களும், மக்களும், பல மாணவர்களின் தற்கொலைச் சாவுக்கும், உளப்பாதிப்புக்கும், இடைவிலகலுக்கும் காரணமானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன்?

இன்று மௌனமாக இருக்கும் ஒவ்வொருவரும் இந்தப் பிள்ளைகளின் சாவு, உளப்பாதிப்பு என்பவை எந்த நேரமும் உங்கள் பிள்ளைகளுக்கு வரலாம் என்பதை உணர்ந்து, வருமுன் காக்க முற்பட வேண்டும். பகிடிவதைக் கலாசாரத்தை நிறுத்தத் தவறினால் ஒவ்வொரு நொடியும் காத்திருங்கள் எந்தச் செய்தியும் வரலாம்.

> **ஆண் பெண் வேறுபாடின்றி இருசாராரும் கொடுமைகளைப் புரிகின்றனர். மாணவர்களை நிர்வாணமாக்கி சொல்ல முடியாத , நினைத்துப் பார்க்க முடியாத அருவருப்பான செயல்களைப் புரியுமாறு வற்புறுத்துகின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




> பெண்ணொருவர் நள்ளிரவில் நகைகள் அணிந்தவாறு வீதியால் சென்று நகைகளுடனும் கற்புடனும் வீடு திரும்ப முடியுமானால் அதுவே உண்மையான சுதந்திரம்; அன்றைக்கே சுதந்திரம் கிடைத்ததாகக் கூறவேண்டும் என்ற கூற்றுக்கு இணங்க புலிகளின் கட்டுப்பாட்டில் நீதி நிலைநாட்டப்பட்டது.

# மக்களுக்குக் கவசமாக திகழ்ந்த தமிழீழ நீதிக் கட்டமைப்பு.

**அனந்தன்**

தமிழீழக் காவல்துறை, தமிழீழ புலனாய்வுத் துறை என்பவற்றின் ஆற்றலும் செயற்றிறனும் இந்த நாடு மட்டுமன்றி முழு உலகமும் அறிந்த ஒன்று. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் புலிகளின் ஆட்சிப் பரப்பில் அவர்களின் நிர்வாகம், அவர்களுடைய புலனாய்வு என்பவற்றின் மூலம் அவர்கள் நல்லதொரு ஆட்சியை மேற்கொண்டனர்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு, பெண்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகம் உட்பட அனைத்துக் குற்றச்செயல்களும் புலிகளின் காலத்தில் குறைவு என்பதை விட இல்லை என்றே கூறலாம், தமிழீழ காவல் துறையின் நேர்மையான கறைபடியாத, செயற்றிறன் மிக்க செயல்களாலும் தமிழீழ நீதித்துறையின் சரியான தண்டனை களாலும் மக்கள் கொடிய போர் தவிர்ந்த ஏனையவற்றில் நிம்மதியாக வாழ்ந்தனர்.

வித்தியாவின் கூட்டுவல்லுறவின் பின்னரான படுகொலை, ஹரிஸ்ணவியின் வல்லுறவின் பின்னரான படுகொலை என்பவற்றுக்கு வட, கிழக்கு மாகாணங்களில் எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள், பல்கலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் ஆர்ப்பாட்டங்களை மேற் கொண்டனர். இருக்க வேண்டியவர்கள் இருந்தால் இவ்வாறு நடக்குமா என அவர்கள் தாங்கியிருந்த பதாகைகளில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. இதிலிருந்து புலிகளின் நல்லாட்சியை நன்கு உணரமுடியும்.

பெண்ணொருவர் நள்ளிரவில் நகைகள் அணிந்தவாறு வீதியால் சென்று நகைகளுடனும் கற்புடனும் வீடு திரும்ப முடியுமானால் அதுவே உண்மையான சுதந்திரம்; அன்றைக்கே சுதந்திரம் கிடைத்ததாகக் கூறவேண்டும் என்ற கூற்றுக்கு இணங்க புலிகளின் கட்டுப்பாட்டில் நீதி நிலைநாட்டப்பட்டது.

பெண்ணொருவர் தனித்துச் சென்றால் சகோதரியாக, மகளாக ஏற்று அந்தப் பெண்ணின் முகவரியில் அவரைச் சேர்த்துச் சென்றவர்கள், இன்று பெற்ற மகளையே கூட்டுச் சேர்ந்து பலாத்காரம் செய்யும் அளவுக்கு நிலைமை உள்ளது என்றால் அதற்குக் காரணம் என்ன? நாடு முழுவதும் வழிப்பறி, கொள்ளை, திருட்டு, துஷ்பிர யோகம், பலாத்காரம் என நாடே சீரழிந்து செல்கிறது. இவை புலிகளின் காலத்தில் இடம்பெறாமைக்கு காரணம் என்ன என்று அரச தரப்பும், இலங் கைப் பொலிஸாரும், நீதித்துறையும் சிந்திப்பார்களேயானால், புலிகளின் புலனாய்வுத்துறை, தமிழீழ காவல்துறை நீதித்துறை என்பவற்றின் கட்டமைப்பு, கட்டுப்பாடு, தண்டனை, அவர்களுடைய மக்களுக்கான, மக்களுடனான செயற்பாடு என்பவற்றாலேயே இது சாத்தியமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்களால் மக்கள் புலிகளின் ஆட்சியை நினைவு கூருவதையும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க அவர்களைத் தேடுகின்றனர் என்பதையும் அரசும், பொலிஸாரும் புரிந்துகொண்டிருப்பர்.

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம்ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கா யாழ். பொலிஸாருக்குக் கூறிச் சென்ற பின்னர், வீட்டில் உள்ளவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நீதிபதி இளஞ்செழியனது கடுமையான நடவடிக்கை மற்றும் குற்றங்களுக்குரிய சரியான தண்டனை என்பவை வழங்கப் பட்டபோதும், குற்றச் செயல்களைக் குறைக்க முடியவில்லை. காரணம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நட்பு, நம்பிக்கை போதிய அளவில் இல்லை. தமிழீழக் காவல் துறைக்கும் மக்களுக்கும் இடையிலான நட்பு, நம்பிக்கை போன்றனவே அவர்கள் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்த முக்கிய காரணிகளாகும்.

இலங்கையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஆட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கும்வேளையில் ஒரு நிறுவனம் இலங்கை முழுவதும் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொண்டது. இப்போதைய ஆட்சியிலும் 2014 ஜனவரிக்கு முன்னரான ஆட்சியிலும் வாழ்க்கைச்செலவு, போக்குவரத்துப்பிரச்சினை, அடிக்கட்டமைப்புப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, இனமத முரண்பாடு, பெண்களின் பாதுகாப்புப் பிரச்சினை, திருட்டுக் கொள்ளை போன்றவற்றை இது அடிப்படையாகக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான பாதுகாப்பில்லை என்பது முக்கியம் பெற்றிருந்தது. அதன் பின்னரே கொள்ளை திருட்டு, வழிப்பறி போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். வாழ்க்கைச் செலவு கூடினால் பரவாயில்லை அதைப் பிறகு பார்க்கலாம், முதலில் எமக்கு மானம் முக்கியம், பிள்ளைகளின் வாழ்வு முக்கியம், பசி கிடந்தாலும் ஒருவேளை கஞ்சி குடித்தாலும் நிம்மதியாக சந்தோசமாக வாழ வேண்டும் என்றே கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்டிருந்தனர்.

நாம் நல்லாட்சி நடத்துகின்றோம், இங்கே அனைத்து மக்களுக்கும் சம உரிமை என்று கூறும் அரசு, நாட்டில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்துவதற்கு புனர்வாழ்வு அழிக்கப் பட்டு விடுதலை செய்யப்பட்ட தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள், தமிழீழ புலனாய்வுத் துறையினர் என்பவர் களை காவல்துறையில் இணைப்பதன் மூலம் அல்லது அவர்களின் உதவியை ஏதாவது ஒரு வகையில் பெறுவதன் மூலம் பயன்பெற முடியும்.

போரின் இறுதிக் கட்டத்தில் புலிகளின் ஆயுத உற்பத்தி நிலையம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட கால கட்டத்தில், மகிந்த ராஜபக்சவால் புலி உறுப்பினர்களைப் புனர் வாழ்வு அளித்து நாட்டின் முன்னேற்றத்துக்காகச் செயற்படுத்துவேன் எனக் கூறப்பட்டதாகக் கேள்விப்பட்டிருந்தேன்.

ஏன் அதை இந்த நல்லாட்சி அரசு செய்யக் கூடாது. தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் வழங்கப் படாமையே போருக்கான காரணம். அது முன்னைய ஆட்சியாளர்கள் செய்த தவறு, அதை நாங்கள் நிவர்த்தி செய்வோம் எனக் கூறும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசு, இவ்வாறு கூறியது உண்மை என்றால், புனர்வாழ்வு அளிக் கப்பட்ட காவல்துறை, புலனாய்வாளர்களைப் பயன்படுத்தி மக்களின் நல்லாட்சிக்கு வழி கோலலாம்.



இப்போது நடப்பது போன்ற நல்லாட்சி தொடர்ந்தால், மேலும், தமிழருடைய உரிமைகள் வழங்கப்பட்டால், தமிழர்கள் ஆயுதம் ஏந்த மாட்டார்கள், புலிகள் உருவாக மாட்டார்கள், நாட்டில் கொடிய போர் ஏற்பட்டு தமிழினமும் எமது சகோதர இனமான சிங்கள இனத்தின் எதிர்காலச் சந்ததியும் அழிவடையாது . நிம்மதியான வாழ்வை என்றென்றும் வாழலாம். ஒரு நாடு இரு தேசம் என்பது போன்று ஒரு நாட்டுக்குள் ஒற்றுமையாக வாழ்ந்து இலங்கைத் தீவை சிங்கப்பூரைவிட முன்னேற்றி உலகத்தை விஞ்சி சிறப்பாக வாழமுடியும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதை

1) விடிய, விடிய பூந்தோட்டம். விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் அது என்ன?
2) சித்தூர் சிறு மணலிலே காய்க்கும் கத்தரிக்காய். கூட்டிப் பார்த்தால் கொம்புக்கு முப்பது காய். அது என்ன?
3) அத்துவானக் காட்டுக்குள்ளே குடை பிடிக்கிறார். அவர் யார்?
4) பாயைச் சுருட்டவும் முடியாது, பாக்கை எண்ணவும் முடியாது. அது என்ன?
5) காட்டிலே இருக்கும் குடை, வீட்டில் இல்லாத குடை. அது என்ன?
6) கிண்ணத்தில் நிறையத் தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை. அது என்ன?
7) இரத்தத்தில் வளர்வது ஆனால், இரத்தம் இல்லாதது அது என்ன?
8) பற்கள் பல உண்டு ஆனால், கடிக்கத் தெரியாது. அது என்ன?
9) தண்ணீரில் நீந்தி வரும், தரையில் தாண்டி வரும். அது என்ன?
10) ஆடையில்லாத கறுப்பழகி, ஆடிச் சுழன்று பாடுகிறாள் அவள் யார்?
11) வெட்டிக் கூறுபடுத்தி வைக்கிறார்களே தவிர எவரும் தின்பதில்லை. அது என்ன?
12) மூன்று நிறக் கிளிகளாம் கூண்டில் போனால் ஒரு நிறம். அது என்ன?

## விடைகள்

1) நட்சத்திரங்கள்
2) கோப்பிச் செடி
3) காளான்
4) வானம், நட்சத்திரம்
5) காளான்
6) இளநீர்
7) நகம்
8) சீப்பு
9) தவளை
10) இசைத்தட்டு
11) சீட்டுக்கட்டு
12) தாம்பூலம்

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# ஐந்திணை : பாலை

"வணக்கம் குழந்தைகளே! நான்தான் பாலைப்பூ."

வறண்ட நிலத்தில் பயணம் செய்தனர் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள். வழியெங்கும் முட்புதர்ச் செடிகள். ஆங்காங்கே பனை மரங்கள். அப்போதுதான் வறண்ட பாலையிலும் செழிப்பாக பூத்திருக்கும் பாலைப் பூக்களைப் பார்த்தனர். பகலில் பூத்த விண்மீன்களைப் போல் அவை வெண்ணிறத்தில் இருந்தன.

குழந்தைகளுக்குள் ஒரு சிந்தனை. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு பூவின் பெயரைச் சூட்டியுள்ளனர். இவை அனைத்தும் வெவ்வேறு வகை தாவரங்களின்



பூக்கள். குறிஞ்சி என்பது ஒரு செடிப் பூ. முல்லை என்பது கொடிப் பூ. மருதம் என்பது மரப் பூ. நெய்தல் என்பது நீர்ப் பூ. பாலை என்பதோ ஒரு புதர்ப் பூ.

"என்ன யோசனை குழந்தைகளே?"

"ஒன்றுமில்லை, பாலைப் பூவே, பாலைத் திணை என்றால் ஒட்டகங்கள் மேயும் பாலைவனமாக இருக்கும் என நினைத்தோம். இங்கு தாவரங்களும் இருக்கின்றனவே" என்றான் முகில் எனும் சிறுவன்.

"பாலை என்றதும் தார் பாலைவனம் நினைவுக்கு வந்துவிட்டதா? பாலைத் திணை என்பது வறண்ட நிலப் பகுதி. அதாவது குறிஞ்சியும் முல்லையும் வறண்டு போனால், அதுதான் பாலைத் திணை. ஆனால், இன்றைக்கு குறிஞ்சி, முல்லை மட்டுமல்ல, கூடவே மருதமும், நெய்தலும்கூட பாலை நிலமாக மாறிக் கொண்டிருக்கின்றன. நாளை பாலையும் வறண்டுபோனால், அதற்கு என்ன பெயர் வைப்பார்கள் எனத் தெரியவில்லை. அதோ பாருங்கள்!"

பாலைப் பூ சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தார்கள் குழந்தைகள். அங்கே தொலைவில் ஒரு தொழிற்சாலை.

"அங்குஎன்ன செய்கிறார்கள்?" என்று கேட்டான் முகில்.

"மண்ணிலிருந்து தாதுக்களைப் பிரிக்கும் தொழிற்சாலை அது. எல்லா தாதுக்களையும் இப்படிப் பிரித்து எடுத்து விட்டால், நாளை இந்த மண்ணில் நான்கூட முளைக்க முடியாது" என்றது பாலைப் பூ.

குழந்தைகள் பெருமூச்சு விட்டனர். மனிதர்களின் பேராசையால் அழியும் ஐந்திணைகளின் இன்றைய நிலையை நினைத்துப் பார்த்தனர்.

அப்போது சரியாக ஆள்காட்டிப் பறவை கத்தும் ஓசை கேட்கிறது. டிட் யு டூ யிட்... டிட் யு டூ யிட்...

குழந்தைகளின் காதுக்கு ஆங்கில மொழியில் அது இப்படி ஒலிக்கிறது, Did you do it?... Did you do it?... நீயா செய்தாய்? நீயா செய்தாய்?

குழந்தைகள் முணுமுணுக்கின்றனர். இல்லை, இந்த அழிவை நாங்கள் செய்யவில்லை. இனி எவரையும் செய்யவும் விட மாட்டோம்.

# எனது அன்புத் தெய்வம்



அம்மாவே எனது தெய்வம்
பத்துமாதம் சுமந்து பெற்று
கண்துஞ்சாது எனைக் காத்து
கனவிலும் கடிதல் அறியாது
அன்பையே ஊட்டி வளர்த்த
அன்புத் தெய்வம் அம்மாதான்
அம்மாவின் பாதங்களைப் பற்றினால்
தீர்ந்துவிடும் எனது துன்பங்கள்
எனது அன்புத் தெய்வம்
நீண்டநாள் நீடுழி வாழவேண்டும்
எனது பிரார்த்தனை இதுதான்

–சு.றிசானி.



# வரலாற்றில் இன்றைய தினம்

1279 – யாமென் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் மங்கோலியாவின் வெற்றியுடன் சீனாவில் சோங் அரச பரம்பரை முடிவுக்கு வந்தது.
1861 – நியூசிலாந்தில் முதலாவது தரனாக்கிப் போர் முடிவுக்கு வந்தது.
1915 – புளூட்டோவின் ஒளிப்படம் முதற்தடவையாக எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கோளாகக் கருதப்படவில்லை.
1918 – நேர வலயங்களை ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நிறுவி பகலொளி சேமிப்பு நேரத்தை அங்கீகரித்தது.
1932 – சிட்னி துறைமுகப் பாலம் திறந்து வைக்கப்பட்டது.
1972 – இந்தியாவும் வங்காள தேசமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
1982 – போக்லாந்து போர்: ஆர்ஜெண்டீனியர்கள் தெற்கு ஜோர்ஜியா தீவில் தரையிறங்கினர்.
2002 – ஐக்கிய அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பு முடிவுக்கு வந்தது.
2004 – தாய்வான் பிரதமர் சென் ஷுயி-பியான் துப்பாக்கிச் சூட்டினால் காயப்படுத்தப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லியூர்த்தேவி

# பெண்களுக்கும் சம உரிமை வேண்டும்

அனைத்துலக ரீதியில் நோக்கும் போது, பெண்களின் சமூக நிலையும், அவர்கள் தத்தமது உரிமைகளை அனுபவிக்கும் வசதியும் முன்னர் இருந்ததைவிட தற்போதைய காலகட்டத்தில் கணிசமான அளவு முன்னேற்றம், வளர்ச்சி கண்டுள்ளதை உணரக் கூடியதாக உள்ளது. முன்னரைப்போலன்றி பலதுறைகளிலும் ஆண்களுடன் சமநிலையில் பயணிக்கின்றார்கள் பெண்கள் என்பது வெள்ளிடை மலை. இருந்த போதிலும் பல நாடுகளில், நகரங்களில், பிரதேசங்களில், கிராமங்களில் பெண்கள் தத்தமது உரிமைகளை முழு அளவில் அனுபவிக்கக் கூடிய நிலையில் சமூக நிலை முற்றாக மாறாதுள்ளதையும் அவதானிக்கக் கூடிய தாக உள்ளது.



பெண்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு பரவலாக இருந்தாலும், அவர்களைப் பற்றிய சமூகத்தின் புரிந்துணர்வு வளர்ச்சியடையவில்லை என்றே கூறக்கூடியதாக உள்ளமை கண்கூடு. பெண்கள் தாங்கள் பெற்ற கல்வி அறிவினூடாகவும், பெற்றார்களின் குறிப்பாக, தாயாரின் வழிகாட்டலினூடாகவும். விழிப்புணர்வு பெற்றுத் தமது உரிமைகளைத் தாமாகப் பெற்றுள்ளார்கள். ஆனால் ஆணாதிக்கச் சக்திகளால்மேற்கொள்ளப்படும், பெண்களின்மனநிலையையும், உடல் நிலையையும் பாதிக்கும் பலவகை இம்சைகள், கொடுமைகள் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையை இல்லாதொழிப்பதற்கு, பெண்களின் உரிமைகள், நலன்கள் குறித்து ஆண்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பெண்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்க உதவி புரியும் அளவுக்கு ஆண்களின் மனநிலையை மாற்ற வேண்டும். இன்று பெண்களும் கல்வியில் முன்னேறி ஆணுக் குச் சமமாகத் தொழில் வாய்ப்பைப் பெற்று ஆணும் பெண்ணுமாகப் பொருளீட்டிச் சமத்துவம் பெற்றாலும், சமூக மட்டத்தில் இன்றும் மாற்றம் கிடைக்க வில்லை. அவளுக்குரிய உரிமைகளை, நலன் களை விட்டுக் கொடுப்பதில் கணிசமான திருப்திகரமான நிலைமை உருவாகவில்லை என்றே கூறலாம். எனவே ஆண்களிடமும் பெண்களிட மும் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு இரண்டும் வளர்ந்து வருமாயின், ஆண் ஆதிக்கமும் இல்லாது பெண் ஆதிக்கமும் இல்லாது சமநிலை உருவாகுமிடத்து சம வாய்ப்புக்கள் உருவாகும்.

நவீன, விஞ்ஞான, வர்த்தக, தொழிநுட்ப உலகில் இவற்றின் புரட்சிகரமான மாறுதல்களைக் கண்டு முன்னேற்றத்தின் விளிம்பில் நடை போட்டுக் கொண்டு விழிப்புப் பெற்ற மானுடம், மனிதப் பெறுமானத்தின் மகத்துவம் மேலானது என்ற செய்தியை ஊன்றிக் கிரகிக்கும் எவரும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதங்கள் காணமாட்டார்கள்.

ஆனால் இன்னமும் பேதங்கள் காண்பிக்கப்படுகின்றமையே வேதனையைத் தருகின்ற செயலாகின்றது. ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து உரிமைகள் மானிடர் சகல ருக்கும் உரியவையே என்ற நிலைக்கு தள்ளப்பட்டால், ஓரினம் இன்னோரினத்தை அடக்கி ஒடுக்கும் கருத்து நிலையில் விழிப்புணர்வு ஏற்பட்டு விடும். இன்று கல்வியின் ஊடாக விழிப்படைந்த பெண்களின் குரல்கள் கல்வி, அரசியல், நிர்வாகம், தொழில்துறை, விளையாட்டு, பாதுகாப்பு என எல்லா இடங்களிலும் ஓங்கி ஒலித்துக்கொண்டு இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. கல்வியில் விழிப்படைந்த பெண் கூட, அடக்கு முறையையும் சமூகக் கட்டமைப்புகளையும் வெல்ல முடியாதவளாக விளங்குகின்றாள் என்றால், எங்கேயோ விழிப்புணர்வு ஏற்படவில்லை என்பது புலனாகின்றது. எனவே ஆணாதிக்க சமூகத்தில் பெண்களுக்கு எந்தவித உரிமைகளோ, சமசந்தர்ப்பமோ கிடைக்கப்பெறாது. அதனைப் பெண்களாகவே பெற்றுக் கொள்ளும் வழிவகைகளைக் கண்டறிந்து செயற்பட வேண்டும். பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைப்பாடுகளை முன்னிறுத்தியே பெண்விடுதலைக் கோசங்கள் எழுப்பப்படுகின்றன. ஆனாலும், பெண்விடுதலை, பெண் உரிமைகள் என்றால் என்ன என்று அறியாத, உணராத நிலையே எமது சமூகத்தில் இன்றும் காணப்படுகின்றது.

அனைவரும் மனிதப் பிறவிகள். சட்டத்தின் முன் சமமாக வாழ அருகதை உடையவர்கள் என உள்நாட்டுச் சட்டங்களில் இருந்து ஐ.நா சாசனங்கள் வரை காணப்பட்டாலும், பெண்கள் மட்டும் சமமாக வாழும் நிலை ஏன் இன்னமும் ஏற்படவில்லை? எமது பெண்கள் ஏன் இன்னமும் சிந்திக்காமல் உள்ளனர்? பெண்கள் கல்வி கற்க முடியும். ஆனால் உயர் பதவி வகிக்க முடியாது. பெண்ணாலும் முடியும் என்பதை ஆண் சமூகம் ஏற்றுக் கொள்ளாது. பெண் ஆனவள் தன்னாலும் முடியும் என்பதைச் செயலில் காட்டி சம உரிமையைத் தனதாக்கிக்கொள்ளத் தலைப்பட வேண்டும்.

## பெற்றோர்களே சிந்தியுங்கள்




ஆண்டவர் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் தவக்காலத்தை அழுக்கற்ற சிந்தனையோடு அனுசரித்துக்கொண்டிருக்கும் நாம், பாவவாழ்வில் இருந்து விடுபட இந்தக் காலத்தை முழுமையாகப் பயன்படுத்துவோம்.

(உன் மகனின் ஒழுக்கக் கேட்டால் நீ அவமானம் அடையாதபடிக்கு அவனுக்குக் கற்பித்துக்கொடுத்து நன்நெறியில் பழக்கு) சீராக் 3013

பெற்றோர்களாகிய நாம் எமது பிள்ளைகளை எப்படி வழி நடத்துகின்றோம்? எமது சமூகத்தில், கொலை, கொள்ளை, போதைப்பொருள் பாவனை, ரவுடித்தனங்கள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற தீய செயல்களைச் செய்பவர்கள் ஒவ்வொரு தாய் தந்தையரின் பிள்ளைகள் தான். எமது பிள்ளைகள் செய்யும் தீயசெயல்களுக்கு ஒரு வகையில் நாமும் காரணம் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். நம் முன்னோர் மாதா, பிதா,குரு, தெய்வம் என்று தாய் தந்தையரை முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். நாம் எமது பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பியபடி ஆடை அணி கலங்கள், மோட்டார் சைக்கிள் உட்பட, வாங்கிக்கொடுக்கின்றோம். பின்பு பெற்றோல் நிரப்ப காசு ஏது என்று கேட்பதில்லை. விட்டது தொல்லை என பிள்ளைகளை தட்டிக்கழித்து வாழ் கின்றோம். எமது சுயநலத்துக்காக அடுத்தவர் நிம்மதியைக் கெடுக்கின்றோம். எமது பிள்ளைகள் இந்த நாட்டின் அடுத்த தலைமுறை வாரிசுகள். நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளை இந்த நாட்டுக்குத் தருவது பெற்றோர்களாகிய நாமே.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னைவளர்ப்பினிலே என்று ஒரு சினிமாப் பாடல் வரி உண்டு. ஆண்டவர் இயேசுவின் அன்பில் வாழும் பெற்றோர்களே, எமது பிள்ளைகளையும் அவருக்குள் இணைத்துக்கொள்வோம். தவக்காலத்தில் எமது பாவங்களை ஒப்புக் கொடுத்து மன்னிப்புக்கோரும் நாம், எமது பிள்ளைகளையும் ஆண்டவர் இயேசுவுடன் இணைத்து நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்ப நாமும் பங்களிப்போம். நடைபெறும் இந்தத் தவக்காலத்தில் பெற்றோர்களாகிய நாம், எமது பொறுப்புக்களை உணர்ந்து ஆண்டவர் இயேசுவின் பின்னால் வழிநடப்போம்.

ந.மரியநாயகம், கொழும்புத்துறை

# பத்து ஆண்டுகள் பதவியிலிருந்தும் இன்னும் விட்டுப்போகாத ஆசை

நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை இலங்கையில் கொண்டு வந்தவர், ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரே அதனை முழுமையாக அனுபவித்திருப்பாரோ தெரியாது. ஆனால் அதைப் பின்பற்றி வந்த, மகிந்த ராஜபக்ச அதன் உச்சபட்சத்தை அனுபவித்துள்ளார். அது போதாது என்று, ஆணைக் குழுக்களையும் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து முழு இலங்கையையும் ஆட்டிப் படைத்திருந்தார் மகிந்த ராஜபக்ச.

ஆறு ஆண்டுகள் பதவிக்கு ஆசைப்பட்டு இரண்டு ஆண்டுகள் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போய், இறுதியில் இருந்த பதவியையும் இழந்து நடுத் தெருவுக்கு வந்திருந்தார் மகிந்த ராஜபக்ச. இவரது ஆட்சிக் காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகின்ற ஊழல்கள் - முறைகேடுகள் தொடர்பில் இப்போது ஒவ்வொன்றாகத் தகவல்கள் வெளிக் கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன.

இதற்கு மேலாகப், போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த விடயங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வெளி வரத் தொடங்கியிருக்கின்றன. இவை எல்லாம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கின்றன. மகிந் தவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்ற தமிழ் மக்கள் இந்த ஒரு பக்கத்தை மாத்திரமே ரசித்துக் கொண்டிருக்கின்றனர்.

தினமும் மது அருந்தும் பழக்கமுள்ள ஒருவனால் ஒரு நாள்கூட மது அருந்தாமல் இருக்க முடியாது. அதற்கு அடிமையாகப் பழக்கப்பட்டவன் அதனைத் தினமும் அருந்துவதற்கே முயற்சி செய்வான். அதே போன்றுதான் மகிந்த ராஜபக்சவும், அவரது பரிவாரங்களும் செயற்படுகின்றனர்.

பதவியில் இருந்து சொத்துச் சுகங்களை நோகாமல் அனுபவித்தவர்கள், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து தங்கள் காற்சட்டைப் பைகளுக்குள் போட்டுக் கொண்டவர்களுக்கு, அதனை அனுபவிக்காமல் இருக்க முடியவில்லை. இது மட்டுமல்லாது, கடந்த காலங்களில் தாங்கள் மேற்கொண்ட மோசடிகள் வெளிச்சத்துக்கு வராமல் பார்க்க வேண்டும் என்ற கட்டாயமும் இருக்கின்றது.

இதனால்தான் மீண்டும் மகிந்த புராணம் பாடியபடி மக்களை பஸ்களில் கூட்டங்களுக்கு ஏற்றிச் செல்லும் நடவடிக்கை களைத் தொடங் கியிருக்கின்றனர். மீண்டும் பதவியைப் பிடிப்பதற்கு மகிந்தவும் அவரது பரிவாரங்களும் படிப்படியாக நடவடிக்கைகளில் இறங்கத் தொடங்கி விட்டார்கள்.




நாட்டில் தொடர்ச்சியான மின் தடை, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் என்பனவும், மகிந்த பரிவாரங்களின் நடவடிக்கைகளாக இருக்குமோ என்ற நியாயமான சந்தேகம் அரசினால் எழுப்பப்பட்டுள்ளது.

இந்த அரசை ஆட்சிக் கவிழ்ப்புச் செய்து மீண்டும் பதவியில் அமர்வதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டு செயற்படும் மகிந்த தரப்பினர், அதற்காக மக்களை எவ்வளவு தூரமும் பலிக்கடாவாக்கத் தயாராக இருக்கின்றனர்.

மீண்டும் மகிந்த பதவியில் அமர்ந்தால், தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் வாக்குகளினால் பதவிக்கு வந்த அரசு, தமிழ் மக்களின் எதிர் காலத்தைப் பற்றிச் சிறிதளவேனும் அக்கறை கொண்டு மகிந்தவினதும், அவரது பரிவாரங்களினதும் கொட்டத்தை அடக்க முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

WhatsApp

படித்ததில் பிடித்தது



## பெண்!

ஆண் உட்பட, எல்லா உயிர்களையும் படைத்து விட்ட கடவுள், இறுதியாகப் பெண்ணைப் படைக்க ஆரம்பித்தார். ஒரு நாள், இரு நாள் அல்ல. தொடர்ந்து 6 நாள்களாகப் பெண்ணைப் படைத்துக் கொண்டிருந்தார் கடவுள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த தேவதை ஒன்று, "ஏன் இந்தப் படைப்புக்கு மட்டும் இவ்வளவு நேரம்?" என்றது.

அதற்குக் கடவுள், "இந்தப் படைப்புக்குள் நான் நிறைய விடயங்களை ஸ்ரோர் செய்ய வேண்டும். இந்தப் பெண், பிடித்தது, பிடிக்காதது என்று எதையும் பிரிக்காமல் கிடைப்பதை சாப்பிட்டாக வேண்டும். அடம் பிடிக்கும் குழந்தையை நொடியில் சமாளிக்க வேண்டும்.

சின்னக் காயத்திலிருந்து உடைந்து போன மனது வரைக்கும் எல்லாவற்றுக்கும் அவள் மருந்தாக இருக்க வேண்டும். அவளுக்கு உடம்பு சரியில்லாதபோதும், அவளே அவளைக் குணப்படுத்திக் கொண்டு ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைக்க வேண்டும். இவை அத்தனையையும் செய்ய அவளுக்கு இரண்டே இரண்டு கைகள் மட்டும் தான் இருக்கும்,' என்று விளக்கமாகச் சொன்னார்.

'இவை அத்தனைக்கும் இரண்டே கைகள் மட்டுமா?' என்று ஆச்சரியப்பட்டது தேவதை. ஆர்வத்துடன் லேசாகப் பெண்ணைத் தொட் டுப் பார்த்து விட்டு, 'ஆனால் இவளை ரொம்ப மென்மையாகப் படைத்திருக்கிறீர்களே?' என்றது தேவதை.

அதற்குக் கடவுள், 'இவள் உடலளவில் மென்மையானவள். ஆனால் மனதளவில் ரொம்பப் பலமானவள். அதனால் எல்லாப் பிரச்சினைகளையும் சமாளித்து விடுவாள். அது மட்டுமல்ல, அவளால் எல்லாப் பாரத்தையும் தாங்க முடியும். கஷ்டம், அன்பு, கோபம் என்று எல்லா உணர்வுகளையும் அவளுக்குள்ளேயே அடக்கிக் கொள்ளத் தெரியும்.

கோபம் வந்தாலும் அதைச் சிரிப்பு மூலமாக உணர்த்துகிற தன்மை இந்தப் படைப்பிடம் உண்டு. தனக்கு நியாயமாகப் படுகிற விடயத்துக்காகப் போராடி ஜெயிக்கவும் செய்வாள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் அன்பை மட்டும் கொட்டுவாள்,' என்றார்.

'ஓ.........இந்தளவுக்குப் பெண்ணால் யோசிக்க முடியுமா?' என்று தேவதை கேட்டது.

'எல்லா விடயங்களைப் பற்றி யோசிக்க மட்டுமல்ல. அவற்றுக்குக்கான தீர்வையும் அவளால் சொல்ல முடியும்,' என்று விவரித்தார் கடவுள்.

அந்தத் தேவதை பெண்ணின் கன்னங்களைத் தொட்டுப் பார்த்து விட்டு, 'இவள் கன்னத்தில் ஏதோ வழிகிறதே?' என்றது.

'அது அவளுடைய கண்ணீர். அவளுடைய சந்தோசம், துக்கம், கவலை, ஆச்சரியம் என்று எல்லா உணர்வுகளையும் வெளியே காட்டுகிற விடயம் அது,'என்று பதிலளித்தார் கடவுள்.

தேவதை ஆச்சரியத்துடன், 'உங்கள் படைப்பிலேயே சிறந்தது இதுதான். இந்தப் படைப்பில் எந்தக் குறையுமே கிடையாதா?' என்றது தேவதை.

'தன்னுடைய மதிப்பு என்னவென்று அவளுக்கு எப்போதுமே தெரியாது,'.........கடவுள் சிம்பிளாகப் பதிலளித்தார்.







# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** தன்மானத்துக்குச் சோதனை வரலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். சொத்து, ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தரவேண்டாம். பெண்கள், குடும்ப நலனில் கவனம் செலுத்துவர்.

**இடபம்:** அனைவரிடமும் பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. போட்டி, பந்தயத்தில் ஈடுபடக் கூடாது.

**கடகம்:** குடும்பத்தினர் மத்தியில் உங்களுக்கு நற்பெயர் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். இலாபம் படிப்படியாக உயரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** சூழ்நிலை உணர்ந்து நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்பத் தேவைக்கு தாராளமாகச் செலவழிப்பர். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**துலாம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீடு அதிகம் தேவைப்படும். வருமானம் உயரும். உறவினருக்கு இயன்ற உதவியைச் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிக்கான புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள், ஆன்மிகச் சிந்தனையுடன் செயற்படுவர்.

**தனுசு:** உறவினர் செயலை, விமர்சனம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில், தடைகள் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், பணம், நகையை இரவல் கொடுப்பது கூடாது.

**மகரம்:** கடந்த கால முயற்சிக்குரிய பலன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்துப் பெறுவீர்கள். சுப விடயத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

**கும்பம்:** பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உருவாகும். ஆதாய பணவரவு அதிகரிக்கும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும்.

**மீனம்:** நல்லவர்களின் ஆலோசனையால், நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி கூடும். வாகனப் போக்குவரத்தில், கவனமாக இருக்கவும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 2 | | | 1 | | | 9 |
| | 6 | | 9 | 4 | | | 1 | 3 |
| | 1 | 3 | 8 | 6 | | | | |
| 4 | | | 7 | | 3 | | 2 | |
| 5 | | 9 | | | | 7 | | 8 |
| | 2 | | 6 | | 8 | | | 4 |
| | | | | 1 | 9 | 2 | 8 | |
| 2 | 5 | | | 8 | 6 | | 9 | |
| 3 | | | 2 | | | 1 | 4 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 2 | 8 | 7 | 4 | 6 | 1 |
| 6 | 7 | 2 | 5 | 4 | 1 | 8 | 3 | 9 |
| 1 | 8 | 4 | 9 | 6 | 3 | 7 | 2 | 5 |
| 8 | 5 | 7 | 4 | 2 | 9 | 6 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 1 | 5 | 8 | 9 | 4 | 7 |
| 9 | 4 | 1 | 3 | 7 | 6 | 2 | 5 | 8 |
| 3 | 6 | 5 | 7 | 9 | 2 | 1 | 8 | 4 |
| 7 | 1 | 8 | 6 | 3 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 2 | 9 | 8 | 1 | 5 | 3 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாகியது. 2005 இல் இது உலகளவில் பிரபல்யமானது.

**ரசனைக்காரன்**

*பணத்தைச் சம்பாரித்து அம்மாவிடம் கொடுத்தாலே போதுமானது என நினைக்கும் பதர்களுக்கு பாசத்தின் அருமை புரிய வாய்ப்பில்லை...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 25 | 25 |
| கத்தரி | 100 | 80 | 100 | 100 | 100 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 80-200 | 100 | 120 | 160 | 80 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40 | 60 | 35 | 45 |
| பயிற்றை | 50 | 60 | 40 | 60 | 80 | 60 | 40 | 50 |
| பாகல் | 100 | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 80 | 60 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 60 | 90 | 60 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 | 60 | 35 | 30 |
| தக்காளி | 20 | 40 | 30 | 50 | 20 | 40 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40 | 40 | 100 | 30 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 40 | 30 | 20 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 120 | 140 | 120 | 200 | 120 | 140 |
| புடோல் | 40 | 60 | 50 | 40 | 60 | 60 | 30 | 40 |
| கோவா | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 35 | 45 |
| வெண்டி | 50 | 80 | 40 | 60 | 80 | 80 | 60 | 50 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 140 | 80 | 120 | 70 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 100 | 160 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40-50 | 40 | 40 | 35-40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 70 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 180 | 120 | 120 | 60 | 100 | 40 | 100 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 100 | 100 |
| இராசவள்ளி | 150 | 140 | 130 | 120 | 140 | 140 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 250 | 300 | 400 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 05 | – | 02 | 05 | – | – | 03 |



# கோழிக்கறி மசாலா

## தேவையானவை

கோழிக்கறி அரைக் கிலோ (துண்டாக நறுக்கிக் கொள்ளவும்)
வெங்காயம் - அரைக் கிலோ (பொடியாக நறுக்கிக் கொள்ளவும்)
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - 2 தேக்கரண்டி
தக்காளி-6
இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் விழுது - 2 கரண்டி

**தாளிக்க:**
எண்ணெய் - அரைக் கப்
புளிக் கரைசல் - 1 எலுமிச்சை அளவு
துருவிய தேங்காய், 2 பட்டை, 2 கரண்டி சோம்பு - அரைக்கவும்

## செய்யும் முறை

- அடுப்பில் சட்டியை வைத்து தாளிக்க வேண்டியதைப் போட்டுத் தாளிக்கவும்.
- பின்னர் வெங்காயம் சேர்த்து வதக்கவும்.
- அதில் மசாலாப் பொடிகள், உப்பு, இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்.
- பிறகு, தக்காளியையும், கோழிக் கறியையும் போட்டு வதக்கவும்.
- சிறிதளவு தண்ணீர் விட்டு, மெலிதான தீயில் மூடி வைக்கவும்.
- முக்கால் வாசி வெந்தவுடன் புளிக் கரைசலை விட்டுக் கொதி வந்ததும் தேங்காய் பட்டை, சோம்பு பேஸ்ட்டையும் சேர்த்துக் கைவிடாமல் கிளறவும். கொதிக்க விடவும்.

# இது புதுசு





பார்ட்டி கவுன்கள் அறிமுகமாகியுள்ளன. மேலைத்தேய கலாசார ஆடையான இவை, சிறப்பான வடிவமைப்புடன், கண் கவர் வர்ணங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. கற்கள் வேலைப்பாட்டுடன் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 3,500 ரூபா தொடக்கம் 4,000 ரூபா ஆகும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 300 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 400 | 600 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 600 | – | 550 |
| சீலா | 250 | 450 | 400 | 450 | 400 | 500 | 300 |
| விளை | 600 | 450 | 400 | 500 | 300 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 450 | 400 | 250 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 600 | 250 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | 400 | – |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 300 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 250 | 200 | 130 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | 200 |

## நாளை

பங்குனி -07
ஞாயிற்றுக்கிழமை 20.03.2016
திதி: துவாதசி பி.ப.01.54 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.01.40 வரை
ராகுகாலம்: 04.47-06.17 வரை
சுபநேரம்: 09.17-10.47 வரை
பிரதோஷ விரதம்

## எளிதாகச் சமைக்க

- பருப்பை வேக வைக்கும்போது சிறிது வெந்தயம் சேர்த்தால், பருப்பு சீக்கிரம் நன்றாக வெந்து ருசியாகவும் காணப்படும். உடலுக்கும் சிறந்தது.
- அரை தேக்கரண்டி பேக்கிங் சோடாவை ரொட்டிக்கு பிசையும் போது சேர்த்தால், ரொட்டி மிகவும் மென்மையாகவும், மெல்லியதாகவும் காணப்படும்.
- வெங்காயமும் பூண்டும் சேர்க்கப் படாத குழம்புகள், கூட்டுகள், பருப்புகள் நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் இருக்கும்.
- சமைக்கும் போது கடுகு, ஏலக்காய், சீரகம், கராம்பு போன்ற மசாலா சாமான்களை தேவைக்கேற்ப பயன்படுத்துங்கள். அதிகமாக பயன்படுத்தினால் அவற்றின் சுவை தான் கடுமையாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## அதிக சேமிப்புத் திறனுடன் கலக்ஸி நோட் 6

சம்சுங் நிறுவனமானது,தொடுதிரைக் கைபேசி உலகில் பல தொழில்நுட்பப்புரட்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

இதன் மற்றொரு அங்கமாக,தற்போது 256ஜிபி சேமிப்பு நினைவகத்தைக் கொண்ட கலக்ஸி நோட் 6 தொடுதிரைக் கைபேசியை வடிவமைக் கவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவித்தலைக் கடந்த மாதம் வெளியிட்டுள்ளது.

இந்தச் சேமிப்புச்சாதனமானது,செக்கனுக்கு 850 எம்பி எனும் வேகத்தில் தரவுகளை வாசிக்கக் கூடியதாகவும், செக்கனுக்கு 250 எம்பி எனும் வேகத்தில் தரவுகளை பதிவு செய்யக்கூடியதாகவும் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கலக்ஸி நோட் 6 தொடுதிரைக் கைபேசியை இவ்வருட இறுதியில் சம்சுங் நிறுவனம் அறிமுகம் செய்யும் என எதிர் பார்க்கப் படுகின்றது.



## ஒப்போ நிறுவனத்தின் புதிய கைபேசி

ஒப்போ நிறுவனம்,ஒப்போ ஆர் 9 மற்றும் ஆர் 9 பிளஸ் ஆகிய இரு அண்ரொய்ட் தொடுதிரைக் கைபேசிகளைச் சீனாவில் அறிமுகப்படுத்தியுள் ளது.

ஒப்போ ஆர் 9 கைபேசி 5.5 அங்குலத் தொடு திரை, 1920 X 1080 பிக்சல் தீர்மானம் கொண் டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது4ஜி.பி. ரம் மற்றும் 64 ஜிபி வரை விரிவாகக் கூடிய சேமிப்பு வசதியும், மைக்ரோ எஸ்டி அட்டை வழியாக உள்ளடங்கிய சேமிப்பு வசதியாக 128 ஜிபியும் கொண்டதாகும்.

இதன் முன்புற கமெரா 16 மெகாபிக்சல் மற்றும் பின் புற கமெரா 13 மெகாபிக்சல் வசதி கொண்டது.

ஒப்போ ஆர் 9 பிளஸ் கைபேசியானது,6 அங்குலத் தொடுதிரையும் 1920 X 1080 பிக்சல் தீர்மானமும் கொண்டது.

4ஜி.பி. ரம் மற்றுமு 64 ஜிபி வரை விரிவாகக்கூடிய சேமிப்பு வசதியும், மைக்ரோ எஸ்டி அட்டை வழி யாக உள்ளடங்கிய சேமிப்பு வசதியாக 128 ஜிபியும் கொண்டதாகும்

16 மெகாபிக்சல் முன்புற கமெரா வசதி, 16 மெகா பிக்சல் பின்புற கமெரா வசதி கொண்டது.

இரண்டுகைபேசிகளும் அண்ரொய்ட் லொலிபொப் பைத் த்ழுவிய 3.0 இயங்கு தளத்தைக் கொண்டவையாகும்.

# சமூகப் பொறுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மொபிடெல் பாதணிகள்



மொபிடெல் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு வேலைத்திட்டத்தின் கீழ்,பாட சாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் வைபவம் நேற்று வெள்ளிக் கிழமை இடம் பெற்றது.

மன்னார் பூநொச்சிக்குளம் அரசினர் முஸ் லிம் கலவன் பாடசாலையில்,பாடசாலை அதிபர் ஆரிப் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

குறித்த பாதணிகள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்வி அலுவ லக பிரதிக் கல்விப் பணிப்பாளரும்,மன் னார் மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் இணைப்பாளருமான எஸ்.ஏ. ஹினாயத் துல்லா, விசேட விருந்தினர்களாக எஸ். எல்.ரி.மொபிடெல் நிறுவனத்தின் மாவட்ட முகா மையாளர் சதீஸ் ஜகதீசன் , உதவிப் பிரதேச முகாமை யாளர் முஹம்மது முஹர்றிம் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினர்.

மேலும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பி னர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். (த-56)



தேசிய சேமிப்பு வங்கியின் 44 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை அனைத்துக் கிளை களிலும் சிறப்பாக இடம்பெற்றன. கொடிகாமம் கிளையின் நிகழ்வுகள்,கிளை முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெற்ற போது வங்கியின் 'அவுறுது வாசனா' சேமிப்புச் சான்றிதழ் பெற்ற வாடிக்கையாளருக்கு கிளை முகாமையாளர் பரிசில் வழங்கினார். (ற-ஐ-9)

# சிங்கர் சிறிலங்கா பாடசாலைகளுக்கு இடையிலான ரக்பி சுற்றுப்போட்டி




நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்களை விற்பனை செய்வதில் நாட்டில் முன்னணியில் திகழ்ந்துவருகின்ற சிங்கர் சிறிலங்கா பீஎல்சி, இலங்கையில் ரக்பி விளையாட்டுக்கு ஆதரவ ளிப்பதில் முன்னின்று உழைக்கும் தனது பாரம் பரியத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல் லும் வகையில் இலங்கைப் பாடசாலைகள் ரக்பி மற்றும் உதைபந்துச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிங்கர் பாடசாலைகள் ரக்பி சுற்றுப்போட்டி 2016 இற்கு வலுவூட்ட முன் வந்துள்ளது. இந்தப் பிரசித்திபெற்ற சுற்றுப் போட்டிக்கு இம்முறை தொடர்ந்து 13 ஆவது ஆண்டாகவும் சிங்கர் சிறிலங்கா அனுசரணை யளிக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

19 வயதுக்குட்பட்ட பாடசாலை ரக்பி சுற்றுப் போட்டி யின் 2016 ஆம் ஆண்டு பருவகாலத்தில் 3 பிரிவுகளில் 69 பாடசாலைகள் தமக்கிடையில் போட்டியிடவுள்ள துடன், மொத்தமாக 226 ஆட்டங்கள் அடங்கியுள்ளன.

பிரிவு 1 இல் ஒவ்வொன்றும் 6 அணி களைக் கொண்ட 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.பிரிவு 2 இல் 4 பிரிவுகளின் கீழ் மொத்தமாக 22 அணிகள் இடம்பெற்றுள்ளன. பிரிவு 3 இல் 2 பிரிவுகளின் கீழ் 11 அணிகள் அடங்கியுள்ளன. இந்த அணிகள் 3 பிரிவுகளின் மத்தியில் வெற்றிக் கிண்ணங் களுக்காகப் போட்டியிடவுள்ளன.

## வணிகம்

இலங்கையில் ரக்பி விளையாட்டைப் பொறுத்த வரையில் அனைத்து மட்டங்களிலும் அதற்கு ஆதரவளித்து வந்துள்ள பெருமைமிக்க வரலாற்றை சிங்கர் சிறி லங்கா நிறுவனம் கொண்டுள்ளது. நிறுவனம் 26 ஆண்டுக ளாக Bradby Shie- போட்டிக்கு அனுசரணையளித்து வந்துள்ளதுடன், அண்மைய காலங்களில் நாட்டில் அதிசிறந்த ரக்பி அணியாகத் திகழ்ந்து வருகின்ற கண்டி விளையாட்டுக் கழகத்துக்குத் தொடர்ந்து 13 ஆண்டுகளாக அனுசரணையளித்து வந்துள்ளது.

மேலும் கடந்த ஆண்டில் முதன்முறையாக,அணிக்கு எழுவர் கொண்ட சர்வதேச ரக்பி போட்டியை ஏற்பாடு செய்து, இலங்கை ரக்பி விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் என இரு தரப்புக்களுக்கும் சர்வதேச அனுபவத் தையும் பெற்றுக் கொடுத்துள்ளது. இதற்கு இணையாக நாட்டில் ரக்பி விளையாட்டை நீண்ட கால அடிப்ப டையில் அபிவிருத்தியுடன் நிலை பெறச் செய்து, வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் சிங்கர் சிறிலங்கா முக்கிய பங்காற்றி வந்துள்ளது. நிட்டவல ரக்பி மைதானத்தில் புள்ளிப்பல கைகளை (ஸ்கோர்போட்) நிறுவியமை, ரோயல் கல்லூரி விளையாட்டு வளாகம் மற்றும் பள்ளேகல ரக்பி மைதானத்தில் ரக்பி கூடாரங்களை நிர்மாணித்தமை போன்ற மிகவும் தேவைப்பட்ட வசதி களை ஏற்படுத்திக் கொடுத்தமை நிறுவனத்தின் சில குறிப்பிடத்தக்க பணிகளாகும். (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசியல்

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில், நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். புதிய அரசமைப்பு உருவாக்கத்தில், சகல அதிகாரங்களுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதனை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன், புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவைத் தொடர்ந்து வழங்கும். தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை வழங்குவதில் சிங்கள மக்கள் தடையாக இல்லை. எனவே ஆட்சியாளர்கள் அதற்கமைய செயற்படவேண்டும்.

மேலும், இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும். தமிழ் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். அதற்கு ஜனாதிபதி உறுதி வழங்கியுள்ளார்.

அத்துடன், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

இதேவேளை, கொழும்பில் இடம்பெற்றுள்ள இந்தச் சந்திப்பின் போது, நல்லிணக்கம் மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக, இரா. சம்பந்தனின் கருத்துக்களைக்கேட்டறிந்துகொண்டதாக, அமெரிக்கத்தூதுவர் அதுல் கெசாப் தனது டுவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். (த-வ)

## மேல் நீதிமன்றுக்கு

இதன்போது முன்னிலையான குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி வழக்கின் முன்னேற்ற நிலையைக் கூறினார். புங்குடுதீவு உள்ளிட்ட பல இடங்களிலும் காணப்படும் பாழடைந்த வீடுகள், கட்டடங்கள், பற்றைகளை அழிக்குமாறு பிரதேச சபை ஊடாக உத்தரவிடவேண்டும் என்று அவர் கோரினார். அத்தகைய இடங்கள் இருப்பதனாலும் சமூக விரோதச் செயல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் உள்ளிட்ட பலவற்றுக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. எனவே அத்தகைய இடங்களை அழித்தொழிக்க வேண்டும் என்று மன்றில் அவர் கோரினார். அதனைப் பிரதேச சபை ஊடாகச் செய்ய வேண்டும் என்றும் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்று பிரதேச சபைக்கு அது பற்றிய உத்தரவைப் பிறப்பிப்பதாகத் தெரிவித்தது.

புங்குடுதீவில் இனிமேல் குற்றச் செயல்கள் இடம்பெறுவதனைக் கட்டுப்படுத்தும் வகையில், அங்கு பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை முன்வைத்தனர். அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிப்பதாக நீதிமன்று சுட்டிக்காட்டியது.

அத்துடன், சந்தேக நபர்கள் பயன்படுத்திய அலைபேசி இலக்கங்கள் பற்றி ஆராய, விசாரணை செய்ய அது பற்றிய அறிக்கை ஒன்றையும் பெறுவதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றின் அனுமதியை எடுத்துள்ளனர். வழக்குடன் தொடர்புடைய சம்பவங்களில் கண்கண்ட சாட்சி ஒருவர் உள்ளதாக முன்னரும் தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்றும் அந்த விடயம் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டதோடு, அவரது வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரபணுப் பரிசோதனை அறிக்கை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. குறித்த வழக்கில் சந்தேக நபர்கள் சிலர் சார்பில் சரத் வல்கமுவ மற்றும் அசேல டீ சில்வா ஆகியோர் முன்னிலையாகித் தாம் குறிப்பிடப்பட்ட சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

எனினும் குறித்த சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிப்பது தொடர்பில் யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யுங்கள். இன்னும் 2 மாதங்களில் வித்தியாவின் வழக்கு யாழ்.மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்படும் என்று நீதிவான் அறிவித்தார். (த-வ-4)

## மகிந்தவுடன்

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைப் பங்கெடுக்க வேண்டாம் என்று கட்சியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த அறிவுறுத்தலையும் மீறி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டத்தில் பங்கெடுத்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் 38 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கம் கோரப்படும். அதன் பின்னர் மத்திய செயற்குழுவைக் கூட்டித் தீர்மானம் எடுக்கப்படும்.

இதேவேளை, கட்சியின் ஒழுக்க விதிகளைப் பேணிப் பாதுகாக்கக் கட்சி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்கவும் தயங்கப் போவதில்லை என்றும் துமிந்த திஸாநாயக்க கூறியுள்ளார். (த-வ-5)

## மர்மமான

நிலையில், நுரைச் சோலை அனல் மின்நிலையத்தில் பழுது ஏற்பட்டதாலும், பியகம பகுதியில் இருந்த மின் மாற்றி வெடித்ததாலும், தொடர் மின்வெட்டுக்கு நாடு முகம் கொடுக்க நேரிட்டது.

கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளை அடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்று மின்பிறப்பாக்கிகளும் செயற்படத் தொடங்கியுள்ளன.

இதையடுத்து, இனிமேல் மின் தடை ஏற்படாது என்று, மின்சார சபை நேற்று நண்பகல் அறிவித்திருந்தது.

இந்தநிலையில், நேற்றுப் பிற்பகல் மினுவாங்கொட, கொட்டுகொடவில் உள்ள உபமின் நிலைய மின்மாற்றிகளில் ஒன்று வெடித்துத் தீப்பற்றியது. இதையடுத்து. தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். மின்மாற்றி வெடித்ததால், நீர்கொழும்பின் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது.

மின் விநியோகக் கட்டமைப்பை சீர்குலைக்கும் சதிவேலைகள் நடப்பதாக எழுந்த சந்தேகங்களை அடுத்து, அனைத்து மின் நிலையங்களிலும், உபமின்நிலையங்களிலும், பாதுகாப்புக்காக, முப்படையினரைக் கடமைக்கு அமர்த்தியுள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.(த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி நடேசு



கம்மாலையடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நடேசு நேற்று (18.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வை. நடேசுவின் பாசமிகு மனைவியும், சறோஜினி, சந்திரகுமார், ஜெயந்தினி, விஜயகுமார், ஜெயக்குமார், உமா நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகதீசன், அருள்மதி, வவீந்திரன், வினிதா, அனுசியா, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கம்மாலையடி,
சண்டிலிப்பாய். (70045) (11,18,20)

தகவல்:
குடும்பத்தினர்.
(ஸ்ரீ வைரவர் ஹாட்வெயர்)

**077 625 8293**

### கந்தையா தவராஜா



தோற்றம்: 28.09.1953 மறைவு: 17.03.2016

கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு அன்னங்கை வீதியை (டிப்போ) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராஜா 17.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-துரைமணி தம்பதியரின் மருமகனும், தயாநிதியின் அன்புக் கணவரும், சுபாசினி (ஜேர்மனி), கீதாஞ்சலி, பிரசாத் (ஆஸ்திரேலியா), மிலன் (கனடா), பிறேமிளா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில் (டிப்போ) (70018) (11,17,18,20)

தகவல்:
குடும்பத்தினர்.

**076 866 8886**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி நல்லதம்பி



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்த வருமான திருமதி மனோன்மணி நல்லதம்பி கடந்த (14.03.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - யாழபளித்த மொழியாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் மகாலட்சுமி, பரமேஸ்வரராஜா (கனடா), பரம்சோதி (கனடா), பத்மநாதன் (கனடா), பாக்கியராஜா (கனடா), காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராயரட்ணம், இராசேந்திரம், உமா (கனடா), சிவானந்தி (கனடா), ரஞ்சினி (கனடா), குணநாயகி (பபி- கனடா), மதுரா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்வரஞ்சிதராணி, வினோகரன் மற்றும் மனோகரன் (இளைப்பாறிய Inspector of Police - கனடா), காலஞ்சென்ற யசோதராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை Montrial Canada வில் நடைபெறும். இவரது இரங்கல் நிகழ்வு நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள அவரது மகள் இ.மகாலட்சுமியின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு (70018) (11,18,20)

தகவல்:
இ.மகாலட்சுமி
(மகான் -மகள்)

### சுப்பையா செல்லத்துரை

(யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர்)



யாழ்ப்பாணம், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையில் வாழ்ந்தவரும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்லத்துரை கடந்த 14.03.2016 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமணி (யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான தங்கம்மா, நடராஜா, இராஸையா, முத்தம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர் களான சிற்றம்பலம், இராஜேந்திரம், அன்னலக்சுமி, தைரியலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் செல்வராஜன் (கனடா), வித்தியாதரன்(கனடா), மணிமேகலா(கனடா), மணிமேகலை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவதாரணி (கனடா), நிரஞ்சனி (கனடா), புவேந்திரலிங்கம் (கனடா), யோகரமணன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆர்த்திகா, குரு தீபன், திவ்யா, பிறிந்தா, தீபிகா, அவனிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி காலை 5.00 மணி தொடக்கம் 9.30 மணி வரை கனடா மொன்றியலில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : மனைவி
செ. இராசமணி

**T.P: 151 473 50352**

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை ஞானசீலன் (சீலன்)



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஞானசீலன் (சீலன்) 16.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனி - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும், புலோமினம்மாவின் (அமுதா) அன்புக் கணவரும், சமிந்ரா (சமி-சுவிஸ்), றொமிபிறவின் (றொமி-யாழ்பல்கலைக்கழகம் - விஞ்ஞானபீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தினேஸின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், மரியமலர், செல்வரின், பிலேந்திரன், ஜோஸ்பப்ரிஸ், ஜெயகுமார் (ஏசியன் ரெகஸ்), சில்வேஸ்ரர், ஜெயபாலன் (டென்மார்க்), ஜெயமலர் (ஒலண்ட்), ஜோன்சன் (லண்டன்), றொபின்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ராசமணி, மரியதாஸ் மற்றும் செபரெத்தினம், ஜெயமணி, அருள்மணி, திரேசம்மா, புஸ்பராணி, அருள்சீலன் (சுவிஸ்), இராஜேஸ்வரி, தேவதாஸ், றூபி, மாலா, எப்சியா, பொலின், தயா, ராணி(டென்மார்க்), ஜெயம் (ஒலண்ட்), சந்திரா (லண்டன்) மகிழ்மலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.03.2016) சனிக்கிழமை பிறபகல 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செலலபபட்டு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும. இநத அறிவித்தலை உற்றார், உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை வீதி,
நவாலி தெற்கு, நவாலி

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 440 5917, 0777243461**

## சண்முகம் மகேந்திரன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இத்தாலி அங்கிள் என அழைக்கப்படும் சண்முகம் மகேந்திரன் கடந்த (16.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - அன்னலெட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சாரதா தேவியின் அன்புக்கணவரும் யசித்தா, கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினி, சுதாகரன் ஆகியோரின் மாமனாரும் தர்சிகா, சாருகா, யந்துஷன், யதுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி, புவிந்திரன், குனேந்திரன், மங்களேஸ்வரி, குபேந்திரன், இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, சத்தியேஸ்வரி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தச்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகேந்திரன் சாரதாதேவி
யசித்தா இல்லம்
இல.31, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**T.P:077 2242549**

(68234)(15.17)

## சிதம்பரப்பிள்ளை நாகரத்தினம்



மண்ணில் 25.07.1938 விண்ணில் 16.03.2016

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நாகரத்தினம் 16.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விசு வ லிங்கம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் செல்லமுத்துவின் ( மணி) அன்புக் கணவரும் நாகேஸ்வரி (ஜெனா) ராசாராணி, கமலராணி, நாகேஸ்வரன் (கண்ணன்), பரமேஸ்வரன், இந்திராணி, ஜெயராணி, கேதினி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணசாமி, மகேந்திரம், சிறிகாந்தலிங்கம், கனிதா, கிரிசா, செந்தமிழ்செல்வன், குமணன், நகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை றோட்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(69860)(12.18.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 276 8303**

## விமர்சனங்கள்

மேலும் கூறுகையில்:-

வீட்டுத் திட்டத்தில் எந்தவித ஊழல் மோசடிகளும் இடம் பெறவில்லை. தரமான வெளிநாட்டு நிறுவனத்திடமே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய தர நிர்ணயங்களுக்கு அமைய வீடுகள் அமைக்கப்படும். அறைகளில் வெப்பம் இருக்காது. இயற்கைக் குளிரை தரும் வகையிலான மூலப் பொருள்களை உள்ளடக்கியே வீடுகள் அமைக்கப்படும்.

மழை காலத்திலும் எந்தவித சிக்கலும் உருவாகாது. வாழ்வதற்குரிய சகல வதிகளும் செய்து கொடுக்கப்படும். கட்டில் உள்ளிட்ட தளபாடங்கள், தொலைக்காட்சி, வைபை இணைய வசதிகளும் வழங்கப்படும். இந்தத் திட்டம் தொடர்பில் சிலரே தவறான கருத்துகளைக் கூறிவருகின்றனர். அமைச்சிலுள்ள பொறியியலாளர்களிடமோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ இதுபற்றிக் கதைக்கவில்லை. பழைய வீட்டுத்திட்டத்தில் (இந்திய வீட்டுத் திட்டம்) எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன ? குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணித்துவிட முடியாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். போரினால் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தற்போது வசிக்கும் வீடு கட்ட சொந்தக் காணி உள்ள குடும்பங்கள், போரினால் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரின்போது தமது அங்கங்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். காணி இல்லாதவர்களுக்கு அதை பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும். 65 ஆயிரம் வீடுகளில் இந்த வருடத்தில் 11 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் ஆண்டுக்கு 18 ஆயிரம் வீடுகள் அடிப்படையில் 54 ஆயிரம் வீடுகள் கட்டப்படும்.

மக்கள் விருப்பமே எமக்குத் தேவையாக உள்ளது. மக்கள் விரும்பினால் திட்டத்தை முன்னெடுப்போம். வாழப் போவது மக்கள்தான். அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். ஜனாதிபதியின் நிலைப்பாடும் இதுவே - என்றார்.

(த-வ-5)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம் நேற்று (18.03.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், கௌரவ மாவை சேனாதிராசா (தலைவர்-இலங்கை தமிழரசுக்கட்சி, பாராளுமன்ற உறுப்பினர்), செல்வரத்தினம் (இளைப்பாறிய எழுதுவினைஞர், இ.போ.ச), காலஞ்சென்ற இராசரத்தினம் (மாவிட்டபுரம்), தங்கராசா (ஜேர்மனி), செல்வமணி (மாவிட்டபுரம்), செல்வராணி (சுவிஸ்), இராஜேஸ்வரி (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும், பவானி (மாவிட்டபுரம்), விஜயகுமாரி (மாவிட்டபுரம்), மல்லிகாதேவி (ஜேர்மனி), சிவகுமார் (இளைப்பாறிய கிராம அலுவலர்), யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜெயரட்ணம் (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(70070) (10,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**



### கனகசபாபதி கஜமுகன்

(மின் பொறியியலாளர் சவுதி)

பிறப்பு: 02.06.1965 இறப்பு: 19.02.2016

சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கஜமுகன் 19.02. 2016 வெள்ளிக்கிழமை சவுதியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூளாய் வீரவாகு கனகசபாபதி (இளைப்பாறிய அதிபர், மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை) கனகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு, மகாலட்சுமிப்பிள்ளை (மூளாய்) தம்பதியரின் மூத்த மருமகனும், சறோஜினிதேவியின் (சறோ) அன்புக் கணவரும், தனுஷா, குகதீஷா (உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள்), கஜந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயமுகன் (சுவிஸ்), அம்பிகா , காலஞ்சென்றவர்களான ஐங்கரன், ஞானகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாஜினி (கனடா), பார்த்தீபன் (மூளாய்), ஜெயந்தினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் , மதனராஜாவின் (கனடா) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03. 2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(70073) (10,17)


தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 2232 478**
**077 3450 036**

## ஏப்ரல் 4இல்

வங்கிக்கு பெற்று கொடுக்கப்படும் எனவும் கூறினார். இதேவேளை, இதுவரை காலமும் வழங்கப்பட்ட உர மானியத்திற்கு பதிலாக, உரம் கொள்வனவு செய்வதற்கு பணத்தை வழங்குவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் நீண்ட நாள் வாடிக்கையாளரான

### சின்னத்துரை ஞானசீலன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செல்வா என்ர பிறைஸ்**
**122, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**உரிமையாளரும்,**
**ஊழியர்களும்.**

(70012) (12.18.20

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கைலாயபிள்ளை



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கைலாயபிள்ளை நேற்று (18.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா - பானுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான டேவிநாதன், கணேசநாதன் மற்றும் கிருபைநாயகி, சிவநாதன் (சுவிஸ்), கேகுலநாதன் (சுவிஸ்), நித்தியநாயகி (சுவிஸ்), குணநாதன் (சுவிஸ்) காலஞ்சென்ற உதயநாதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

**076 831 9302**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பாடிழந்தது

இருந்து ஹைஏஸ் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள், யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர், நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நாக விகாரையில் இருந்து தென்னிலங்கை நோக்கிப் பயணித்தனர்.

இதன்போது, நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கிளிநொச்சிப் பகுதியில் குறித்த ஹைஏஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் அருகே நிறுத்தி வைக்கப்பட்ட இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தில் அதில் பயணித்த தென்னிலங்கையைச் சேர்ந்த 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் உயிரிழந்ததுடன், குறித்த வாகனத்தில் பயணித்த பிக்கு உட்பட மேலும் எண்மர் காயங்களுக்கு உள்ளான நிலையில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனம் அதிவேகத்தில் பயணித்ததால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவித்த கிளிநொச்சிப் பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டனர்.

(த-வ-21-ரி3)

## வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கம் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

காலம் : 22.03.2016 செவ்வாய்க்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருமண மண்டபம்

நிகழ்ச்சி நிரல்
1. மௌன இறைவணக்கம்
2. தலைமையுரை
3. 4G[1] விசாரணை அறிக்கையின் காண்புகள் சமர்ப்பித்தலும் அது தொடர்பில் உரிய தீர்மானம் எடுத்தலும்.
4. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
5. நன்றியுரை

அங்கத்தவர்கள் மட்டும்

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும்.
அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி கல்லூரி உணவகம் நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத்தில் உணவகம் நடத்துவதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்லூரி அலுவலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து 23.03.2016 புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியில் இடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி. (C/29867) (10.17) அதிபர்.

## நினைவு தினம்

15ஆம் ஆண்டு — 14ஆம் ஆண்டு



மலர்வு 23.02.1924 — உதிர்வு 19.12.2001



மலர்வு 03.02.1930 — உதிர்வு 25.03.2002

அமரர் சுவாமிநாதர் பாலசிங்கம் — திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

திதி: 19.03.2016

என்றும் உங்கள் நினைவில்...

நீர்வேலி தெற்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி



பிறந்த ஆண்டு 25.03.1930 — பிறந்த ஆண்டு 15.02.1940

இறந்த ஆண்டு 28.03.1988 — இறந்த ஆண்டு 29.05.2013

அமரர் ஆறுமுகம் கணேஷ் — அமரர் கணேஷ் இராசம்மா

அமரர்களின் நினைவாக இன்று (19.03.2016) சனிக்கிழமை அவர்களின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி, மல்லாகம். (70069)(15.17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பெரியதம்பி கனகரெத்தினம்

நயினாதீவு

யாழ் நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கனகரெத்தினம் கடந்த (15.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - நல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் சிவபாலன் (சுவிஸ்), சத்தியபாலன் (அமெரிக்கா), ஜெகதீஸ்வரி (ஜேர்மன்), ஜெகவதனி (சுவிஸ்), ஜெகவாசினி, கேதாரகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகமணி, கணபதிப்பிள்ளை, நாகம்மா, வியாளாட்சி மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜேஸ்வரி (சுவிஸ்), அன்பொழியாள் (அமெரிக்கா), சிவகுமார் (ஜேர்மன்), பாஸ்கரன் (சுவிஸ்), சொரூபன், பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கனகசபை, வைத்திலிங்கம், குணராசா, சிவபாதமணி மற்றும் நாகம்மா ஆகியோரின் அருமை மைத்துனரும் ஈஸ்வரானந்தத்தின் அன்புச்சகலனும் நிஷானி, லக்ஸயன், ரவீனா, சியானந்த், பவிசா, அபிசா, அபிசன், தானியா, எமிலியா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5 ஆம் வட்டாரம், நயினாதீவு. (70067)(15.17) குடும்பத்தினர்.

## பதவி வெற்றிடம்

**பதவி - கணக்காளர்**
**சம்பளக் குறி.இல. - 104 / 10**
**சம்பள அளவுத் திட்டம் -**
**15305 - 18905 (13/2015 சுற்றறிக்கை)**
**170x10 - 190 x 10**

### கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டக் கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்ட கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி / கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் இரண்டு (02) ஆண்டுகால அனுபவம். அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

### குறிப்பு

01. மேற்குறித்த பதவிக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக இதர படிகள் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

02. கூட்டுறவுச் சங்க பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31.03.2016**
**விண்ணப்பங்கள் சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**திரு.சி.பாலையா (தலைவர்)**
**சுன்னாகம் பனை தென்.வள.அபி.கூ.சங்கம்**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

தலைவர்,
பனை தென்னை வள.அ.கூ.சங்கம் (A/29865)(11.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

மாங்குளம், மார்ச் 19

**கே.ஸி.ஸி.ஸி. வி.க. தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம் நடத்தும் 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய தினத்தில் நடைபெறும் ஆட்டங்களாக காலை 8.30 மணிக்கு அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் அணி மோதவுள்ளது. பிற்பகல் 1மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.சி.ஏ. அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நாமகள் சனசமூக நிலையத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நாமகள் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(ம-422-23)

## கரவெட்டி தடகளத் தொடர்

கரணவாய், மார்ச் 19

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இடம்பெறவுள்ளது. தடகளத் தொடரின் இறுதி நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

(ம-108)

## யாழ். சதுரங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான சதுரங்கத் தொடர் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ம-422)



யாழ். மத்திய கல்லூரி



சென்.ஜோன்ஸ் கல்லூரி

# சென். ஜோன்ஸ் – யாழ். மத்தி ஒருநாள் ஆட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 14ஆவது ஒருநாள் ஆட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணியவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்று முடிந்த 13 ஒருநாள் ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி அணி 7 ஆட்டங்களிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. இந்த வருடம் யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது வருடமாகும். அண்மையில் நடைபெற்று முடிந்த வடக்கின் போர் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த ஆட்டத்திலாவது வெற்றியைப் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் மத்தி தீவிரம் காட்டும். கடந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றிருந்தது. இதனால் இந்த வருடம் பதிலடி கொடுக்க சென்.ஜோன்ஸும் முனைப்புக் காட்டும்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் பிரதான வீதியுடனான நுழைவாயில் ஊடாகவும், குறித்த கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பழைய பூங்கா பக்கமாகவுள்ள ஏ என அடையாளம் இடப்பட்ட நுழைவாயில் ஊடாகவும் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவர். யாழ். மத்திய கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சி என அடையாளம் இடப்பட்ட நுழைவாயில் ஊடாகவும், பொதுமக்கள் 'பி' என அடையாளமிடப்பட்ட நுழைவாயில் ஊடாகவும் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

குறித்த இரு கல்லூரிகளின் பழைய மாணவ அணிகளுக்கு இடையிலான ஒருநாள் ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(ம-23)

## சம்பியனானது சின்னடம்பன் பாரதி வவுனியா வடக்குக் கரப்பந்தில்

வவுனியா, மார்ச் 19

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. ஓமந்தை மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணியை எதிர்த்து கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி முறையே 19:25, 25:21, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

(ம-422)

## ஓமந்தை மத்திய கல்லூரி கபடியில் பெரும் ஆதிக்கம்

வவுனியா, மார்ச் 19

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடர்களில் 15, 19 வயதுப் பெண்கள் பிரிவுகளில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கல்மடு மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. 15வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய அணி மோதியது. இதில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி 36:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது. 19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய அணி மோதியது. இதில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி 28:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

(ம-422)

## தென்மராட்சி தடகளத்தொடர்

சாவகச்சேரி, மார்ச் 19

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான தேர்வுப் போட்டிகள் நாளை காலை தொடக்கம் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் குருபரனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசனும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை கிராம அலுவலர் க.வாமதேவன், மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-9)

## சம்பியனானது சிறிமுருகன் அணி

கணவாய், மார்ச் 19

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் குறித்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பவன் 41 ஓட்டங்களையும் டெஸ்மன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜோனி ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

30 பந்துகளில் 69 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி மூன்று பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 11 ஓட்டங்களைப் பெற்ற போது போதிய வெளிச்சமில்லை என்று தொடர்ந்து விளையாட மறுப்புத் தெரிவித்தனர். ஆனால் ஏற்பாட்டாளர்களும் நடுவர்களும் தொடர்ந்து விளையாடக்கூடிய சூழ்நிலை உள்ளதால் தொடர்ந்து விளையாடுமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்து ஞானம்ஸ் அணியினர் மைதானத்தை விட்டு [illegible]யேற சிறிமுருகன் 57 ஓட்டங்[illegible] வெற்றி பெற்றதாக அறிவிக்க[illegible]

(ம-108)

## கிண்ணம் சுண்டிக்குளி மகளிரிடம் யாழ். வலைப்பந்தாட்டத் தொடரில்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 15வயதுப் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலய அணி மோதியது. முடிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை பாசையூர் சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி பெற்றது.

(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி கபடியில் கணிசமான ஆதிக்கம்

மாங்குளம், மார்ச் 19

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான கபடியில் 15, 19 வயதுப் பிரிவுகளில் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அணிகள் கிண்ணங்களைக் கைப் பற்றின.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அணி 38:14 என்ற புள்ளிகளின் அடிப் படையில் சம்பியனாகியது. மூன்றாமிடத் தை முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி பெற் றது.

19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அணியை எதி ர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சென்.ஜேம்ஸ் மகளிர் கல் லூரி அணி 50:10 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை முத்துத்தம்பி மகா வித்தி யாலய அணி பெற்றது. (ம-422-108)

## ஓமந்தை மத்திய கல்லூரி கபடியில் கிண்ணம் வென்றது

வவுனியா, மார்ச் 19


வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான 19வயது ஆண்களுக்கான கபடியில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கல்மடு மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இதன் இறுதியாட்டம்நடைபெற்றது. இறுதியாட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய அணி மோதியது. இதில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி 45:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)

# ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது நியூசிலாந்து

## பந்துவீச்சு, களத்தடுப்பு சிறப்பாக அமைந்ததால்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நியூ சிலாந்து அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற் றது.



நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூ சிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது. ஆரம்ப வீரர்களாக குப்தில் மற்றும் வில்லியம்சன். சிக்சர்களாக விளாசித் தள்ளி னார் குப்தில். குப்திலுக்கு வாய்ப்புக்களை வழங்கினார் வில்லியம்சன். ஏழே பந்துப்பரி மாற்றங்களில் 60 ஓட்டங்களை எட்டியது நியூ சிலாந்து. 39 ஓட்டங்களுடன் குப்திலை அனுப் பினார் பல்க்னெர். 24 ஓட்டங்களுடன் மக்ஸ் வெல்லின் சுழலில் சிக்கினார் வில்லியம்சன். அதிரடி வீரரான முன்றோ நேற்று வழக்கத்துக்கு மாறாக பெரிதும் நிதானித்தார். நியூசியின் சராசரியில் சடுதியான சரிவு ஏற்பட்டது. அன்டர்சன், ரெயிலர் பெரிதாக இல்லை. ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த எத்தனித்தார் எலியாட். 20 பந்துகளில் 27 ஓட்டங்களுடன் எலியாட்டை ரண்அவுட் செய்தார் நெவில். பின்வரிசை வீரர்களாலும் ஆரம்பத்தில் இருந்த சராசரியை மீண்டும் நடைமுறைப்படுத்த இயலாது போக முடிவில் நியூசிலாந்து 8 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக குப்தில் 39 ஓட்டங்களையும், எலியாட் 27 ஓட் டங்களையும், வில்லியம்சன் 24 ஓட்டங்களை யும் குவித்தனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மக்ஸ் வெல், பல்க்னெர் இருவரும் தலா இரு இலக்கு களையும், மிச்செல் மார்ஷ், வற்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கிக்களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு அதன் ஆரம்ப வீரர்க ளான கவாயா, வற்சன் இணை நம்பிக்கை கொடுத்தது. 13 ஓட்டங்களுடன் மக்கெலிநக னின் பந்தில் சிக்கினார் வற்சன். சிமித், வோர் னர் இருவரும் பத்து ஓட்டங்களை முழுமை யாக எட்டவில்லை. 38 ஓட்டங்களுடன் கவா யாவும் ரண்அவுட் செய்யப்பட ஆஸ்திரேலி யாவின் வெற்றி கேள்விக்குறியானது. மக்ஸ் வெல், மிச்செல் மார்ஷ் இருவரும் நிலைத்து நின்றாலும் பந்துகளுக்கு ஏற்ற ஓட்டங்களையே பெற்றனர். இதுவும் ஒருவிதத்தில் பின்னடைவே. நியூசியின் பந்துவீச்சிலும் களத்தடுப்பிலும் ஆஸ்திரேலியாவின் பின்வரிசை ஒன்றுமில் லாமல் போக 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 134 ஓட்டங்களுடன் அடங்கியது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக மக்கெலி நகன் 3 இலக்குகளையும், அன்டர்சன், சான் நெர் இருவரும் தலா இரு இலக்குகளையும், சொட்கி ஓர் இலக்கையும் வீழ்த்தினர். மக்கெலி நகன் ஆட்டநாயகனானார். (ம)

## வவுனியா கரம், சதுரங்கம்

வவுனியா, மார்ச் 19

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கி டையிலான இருபாலா ருக்குமான கரம், சதுரங்க தொடர்கள் இன்று சனிக் கிழமை காலை 8.30மணி முதல் சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையின் உள்ளக விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளன.(ம-422)

## கரப்பந்தில் கிண்ணம் வென்றது மகிழங்குளம் அ.த.க. பாடசாலை

வவுனியா, மார்ச் 19

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கி டையிலான 17வயதுப் பெண்கள்பிரிவினருக்கான கரப்பந்தாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட் டத்தில் மாதர் பனிக்கர் மகி ழங்குளம் அ.த.க. பாட சாலை அணியை எதிர்த்து கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி மோதியது. இதில் மாதர் பனிக்கர் மகிழங் குளம் அ.த.க. பாடசாலை அணி 25:9, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் வெற்றிபெற்று சம்பிய னாகியது. (ம-422)

# குமரையா ஞாபகார்த்த கிண்ணம் பாசையூர் சென்.அன்ரனிஸ் வசம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஈ.கே.குமரையா ஞாபகார்த்தக் கிண்ணத்தை தனதாக்கியது பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.



யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். கால்பந் தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய ஈ.கே. குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட் டத் தொடரின் இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்துநாவாந்துறை சென்.மேரிஸ் அணி அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை மோதியது. இரு அணிகளும் போராட்ட குணத்துக்கு ஏற்ப கோல் கணக் குகள் எவையும் பதிவாக வில்லை. இதேநிலைமை நீடிக்க முதல் பாதி தனித்து ஓர் அணி யின் ஆதிக்கமின்றி முடிவு கண் டது.

இரண்டாம் பாதியிலும் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் இல்லை. கோல்கள் இல்லாமல் நகர்ந்து முடிவடைந்து ஆட்டம். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை. சமநிலைத் தவிர்ப் பில் சென்.அன்ரனிஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த வீரர்களாக சென். அன் ரனிஸின் திலீபனும் சென்.மேரி ஸின் யூட்டும் தெரிவானார்கள். ஊரெழு றோயல் அணியை சம நிலைத் தவிர்ப்பில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக் கியது குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம். சிறந்த வீரர்களாக ஊரெழு றோயல் அணியின் கஜகோபனும் குப்பிளான் ஞானகலா அணி யின் செந்தூரனும் தெரிவானார் கள். (ம-23)




## நியூசிலாந்து அபார வெற்றி

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற நியூசி லாந்து, அயர்லாந்து அணிக ளுக்கு இடையிலான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 93 ஓட் டங்களால் அபார வெற்றி பெற் றது.

நாயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீராங்கனையும் அணித்தலைவியுமான பேடிஸ் சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அவரின் அரைச் சதமும் முன்னணி வீராங்கனை களின் மிரட்டலும் கைகொடுக்க 20 பந்துப்பரிமாற்றங்கள் முடி வில் நியூசிலாந்து 3 இலக்கு கள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றது. அதி கபட்சமாக பேடிஸ் 82 ஓட்டங்களையும், டிவைன் 47 ஓட்டங்களையும், மக்கசன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அயர்லாந்து அணி யின் சார்பாக கேர்த், கென்லி, ஜொய்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக்களமிறங்கிய அயர் லாந்து அணி 20 பந்துப்பரி மாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் அந்த அணி யால் 5 இலக்குகள் இழப்புக்கு 84 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. முடிவில் 93 ஓட்டங் களால் அபார வெற்றிபெற்றது நியூசிலாந்து. அதிகபட்சமாக ஜொய்ஸ் 28 ஓட்டங்களையும், லூயிஸ் 16 ஓட்டங்களையும், சிலிங்டன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார் பாக பேர்மிங்காம் 2 இலக்குக ளையும், கஸ்பேர்க், நில்சன், டிவைன் மூவரும் தலா ஓர் இலக் கையும் வீழ்த்தினர். ஆட்ட நாய கியாக பேடிஸ் தெரிவானார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எட்டமுடியாத இலக்கை நிர்ணயித்தது தென்னாபிரிக்கா
# பெரும் போராட்டத்தின் மூலம் சாதித்தது இங்கிலாந்து

## ரண் மழையில் நனைந்தது மும்பை வான்கடே
## கற்பனையில் அடங்காத மரண ஆட்டத்தால்



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத் தடுப்பைத் தெரிவுசெய்தது. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அதிரடியை ஆரம்பித்து வைத்தார் குயின்டன் டி ஹொக். அம்லாவா இது என்று வியக்கும் வகையில் அமைந்தது அவரது ஆட்டம். பந்து அடிக்கொரு தடவை பவிலியனைச் சந்தித்து முத்தமிட்டு வந்தது. 3.5 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. நிறுத்தப்படுவதாயில்லை பவுண்டரி மழை. முடிவேதும் எடுக்க முடியாமல் விழிபிதுங்கினார் மோர்கன். 21 பந்தில் அரைச்சதம் கடந்தார் குயின்டன். 52 ஓட்டங்களுடன் மொயின் அலியால் குயின்டனின் துடுப்பு தனது வித்தையை நிறுத்தியது. களத்தில் வில்லியர்ஸ். வில்லியர் ஸுக்கு குயின்டன் எவ்வளவோ பரவாயில்லை. ரசிட்டின் பந்தில் அடுத்தடுத்து இரு சிக்சர்களை விளாசினார் வில்லியர்ஸ். ஆட்டமிழக்கவும் செய்தார். மறுமுனையில் சிக்சருடன் அரைச்சதம் கடந்தார் அம்லா. அம்லாவையும் அனுப்பினார் மொயின் அலி. பிளாசிஸ் பெரிதாக இல்லை. மில்லரும் டுமினியும் தமது பங்கிற்கு மிரட்டினர். மூன்று சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்தார் டுமினி. முடிவில் தென்னாபிரிக்கா 229-4. அதிகபட்சமாக அம்லா 58 ஓட்டங்களையும், டுமினி ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயின் அலி 2 இலக்குகளையும், ரசிட், வில்லி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
தென்னாபிரிக்காவின் அச்சுறுத்தலான பந்துவீச்சை சமாளித்து இந்த இலக்கை எட்டுவதென்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் கேல்ஸ். இங்கிலாந்து வாழ்வா? சாவா? முடிவில் களமிறங்கியுள்ளதென்பது முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே தெளிவானது. ரபாடா வீசிய அந்தப் பந்துப்பரிமாற்றத்தில் 21 ஓட்டங்களை விளாசினார் றோய். ஸ்ரெயினின் பந்தை முறையாகக் கவனித்தார் கேல்ஸ். 2 பந்துப்பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. 17 ஓட்டங்களுடன் கேல்ஸும், 15 ஓட்டங்களுடன் ஸ்ரோக்ஸும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்காவின் வெற்றி சற்று பிரகாசமானது. வந்தார் ரூட். ரூட் இவ்வாறு நொருக்குவாரா என்பது நேற்றுத்தான் உலகத்துக்கு தெரிந்திருக்கும். ஸ்ரெயினில் ஆரம்பித்து ரபாடா, மொறிஸ், தாகிர் என எந்தவொரு பந்து வீச்சாளரையும் விட்டுவைக்கவில்லை. 12.1 பந்துப்பரிமாற்றத்தில் 150 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. 47 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. றோய், மோர்கன் ஆட்டமிழந்து சென்றிருந்தாலும் ரூட் தொடர்ந்தும் அச்சுறுத்தினார். வான்கடே மைதானமே அல்லோலகல்லோலப்பட்டது. இருக்கையின் முனையில் ரசிகர்கள். 16.3 பந்துப்பரிமாற்றங்களில் 200 ஓட்டங்களை எட்டிய இங்கிலாந்து 2 பந்துகள் மீதமிருக்க 2 இலக்குகளால் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரூட் 83 ஓட்டங்களையும், றோய் 43 ஓட்டங்களையும், பட்லர் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா, அப்பொட் இருவரும் தலா இரு இலக்குகளையும், தாகிர், டுமினி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ரூட் ஆட்டநாயகனானார். (ம)

ஜெனரேட்டர் விற்பனைக்கு
25 KVA, 17.5KVA, 10KVA, 2.5KVA இன்னும் பல
ஜெனரேட்டர்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 077 7756904

SALE SALE
இன்று முதல் SALE
போடப்படுகிறது. தெரிவுகளுக்கு முந்துங்கள்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் 021 222 9881

புகைப்படப்பிரதியாக்கம்
4R-8/=
பாஸ்போட், விசா, N.I.C
அளவிலான
புகைப்படப்பிரதிகளையும்
கலர்பிறிண்ட் மற்றும்
டியுறோ.கிளாஸ் பிறேம்களையும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி, மானிப்பாய்.
T.P: 077 949 5065

CCTV
100% தொழில் சார்
செயன்முறை பயிற்சிநெறி

CCTV துறையில்
வல்லுனர் ஆவதற்கு இதோ
ஓர் அரிய வாய்ப்பு
Job Guaranteed*
(*Conditions Apply)
Next Batch : 26-March-2016
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
021-4926222, 076-7013060


யாழ் வீதிக்கண்காட்சியுடன்
புத்தாண்டு கொண்டாட்டம்
யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில்
மார்ச் 19ம் திகதி சனிக்கிழமை 10.00மணி முதல் 5.00மணி வரை

| | |
|---|---|
| Notebooks: | |
| HP Pavilion 15-ab203TU Notebook PC | Rs. 70,900.00 |
| HP Pavilion 15-ab204TU Notebook PC | Rs. 88,000.00 |
| HP Pavilion 15-ab205TU Notebook PC | Rs. 88,000.00 |
| HP Pavilion 15-ab206TU Notebook PC | Rs. 88,000.00 |
| HP Pavilion 15-ab202TX Notebook PC | Rs. 89,100.00 |
| HP Pavilion 15-ab203TX Notebook PC | Rs. 113,500.00 |
| Printers: | |
| HP Deskjet 1112 | Rs. 3,900.00 |
| HP Deskjet Ink Advantage 2135 AIO | Rs. 9,000.00 |
| HP Deskjet Ink Advantage 2645 AIO | Rs.14,500.00 |
| HP Laserjet Pro 200 M251n Colour | Rs.48,500.00 |
| HP Laserjet Pro Mfp M225dn | Rs.52,000.00 |
| HP Officejet Pro 8100 Eprinter | Rs.28,500.00 |
| HP Officejet 7110 Wide Format Eprinter (A3) | Rs.32,500.00 |
| HP P1102 laser printer | Rs.12,500.00 |

Monitors:
HP 19" Led Monitor Rs.12,500.00
HP 27" Elite Display Monitor Rs.49,000.00
HP 23" Monitors Rs.31,000.00

Original Supplies:
HP Toners From Rs.8,900.00
HP Cartridges From Rs.1,350.00

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை மார்ச் 22ந் திகதி வரை மட்டுமே.
NALIN Information Technologies Pvt Ltd
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. 021 222 1121, 021 222 1166, 077 766 7975, 077 766 7974, 021 222 4994, nalin@nit.lk
No. 116 G, K.K.S. Road, Chunakam. 021 224 2222, 077 714 0431, www.nit.lk, facebook/nalin_it

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2016
மருதடியான் மெய்யடியார்களே!
மானிப்பாய் மருதடி விநாயகரிற்கு நிகழும் மங்களகரமான மன்மத வருடம் பங்குனி மாதம் 9 ஆம் நாள் 22.03.2016 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் பகல் இரவு உற்சவங்கள் நடைபெற மருதடியான் திருவருள் கைகூடியுள்ளது.
நிகழ்வின் நியமங்கள்
★ பங்குனி மாதம் 8 ஆம் நாள் (21.03.2016) திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள்.
★ பங்குனி மாதம் 9 ஆம் நாள் (22.03.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு அபிஷேகம். மஹோற்சவ பூர்வாங்க கிரியைகள் பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற உற்சவம்.
★ பங்குனி மாதம் 18 ஆம் நாள் (31.03.2016) வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு மஞ்சத் திருவிழா.
★ பங்குனி மாதம் 29 ஆம் நாள் (11.04.2016) திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழா.
★ சித்திரை மாதம் முதலாம் நாள் (14.04.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழா.
★ சித்திரை மாதம் 2 ஆம் நாள் (15.04.2016) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவம்.
★ மாலை 4 மணிக்கு கொடியிறக்கம், திருவூஞ்சல், சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம்.
கொடியேற்றம், தேர், தீர்த்தம் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும்
★ முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம்
★ முற்பகல் 11 மணிக்கு பூஜை
★ முற்பகல் 11.15 மணிக்கு ஸ்தம்ப பூஜை
★ நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி உற்சவம்
★ மாலை 5 மணிக்கு பூஜை
★ மாலை 5.15 மணிக்கு ஸ்தம்ப பூஜை
★ மாலை 6 மணிக்கு வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதி உற்சவம்
(70072)(15.17)
மஹோற்சவ குரு தேவஸ்தான பிரதமகுரு சிவாகம கிரியா சிரோன்மணி
அராலியூர் சிவஸ்ரீ சிவஸ்வாமிக்குருக்கள் பரமேஸ்வர ஜெயக்குமாரக்குருக்கள்
தர்மகர்த்தா சபை — மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org